சிற்றிலக்கண விளக்கம்

(எஸ். எஸ். எல். வி. சங்கத்தார் வெளியிட்டுள்ள
பாடப்பட்டியின்படி,
எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
என்னும் ஐந்து பகுதிகளும் கூடியது.)

சென்னை
இராஜதானிக் கலாசாலை மாஜித் தமிழாசிரியரும்
'தமிழ்க்கடல்' வெளியீட்டு ஆசிரியரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

MADRAS-600 005

சென்னை
வி. குமாரசாமி—காயுடு ஸன்ஸ்
1932
[விலை 14 அணா
ரெஜிஸ்தர செய்தது]

Printed at
The 'Caxton Press,'
Madras.

முன்னுரை

சிற்றிலக்கண விளக்கம் — நான்கு, ஐந்து, ஆறும் பாரங்களுக்கு வேண்டிய இலக்கணப் பகுதிகளை விளக்கமாகக் கூறுவது. இதில், ஒவ்வொரு பகுதியும், இக்காலத்தில் வழங்கும் உதாரணங்களைக் காட்டிச் செப்பமாக எழுதப் பெற்றுளது.

மொழிகளின் தோற்றமும், அவை வளர்ந்த வரலாறும், தமிழ்மொழி பிறமொழிகளோடு கலந்த செய்தியும் முதற்கண் எழுதப்பட்டுள்ளன. அதன் இறுதியிற் கூறியபடி, உரைநடை இலக்கணம் ஒன்று தனியே எழுத வேண்டும் என்பது என் கருத்து. அதனை முயன்று எழுதி வருகின்றேன்; அது விரைவில் வெளி வரும்.

இந் நூலில் நான்காம் பாரத்திற்கு வேண்டிய இலக்கணப் பகுதிகளுக்கு *உடுக்குறியும், ஐந்தாம் பாரத்துக்கு வேண்டிய பகுதிகளுக்குச் †சூலக்குறியும் அமைக்கப் பெற்றுள்ளன; குறியிடப் பெறாதவை ஆறும் பாரத்துக்கு அமைவுடையவை.

'கடலகம்'
சாந்தோம்,
சென்னை.

கா. நமச்சிவாயன்



பொருளடக்கம்

I. எழுத்து

1. எழுத்து
2. தமிழ் எழுத்துக்கள்
3. முதலெழுத்து
4. சார்பெழுத்து
5. உயிரெழுத்து
6. உயிரெழுத்துக்களின் வைப்புமுறை
7. சுட்டெழுத்து
8. வினாவெழுத்து
9. மெய்யெழுத்து
10. இனவெழுத்து
11. பிறப்பு
12. உயிர்மெய்யெழுத்து
13. ஆய்தம்
14. குற்றியலுகரம்
15. குற்றியலிகரம்
16. மாத்திரை
17. மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள்
18. மொழிக்கு இடையில் ஒன்றோடொன்று இயைந்து நிற்கும் மெய்யெழுத்துக்கள்
19. இறுதிநிலை
20. போலி
21. எழுத்துக்கள் பெறுஞ் சாரியைகள்

II. பதம்

22. பதம்
23. பகாப்பதம், பகுபதம்
24. பகாப்பதம்
25. பகுபதம்
26. பகுபதவுறுப்புக்கள்
27. பண்பு முதல்நிலை
28. ஐம்பால் இறுதிநிலைகள்
29. இடைநிலை
30. காலங் காட்டும் இடை நிலைகள்
31. வினைமுற்று
32. பெயரெச்சம்
33. வினையெச்சம்
34. எவல், வியங்கோள்கள்

III. சொல்

35. சொல்
36. மொழி

37. சொல்லின்வகை
38. திசைச்சொல், வடசொல்
39. தற்பவம், தற்சமம்
40. வடமொழி எழுத்துக்கள் மாறுதல்
41. தத்திதாந்த நாமங்கள்
42. பெயர்ச்சொல்
43. காரண இடுகுறிப் பெயர்
44. பெயரின் வகைகள்
45. தொழிற்பெயர்
46. வினையாலணையும்பெயர்
47. பண்புப்பெயர்
48. இனப்பெயர்
49. குலப்பெயர்
50. அளவுப்பெயர்
51. பொதுப்பெயர்
52. ஆகுபெயர்
53. திணை
54. பால்
55. எண்
56. இடம்
57. வேற்றுமை
58. விளிக்கப் படாத பெயர்கள்
59. வேற்றுமையில் வேறு படும் பெயர்கள்
60. வினைச்சொல்
61. காலங்கள்
62. வினையின் வகைகள்
63 வினைமுற்று
64. தன்வினை, பிறவினை
65. செய்வினை, செயப்பாட்டு வினை
66. உடன்பாட்டுவினை, எதிர் மறைவினை
67. எச்சவினைகள்
68. பெயரெச்சங்கள்
69. வினையெச்சங்கள்
70. எவல்வினை
71. வியங்கோள்
72. முன்னிலை ஏவல் வியங் கோள்களின் வேறுபாடு
73. முற்றெச்சம்
74. இடைச்சொல்—ஏகாரம், ஓகாரம், உம், மற்று, கொல், தாம், வாளா, (சும்மா), அந்தோ (ஐயோ), கி, கீ, இச்சி, அம்மா, கொன், மற் றையது.
75. உரிச்சொல் — சால, உறு, தவ, நனி, கூர், கழி. கடி.

பொதுவியல்

76. இலக்கண முடையது, இலக்கணப் போலி, மரூஉ — இடக்க ரடக்கல், மங்கலம், குழூஉக்குறி

77. குறிப்பாகப் பொருளுணர்த்தும் சொற்கள்
78. வழுவமைதி
79. மாபு
80. இரட்டைக்கிளவி
81. புணர்ச்சி
82. வேற்றுமைப் புணர்ச்சி
83. அல்வழிப் புணர்ச்சி
84. புணர்ச்சியின் வகை
85. இயல்பு புணர்ச்சி
86. திரிபு புணர்ச்சி—தோன்றல், திரிதல், கெடுதல்
87. பல சில என்னுஞ் சொற்கள்
88. தேன் என்னுஞ்சொல்
89. இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சி
90. வடமொழிப் புணர்ச்சி

IV. நன்னூல் சூத்திரங்கள்

1. குற்றியலிகரம்
2. குற்றியலுகரம்
3. மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்கள்
4. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்
5. மொழியிறுதிப்போலி
6. பகாப்பதம்
7. பகுபதம்
8. பகுபதவுறுப்புக்கள்
9. ம்மையீற்றுப் பண்புப் பெயரின் விகாரம்
10. விகுதி
11. காலங் காட்டும் விகுதி
12. வழக்கு
13. குறிப்பும் வெளிப்படையுமாகிய சொற்கள்
14. ஆகுபெயர்
15. எழுவாய் வேற்றுமை
16. இரண்டாம் வேற்றுமை
17. மூன்றும் வேற்றுமை
18. நான்காம் வேற்றுமை
19. ஐந்தாம் வேற்றுமை
20. ஆறும் வேற்றுமை
21. ஏழாம் வேற்றுமை
22. விளியுருபுகளுக்குப் புறனடை
23. வினையெச்ச வாய்பாடுகள்
24. செய்யும் என்னும் வினை முற்றுக்குச் சிறப்பு விதி
25. திணை பால் வழுவமைதி
26. கால வழுவமைதி
27. ஏகார இடைச் சொல்
28. ஓகார இடைச் சொல்
29. உம்மை இடைச்சொல்
30. வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகள்
31. விகாரப் புணர்ச்சி

32. பொதுப் பெயர், உயர் திணைப்பெயர்களோடு நாற்கணமும் புணர்தல்
33. உயிர்முன் உயிர்புணர்தல்
34. விஞ்ஞொடும், சுட்டொடும் நாற்கணமும்புணர்தல்
35. குற்றியலுகரம் குற்றிய விகரங்களோடு உயிரும் யகரமும்புணர்தல்
36. உயிரீற்றின் முன் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்னும் பொது விதி
37. உயிரீற்றுச் சில மரப் பெயர்களோடு வல்லினம் புணர்தல்
38. பல சில என்பவற்றின் புணர்ச்சி
39. குற்றியலுகரத்தோடு வல்லினம் புணர்தல்
40. வேற்றுமையில் மிகாத குற்றியலுகரத்தொடர்
41. டகர றகர ஈற்றுக் குற்றியலுகரப் புணர்ச்சி
42. மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி
43. பூ என்னும் மொழிப் புணர்ச்சி
44. ஏகார ஓகார இடைச் சொற்களின் புணர்ச்சி
45. ஐகார ஈற்றின் முன் நாற்கணமும் புணர்தல்
46. யகரம் ஒழிந்த மெய்களின் முன் யகரம் புணர்தல்
47. ணகர னகர ஈற்றின் திரிபும் இயல்பும்
48. ணகர னகர வீறு கெடுதல்
49. தேன் என்னும் மொழிப் புணர்ச்சி
50. மகர மெய்யின் முன் நாற்கணமும் புணர்தல்
51 சில மகர மெய்யீற்றுக் குச் சிறப்பு விதி
52. நும், தம், எம், நம்என்னும் சொற்களின் புணர்ச்சி
53. அகம் என்னும் மொழிப் புணர்ச்சி
54. ய, ர, ழ என்னும் மெய் யீற்றின் முன் வல் லினம் புணர்தல்
55. லகர ளகர மெய்களின் முன் வல்லினமும், மெல்லினமும், இடையினமும் புணர்தல்
56. தனிக் குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் கெடுதல் முதலியன

57. அவ், இவ், உவ் என்னுஞ் சுட்டுப் பெயர்களின் புணர்ச்சி
58. வருமொழி முதலிலுள்ள தகர நகரங்கள் திரிதல்
59. யான், யாம், நீ, நீர் என்ப வற்றோடு உருபுபுணர்தல்
60. அத்துச் சாரியையின் அகரங் கெடுதல்
61. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப்புறனடை
62. உயிரளபெடை
63. ஐகார ஔகாரக் குறுக் கங்கள்

V. பொருளிலக்கணம்

அகப்பொருள்
புறப்பொருள்

VI. யாப்பிலக்கணம்

யாப்பு, செய்யுளின் உறுப் புக்கள், அளபெடை, குறுக் கம், அசை, சீர், தளை, அடி, தொடை, பாவும், பாவினமும்

VII. அணியிலக்கணம்

சொல்லணி
பொருளணி

IV, V, VI-ஆம் பாரங்களுக்கு வேண்டிய

பாடப் பகுதிகள்

IV-ஆம் பாரம்

தலைப்பு	பக்கம்	தலைப்பு	பக்கம்
எழுத்து		**பதம்**	
எழுத்து - - -	5	பதம் - - -	30
தமிழ் எழுத்துக்கள் -	5	பகாப்பதம் - - -	30
முதலெழுத்து - -	5	பகுபதம் - - -	31
சார்பெழுத்து - -	5	முதல்நிலை (பகுதி) -	34
உயிரெழுத்து - -	6	இறுதிநிலை (விகுதி) -	34
குற்றெழுத்து - -	6	இடைநிலை - - -	34
நெட்டெழுத்து - -	6	இறந்தகால இடைநிலை -	40
சுட்டெழுத்து - -	8	நிகழ்கால இடைநிலை -	40
வினாவெழுத்து - -	9	எதிர்கால இடைநிலை -	40
மெய்யெழுத்து - -	10		
வல்லினம் - - -	11	**சொல்**	
மெல்லினம் - -	11	சொல் - - -	44
இடையினம் - -	11	சொல்லின்வகை -	45
உயிர்மெய்யெழுத்து -	13	பெயர்ச்சொல் - -	45
ஆய்தம் - - -	13	வினைச்சொல் - -	45
குற்றியலுகரம் - -	16	இடைச்சொல் - -	45
குற்றியலிகரம் - -	18	திசைச்சொல் - -	46
போலி - - -	26	வடசொல் - -	46

தலைப்பு	பக்கம்
பெயர்	51
பெயர்ச்சொற்களின் வகைகள்	52
வினையாலணையும் பெயர்	56
பண்புப் பெயர்	56
கிளைப் பெயர்	57
சாதிப் பெயர்	57
அளவுப் பெயர்	57
பொதுப் பெயர்	57
ஆகு பெயர்	58
திணை	62
பால்	62
எண்	66
இடம்	69
வேற்றுமை	70
வேற்றுமையில் வேறுபடும் பெயர்கள்	77
வினைச்சொல்	80
காலங்கள்	81
வினையின் வகைகள்	82
வினைமுற்று	82
தன்வினை	83
பிறவினை	83
உடன்பாட்டுவினை	85
எதிர்மறைவினை	85
எச்சவினைகள்	86
பெயரெச்சங்கள்	87
வினையெச்சங்கள்	88
ஏவல் வினை	90
இடைச்சொல்	93
கொல்	96
தான்	96
வாளா	96
சும்மா	96
அந்தோ	97
ஐயோ	97
சீ	97
சீசீ	97
சிச்சி	97
உரிச்சொல்	98
மரபு	105

புணரியல்

புணர்ச்சி	106
புணர்ச்சியின் வகை	111
இயல்பு புணர்ச்சி	111
திரிபு புணர்ச்சி	111
தோன்றல்	111
திரிதல்	112
கெடுதல்	112

நன்னூல் சூத்திரம்

குற்றியலிகரம்	142
குற்றியலுகரம்	142
பகாப்பதம்	144
விகாரப்புணர்ச்சி	160
உயிர்மூன் உயிர் புணர்தல்	161

தலைப்பு	பக்கம்
குற்றியலுகரம், முற்றிய லுகரங்களோடு உயிரும் யகரமும் புணர்தல்	162
உயிரீற்றின்முன் வல்லினம்	163
பூ என்னும் மொழிப் புணர்ச்சி	166
யாம், நாம், முதலிய வற்றோடு உருபு புணர்தல்	173

பொருளிலக்கணம்

முதற் பொருள்	177
பொழுது	177
பெரும்பொழுது	177

V-ஆம் பாரம்

எழுத்து

அகச்சுட்டு	8
புறச்சுட்டு	8
அகவினா	9
புறவினா	9
இனவெழுத்து	11
மாத்திரை	18
மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள்	19
மொழிமுதற்போலி	27
மொழியிடைப்போலி	27
மொழிகடைப்போலி	28
பெயர்ச்சொற் பகுபதம்	31
வினைச்சொற் பகுபதம்	32
இடைச்சொற் பகுபதம்	32
உரிச்சொற் பகுபதம்	33
பகுபத உறுப்புக்கள்	33
சாரியை	35
சந்தி	35
விகாரம்	36
பண்பு முதல்நிலை	36

சொல்

தற்சமம்	46
தற்பவம்	46
பெயர்	51
இடுகுறிப்பெயர்	51
காரணப்பெயர்	51
காரண இடுகுறிப்பெயர்	52
முதலாகு பெயர்	58
சினையாகு பெயர்	58
இடவாகு பெயர்	59
தானியாகு பெயர்	59
காலவாகு பெயர்	59
பண்பாகு பெயர்	59
தொழிலாகு பெயர்	60

தலைப்பு	பக்கம்
ஆர் என்னும் விகுதி	67
அர் என்னும் விகுதி	68
மார் என்னும் விகுதி	68
எழுவாய் வேற்றுமை	70
இரண்டாம் வேற்றுமை	70
மூன்றும் வேற்றுமை	70
உடனிகழ்ச்சிப்பொருள்	72
ஐந்தாம் வேற்றுமை	72
எட்டாம் வேற்றுமை	75
விளிக்கப்படாத பெயர்கள்	76
வேற்றுமை யுருபுகளுக்கு வரும் சாரியைகள்	78
மகரவீற்றுப் பெயர்கட்கு வரும் சாரியை	78
எல்லாம் என்னுஞ் சொல்	78
எண்ணுப் பெயர்கள்	78
பல, சில	78
வேற்றுமை யுருபுகளை ஏற்காத பெயர்	79
தெரிநிலை வினை	80
குறிப்பு வினை	81
இறந்தகால வகைகள்	82
நிகழ்கால வகைகள்	82
பிறவினை விகுதிகள்	83
செய்வினை செயப்பாட்டு வினைகள்	84
குறிப்புப் பெயரெச்சம்	87
எதிர்மறைப் பெயரெச்சம்	87
செய்யா என்னும் வினையெச்சம்	89
சுறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்	89
குறிப்புவினையெச்சம்	90
எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்	90
வியங்கோள்	91
முன்னிலை, ஏவல், வியங்கோள் வினைகளின் வேறுபாடு	92
முற்றெச்சம்	92
ஏகார இடைச்சொல்	93
ஓகார இடைச்சொல்	93
கொன், மற்றையது	97
ஒருபொருளுணர்த்தும் உரிச்சொல்	98
பலபொருளுணர்த்தும் உரிச்சொல்	98
அறுவகை வழக்கு	99
குறிப்பிற் பொருளுணர்த்தும் சொற்கள்	101
வழுவமைதி	103
திணை வழுவமைதி	103
காலவழுவமைதி	104
இரட்டைக்கிளவி	105
வேற்றுமைப் புணர்ச்சி	106
அல்வழிப் புணர்ச்சி	113

தலைப்பு	பக்கம்
ட்ணரியல்	
இயல்பு - - -	112
தோன்றல் - - -	120
திரிதல் - - -	127
கெடுதல் - - -	130
நன்னூல் சூத்திரம்	
மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்கள் - -	143
மொழியிறுதிப்போலி -	144
பகுபதம் - - -	145
பகுபதவுறுப்புக்கள் -	145
மையீற்றுப் பண்புப் பெயரின் விகாரம் -	146
காலங்காட்டும் விகுதி -	147
வழக்கு - - -	149
குறிப்பும் வெளிப்படையு மாகிய சொற்கள் -	149
ஆகுபெயர் - -	150
எழுவாய் வேற்றுமை -	151
இரண்டாம் வேற்றுமை	151
ஐந்தாம் வேற்றுமை -	151
செய்யும் என் வினைமுற் றுக்குச் சிறப்புவிதி -	156
திணை பால் வழுவமைதி	157
காலவழுவமைதி -	157
ஏகார இடைச்சொல் -	158
ஓகார இடைச்சொல் -	158
வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகள் - -	159
பொதுப் பெயர் உயர் திணைப் பெயர்களோடு நாற்கணமும் புணர்தல்	160
வினுவொடும் சுட்டொடும் நாற்கணமும் புணர்தல்	162
உயிரீற்றுச் சில மாப் பெயர் களோடு வல்லினம் -	163
பல சில என்பவற்றின் புணர்ச்சி - -	164
குற்றியலுகரத்தோடு வல் லினம் புணர்தல் -	164
வேற்றுமையில்மிகாத குற்றிய லுகரத்தொடர்கள் -	165
டுகர றுகர ஈற்றுக் குற்றிய லுகரப் புணர்ச்சி -	165
ணகர னகர ஈறு -	167
தேன் என்னும் மொழிப் புணர்ச்சி - -	168
மகர மெய்யீற்றின் முன் நாற்கணமும் புணர்தல்	169
ய, ர, ழ மெய்யீற்றின்முன் வல்லினம் - -	170
உயிரள பெடை - -	175
பொருளிலக்கணம்	
சிறுபொழுது - -	178
உரிப்பொருள் - -	180

தலைப்பு	பக்கம்
வெட்சித்திணை	181
தும்பைத்திணை	181

யாப்பிலக்கணம்

யாப்பு	182
செய்யுள்	182
செய்யுளின் உறுப்புக்கள்	182
அளபெடை	182
உயிரளபெடை	183
மொழிமுதலளபெடை	183
மொழியிடையளபெடை	183
மொழிக்கடையளபெடை	184
அசை	187
சீர்	188
தளை	189
அடி	190

தலைப்பு	பக்கம்
தொடை	192
மோனைத்தொடை	193
குறள் வெண்பா	195
நேரிசை வெண்பா	196
ஆசிரிய விருத்தம்	197
கலிவிருத்தம்	198

அணியிலக்கணம்

அணி	200
பொருளணி	201
உவமையணி	201
உருவகவணி	202
தற்குறிப்பேற்றவணி	202
உயர்வு நவிற்சியணி	203
ஐயவணி	203
தன்மைநவிற்சியணி	204

VI-ஆம் பாரம்

எழுத்து

உயிரெழுத்துக்களின் வைப்பு முறை	6
பிறப்பு	12
மொழிகளினிடையில் இயைந்து நிற்கும் மெய்யெழுத்துக்கள்	22
இறுதிநிலை	26
எழுத்துக்கள் பெறுஞ் சாரியைகள்	29

பதம்

ஐம்பால் இறுதிநிலைகள்	37
காலம் காட்டும் இறுதி நிலைகள்	41

சொல்

மொழிகள்	44
தற்பவத்தில் வரும் மாறு பாடுகள்	47
வடமொழித் தத்திதாந்த நாமங்கள்	49

தலைப்பு	பக்கம்
தொழிற்பெயர் -	53
எண்ணலளவையாகுபெயர்	60
எடுத்தலளவையாகுபெயர்	60
முகத்தலளவையாகுபெயர்	60
நீட்டலளவையாகுபெயர்	60
சொல்லாகுபெயர் -	61
கருவியாகுபெயர் -	61
காரியவாகுபெயர் -	61
கருத்தாவாகுபெயர் -	62
உவமையாகுபெயர் -	62
மூன்றும் வேற்றுமை -	71
நான்காம் வேற்றுமை -	72
ஆறும் வேற்றுமை -	73
ஏழாம் வேற்றுமை -	74
வேற்றுமை யுருபுகள் கொண்டு முடியுஞ் சொற்கள் -	79
உம் என்னும் இடைச் சொல் - -	95
மற்று - - -	96
பால்வழுவமைதி - -	103
இடவழுவமைதி - -	104

புணரியல்

இயல்பு - - -	112
தோன்றல் - - -	120
திரிதல் - - -	129
கெடுதல் - - -	133
வடமொழிப் புணர்ச்சி -	139

தலைப்பு	பக்கம்
நன்னூல் சூத்திரம்	
மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்	143
விகுதி - - -	146
மூன்றும் வேற்றுமை -	152
நான்காம் வேற்றுமை -	152
ஆறும் வேற்றுமை -	152
ஏழாம் வேற்றுமை -	155
விளியுருபுகளுக்குப் புறனடை - -	155
வினையெச்ச வாய்பாடுகள்	156
உம்மை இடைச்சொல் -	158
மென்றொடர்க் குற்றிய லுகரப் புணர்ச்சி -	165
ஏகார ஓகார இடைச் சொற்களின் புணர்ச்சி	166
ஐகார ஈறு - -	166
யகரம் ஒழிந்த மெய்களின் முன் யகரம் புணர்தல்	167
ணகர னகர ஈறு கெடுதல்	168
சில மகர மெய்யீற்றுக் குச் சிறப்பு விதி -	169
நும் தம் முதலிய சொற் களின் புணர்ச்சி -	170
அகம் என்னும் மொழிப் புணர்ச்சி - -	170
லகர ளகர மெய்யீறுகள்	171
தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் -	171

தலைப்பு	பக்கம்
அவ், இவ், உவ் என்னும் சுட்டுப் பெயர்களின் புணர்ச்சி	172
வருமொழித் தகர நகரங்கள் திரிதல்	172
அத்துச் சாரியையின் அகரம் கெடுதல்	174
இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புற னடை	174
ஐகார ஔகாரக் குறுக் கங்கள்	175
பொருளிலக்கணம்	
அகப்பொருள்	176
கருப்பொருள்	178
வஞ்சித்திணை	181
உழிஞைத்திணை	181
வாகைத்திணை	181
காஞ்சித்திணை	181
பாடாண்திணை	181
யாப்பிலக்கனம்	
இன்னிசையளபெடை	184
சொல்லிசையளபெடை	184
இயற்கையளபெடை	185
ஒற்றளபெடை	185
ஐகாரக்குறுக்கம்	185
ஔகாரக்குறுக்கம்	186
மகரக்குறுக்கம்	187
இன்னிசையளபெடை	196
ஆசிரியப்பா	196
கலிப்பா	197
வஞ்சிப்பா	197
கலித்துறை	197
கட்டளைக் கலித்துறை	198
அணியிலக்கணம்	
சொல்லணி	200
யமகம்	200
திரிபு	200
தேற்றக்காட்டுவமையணி	202
இல்பொருளுவமையணி	202
வேற்றுமையணி	203
வேற்றுப் பொருள் வைப்பணி	203
பிறிதினவிற்சியணி	204
வஞ்சப்புகழ்ச்சியணி	204
நிரல்நிறையணி	205
எதிர்நிலையணி	205
கருத்துடை யடை மொழியணி	206
சேர்வையணி	206
கலவையணி	206

சிற்றிலக்கண விளக்கம்

இவ்வுலகில் வாழும் மாந்தர் பல திறப்படுவர். அவருள் ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு மொழியை வழங்குகின்றனர். அதனால், இவ்வுலகில் பன்னூறு மொழிகள் பரவி வழங்குவனவாயின. ஆயினும், அவை யாவற்றையும் இரண்டே பகுதியில் அடக்கிக் கூறலாம்; அவை — **பேச்சு மொழி, எழுத்து மொழி** என்பனவாம். **பேச்சுமொழியாவது** — வழக்கில் மட்டும் அமைந்துள்ள மொழியாம். தொதவர், இருளர், குறும்பர் முதலியோர் வழங்கும் மொழிகள், இன்றும் பேச்சளவிலேயே நிற்கின்றன. **எழுத்துமொழியாவது** — முதலில் பேச்சு மொழியா யிருந்து, பின்னர், எழுதவல்ல மொழியாக இயல்வதாகும். இதனில் — தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் அடங்கும்.

சில மொழிகள், தாம் வழங்கப்பெறும் மாந்தரால் பெயர் பெறும்; தமிழ், ஆங்கிலம் முதலியன. சில மொழிகள், தாம் வழங்கப்பெறும் நாடுகளைக்கொண்டு பெயர்பெறும்; மலையாளம், கன்னடம், சீனம் முதலியன.

இத்தகைய மொழிகளை அறிஞர் ஆராய்ந்து வகுத்துத் **தனிமொழி** எனவும், **வழிமொழி** எனவும் இரண்டு பகுதியில் அடக்கிக் காட்டுவர். **தனிமொழியாவது** — வேறொரு மொழியின் துணையின்றித் தானே தனித்து

இயங்கவல்ல மொழியாம். **வழிமொழி**யாவது — ஒரு தனி மொழியைத் தன் தாய் மொழியாகக் கொண்டு, அதினின்றும் தோன்றி இயங்க வல்ல மொழியாம்.

இவ் வகையில் நந்தம் **தமிழ்மொழியும் ஒரு தனிமொழியே**யாகும். தமிழ்மொழியினின்றும் பிறந்த வழிமொழிகள் — தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் என்பனவாம்.

தமிழ்மொழி, **கொடுந் தமிழ்** எனவும், **செந்தமிழ்** எனவும் இரு வகைப்படும். **கொடுந்தமிழா**வது — திருத்தமடையாத தமிழ். **செந்தமிழா**வது — திருத்தமடைந்த தமிழ். இது, வடமொழியை ஸம்ஸ்கிருதம் என்பது போன்றது. தமிழ்மொழியை அகத்தியனார் படைத்துத் தந்தார் என்பர் ஒரு சாரார். அஃது உயர்வுநவிற்சியே யன்றி, உண்மைநவிற்சி யாகாது.

தமிழ்மொழி, இன்னகாலத்தேதான் தோன்றியது என்று சொல்ல எவராலும் இயலாது. ஒரு மொழி, மூதலில் — கை, கண், வாய் முதலிய உறுப்புக்களின் சைகை யளவி லிருந்து, பின்பு சொற்கள் தோன்றப் பெறும்; அதன் பின்னர், சிறு சிறு சொற்றொடர்களை எய்தும்; மற்றும் அவை பெருகி, ஒரு மொழியின் இயல்பை அடையப்பெறும். அம் மொழி, நெடுநாள்-வரையில் பேச்சு வழக்கிலிருந்து, பின்னர் எழுத்து வழக்கை யடையும்; அதன் பின்னரே, அம்மொழியில் செய்யுளும் இயலும் இயற்றப்பெறும்.

நந்தம் தமிழ்மொழியும் இவ் வகையில் வளர்ச்சி யடைந்து, இக்காலத்தே இளமைப் பருவம் எய்தி யிருக்கின்றது. இம்மொழிக்கு வேண்டிய செய்யுளும் இயலும் செப்பமாக அமைந்துள்ளன.

மிகப் பண்டைக்காலத்தே தனியாக வழங்கிவந்த நந்தம் தமிழ்மொழி, பின்பு பிறமொழிகளோடு கலக்கத் தொடங்கிற்று. நமக்குத் தெரிந்தவரையில், தமிழ்மொழி முதன்முதலில் வடமொழிக் கலப்பை அடைந்தது. அதனாலேயே தொல்காப்பியத்திலும் சில வட சொற்கள் வந்துள்ளன; தொல்காப்பியனார் வடசொல்லுக்கும் இலக்கணம் வகுத்தனர். அதன் பிற்காலத்தே, தமிழர், தம் மொழியின் பல சொற்களை விட்டுவிட்டு, அவற்றிற்கு வடசொல்லையே வழங்கத் தொடங்கினர். **மொழி** யென்பதைப் **பாஷை** எனவும், **இயல்** என்பதை **இலக்கணம்** எனவும், **செய்யுள்** என்பதை **இலக்கியம்** எனவும், ஞாயிறு என்பதைச் **சூரியன்** எனவும், **திங்கள்** என்பதைச் **சந்திரன்** எனவும் வழங்கலாயினர். அதனால், இக்காலத்தே தமிழ்ச்சொற்கள் அருகியும், வடமொழிச் சொற்கள் பெருகியும் வழங்கலாயின. பெரும்பாலான தமிழ்ச் சொற்களுக்கு விளங்கப் பொருள்கூறும்போது, வடமொழிச் சொற்களே வழக்கத்திற்கு வருகின்றன. **மகிழ்ச்சி-சந்தோஷம், அறம்-தருமம்** என்பன முதலாயின.

ஒரு மொழியின்கண் வேறு மொழிகள் வந்து கலத்தலால், அம் மொழிக்கு எவ்வாற்றானும் இழிவு ஏற்பட்டாது. மொழிகள் வளர்வதென்றால் என்ன? அவை, பிறமொழிகளோடு கலந்து, தம்மிடத்தில்லாத கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் மேற்கொள்வதேயன்றே? அவ் வகையில் நந்தம் தமிழ் மொழி — அரசியல், சமயவுணர்ச்சி, பண்டமாற்று முதலியவற்றால் பிறமொழிகளோடு கலந்து மேற்கொண்டுள்ள சொற்கள் எண்ணிறந்தனவாம். ஆகவே, தமிழ்மொழி வடமொழியோடு பெரிதுங் கலப்புற்று

வழங்குவதாயிற்று ; அன்றியும், அரபியம், எகிப்தம், கிரேக்கம் முதலிய மொழிகளின் சொற்களையும் ஏற்று, அவற்றைத் தன் இயல்புக்கேற்ப அமைத்துக்கொண்டது. இக்காலத்தே ஆங்கிலமொழி அளவற்றனவாகத் தமிழில் ஏறிவிட்டன ; அவை பெரும்பான்மையும் உலக வழக்கில் பயின்று வருகின்றன. இனி, அவை செய்யுளிலும் இடம்பெறும்போலும் !

இவ்வாறாக வளர்ந்து வந்த தமிழ்மொழி, தன் இலக்கணத்தில்மட்டும் சிறிதும் மாறுபடாமல், ஓரே நிலையில் நிற்கிறது. நன்னூல் முதலிய இலக்கணங்களில் புதியன புகுதலாகச் சிற்சில மாறுபாடுகள் தோன்றியிருப்பினும், அவை இக்காலத்தே மொழிவளர்ச்சிக்கு ஏற்ற அளவு போதியனவாகத் தோன்றவில்லை.

இதுகாறும் தமிழ்மொழியில் ஏற்பட்டுள்ள விதிகள் அனைத்தும், பெரும்பாலும் செய்யுள் நடைக்கே அமைவுடையனவாகும் ; உரைநடைக்கான விதிகள் இன்னும் திட்டமாக ஏற்படவில்லை. அவ் விருவகை விதிகளையுந் தழுவிய உரைநடை இலக்கணம் ஒன்று இக்காலத்தே இன்றியமையாததாகும்.

தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த அறிஞர், அம் மொழியைப் பலவகையிலும் ஆராய்ந்து, மிகவும் நுட்பமாக அமைத்திருக்கின்றனர் ; எழுத்துக்களுக்குப் பெயர் வகுத்த காலத்தே, அவற்றை, மக்களின் உயிர், மெய் நிலைகளுக்கு ஒப்பவே அமைத்துள்ளார். அஃது — உயிர், மெய், உயிர்மெய் என்னும் பெயர்களை நோக்க நன்கு விளங்கும்.

I. எழுத்து

*1. எழுத்தாவது, மொழிக்குக் காரணமா யிருக்-கும் ஒலி. அஃது எழுதப்படுவதனால் எழுத்து எனப் பெயர் பெறும். எழுத்து என்னும் இப் பெயர், தமிழ் மொழிக்கு எழுத்து ஏற்பட்ட காலத்தில் தோன்றி யிருத்தல் வேண்டும். எழுத்துக்கு — **ஒலிவடிவு, வரிவடிவு** என இருவகை வடிவுகள் உண்டு. ஒலிப்-பது - ஒலிவடிவு, எழுதுவது - வரிவடிவு.

*2. **தமிழ் எழுத்துக்கள்** — I. முதலெழுத்து என்றும், II. சார்பெழுத்து என்றும் இரு வகைப்படும்.

*3. **முதலெழுத்தாவது**, முதன்மையான எழுத்-தாம். அஃது இருவகைப்படும் :

1. உயிரெழுத்து
2. மெய்யெழுத்து

என்பனவாம்.

*4. **சார்பெழுத்தாவது**, முதலெழுத்தைச் சார்ந்து வரும் எழுத்தாம். அது, நான்கு வகைப்படும் :

1. உயிர்மெய்யெழுத்து
2. ஆய்தவெழுத்து
3. குற்றியலிகரம்
4. குற்றியலுகரம்

என்பனவாம்.

I. முதலெழுத்து

1. உயிரெழுத்து

5. பெயரும், எண்ணும் :

*(1) **உயிரெழுத்தாவது**, பிற எழுத்துக்களின் துணையின்றித் தானே தனித்து ஒலிக்கவல்ல சிறப்பினையுடையதாம். அஃது, உயிர்போலச் சிறந்து நிற்றலின் உயிர் எனப்பட்டது.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என உயிரெழுத்துக்கள் பன்னிரண்டாம். அவற்றுள்,

*(2) அ, இ, உ,எ,ஒ என இவ்வைந்தும் குறிலாம். (குறுகிய ஒலி யுடையன.) இவை குற்றெழுத்து எனவும் படும்.

*(3) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என இவ் வேழும் நெடிலாம். (நீண்ட ஒலியுடையன.) இவை நெட்டெழுத்து எனவும் படும்.

6. உயிரெழுத்துக்களின் வைப்பு முறை :

அகரம், ஒரு முயற்சியும் இன்றி, வாயைத் திறந்த மாத்திரத்தானே பிறக்கும் சிறப்பியல்பு நோக்கி, முதலில் வைக்கப்பட்டது.

அகரத்தின் நீட்சியே ஆகாரம் ஆதலின், **ஆகாரம்** அகரத்தின்பின் வைக்கப்பட்டது.

இகரம், அகரத்திற்கு உரிய வாய்திறத்தலோடு, மேற்பல்லை அடிநா விளிம்பு பொருந்தப் பிறக்கும் எழுத்தாகலின், ஆகாரத்திற்குப்பின் வைக்கப்பட்டது.

இகரத்தின் நீட்சியே ஈகாரம் ஆதலின், **ஈகாரம்** இகரத்தின்பின் வைக்கப்பட்டது.

உகரம், அகரத்திற்குரிய வாய்திறத்தலோடு, இதழ் குவித்துக் கூறப் பிறத்தலால், ஈகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

உகரத்தின் நீட்சியே ஊகார மாதலின், **ஊகாரம்** உகரத்தின்பின் வைக்கப்பட்டது.

எகரம், இகரம் பிறக்குமிடத்திலேயே பிறத்தலினும், இகர ஒலியின் வேறுபாடே யாதலினும், ஊகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

எகரத்தின் நீட்சியே ஏகார மாதலின், **ஏகாரம்** எகரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஐகாரம், அகர இகரங்கள் ஒத்து இசைக்கப் பிறப்பதனால், ஏகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஓகரம், உகரம் பிறக்குமிடத்திலேயே பிறத்தலினும், உகர ஒலியின் வேறுபாடே யாதலினும், ஐகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஓகரத்தின் நீட்சியே ஓகார மாதலால், **ஓகாரம்** ஓகரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஔகாரம், அகர உகரங்கள் ஒத்து இசைக்கப் பிறத்தலால், ஓகாரத்தின்பின் வைக்கப்பட்டது.

ஆகவே, இப் பன்னீருயிர்களும் முறையானே ஒன்றன் பின் ஒன்றுக அமைக்கப்பட் டிருத்தல் அறிக.

[ஐகார ஔகாரங்கள் தனி யெழுத்துக்கள் அல்ல ; இவ் வெழுத்துக்கள் இன்றியே தமிழ்மொழி நடை பெறுதல் கூடும்.]

***7. சுட்டெழுத்து :**

அ, இ, உ இம் மூன்றுஞ் சுட்டெழுத்துக்களாம். அவை — ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும் பொழுதே சுட்டெழுத்து எனப்படும்.

அ — அவன், அப் பலகை.
இ — இவன், இவ் வீடு.
உ — உவன், உப் பிள்ளை.

†சுட்டு — (1) அகச்சுட்டு, (2) புறச்சுட்டு என இருவகைத்தாம்.

†(1) **அகச்சுட்டு :** அ, இ, உ என்பவற்றில் ஒன்று, யாதானும் ஒரு சொல்லின் **அகத்தே** நின்று சுட்டுப் பொருளை உணர்த்திவரின், அகச்சுட்டாம்.

அவன்	அவள்	அவர்	அது	அவை	*அவ்
இவன்	இவள்	இவர்	இது	இவை	இவ்
உவன்	உவள்	உவர்	உது	உவை	உவ்

இங்கு, அகரம் முதலிய மூன்றும், சொல்லின் அகத்தே நின்று சுட்டுப்பொருளை உணர்த்தினமையின், அகச் சுட்டாயவாறு காண்க.

†(2) **புறச்சுட்டு :** அ, இ, உ என்னும் எழுத்துக்களில் யாதானும் ஒன்று, ஒரு சொல்லுக்குப் **புறத்தே** நின்று சுட்டுப்பொருளை உணர்த்திவரின், புறச்சுட்டாம்.

அம் மனிதன் இவ் வீடு உப் பக்கம்

இங்கு, அகரம் முதலிய மூன்றும், மனிதன், வீடு முதலிய சொற்களின் புறத்தே நின்று சுட்டுப்பொருளை உணர்த்தினமையின், புறச்சுட்டாயவாறு காண்க.

---

* அவ் - அவை.

அகரம் சேய்மையில் (தூரத்தில்) உள்ள பொருளையும், இகரம் அண்மையில் (அருகில்) உள்ள பொருளையும், உகரம் இடையில் (நடுவில்), அல்லது, மேலிடத்தில் உள்ள பொருளையும் சுட்டும். இவற்றுள் உகரம், உலக வழக்கில் வருதல் இல்லை; செய்யுளில் வரும்.

'ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட **உவனைக்** கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன்' (காஞ்சிப்புராணம்)

என்பதிற் காண்க. இங்கு, **உவன்** என்பது, **அவன்** என்னும் பொருளில் வந்தது.

அகர இகரங்கள், **அந்த, இந்த** எனத் திரிந்தும் வரும்.

அந்த வீடு **இந்தப் பையன்**

*8. வினவெழுத்து :

வினவுதற்குரிய எழுத்து, வினவெழுத்தாகும். அவை — ஆ, எ, ஏ, ஓ, யா என்பன. இவற்றுள்,

(1) எ, யா இரண்டும் மொழிக்கு முதலிலேயே வரும்.
(2) ஆ, ஓ இரண்டும் மொழிக்கு ஈற்றிலேயே வரும்.
(3) ஏ ஒன்றுமட்டும் அவ் விரண்டிடத்தும் வரும்.

†வினா — (1) **அகவினா**, (2) **புறவினா** என இருவகைத்தாம்.

†(1) **அகவினா** — வினா வெழுத்துக்களில் ஒன்று, சொல்லின் அகத்தே நின்று வினாப்பொருளைத் தருவது.

†(2) **புறவினா** — வினா வெழுத்துக்களில் ஒன்று, சொல்லின் புறத்தே நின்று வினாப்பொருளைத் தருவது.

(1) எவன் யாவன்
எவள் யாவள்
எவர் யாவர்
எது யாது
எவை யாவை

எகரமும் யாவும், சொல்லின் அகத்தே நின்று வினுப்பொருள் தந்ததனுல், அகவினு ஆயின.

எப் புலவன்
யாங் ஙனம்

எகரமும் யாவும், சொல்லின் புறத்தேநின்று வினுப்பொருள் தந்ததனுல், புறவினு ஆயின.

(2) அவனு செய்தான்?
முருகனே அருளினுன்?

ஆவும் ஓவும், மொழியீற்றில் நின்று புறவினு ஆயின.

(3) ஏவன்
ஏது

ஏகாரம், சொல்லின் அகத்தே நின்று வினுப் பொருள் தந்ததனுல், அகவினு ஆயிற்று.

அவன்தானே போனுன்?
நீயே வந்தாய்?

ஏகாரம், சொல்லின் புறத்தே நின்று வினுப் பொருள் தந்ததனுல், புறவினு ஆயிற்று.

ஈற்றில் வரும் வினுவெழுத்துக்கள் புறவினுவாகவே நிற்கும்; அகவினுவாக வாரா என அறிக.

ஏகர வினு, எந்த என்றும் திரிந்து வரும்.

எந்த வீடு

2. மெய்யெழுத்து

*9. மெய்யெழுத்தாவது — உயிரின் துணையின்றி இயங்காத எழுத்தாம். மெய்போல நிற்றலின் மெய் எனப்பட்டது. (மெய் - உடல்); மெய் - ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப் பதினெட்டும் மெய்யெழுத்துக்கள்.

மெய்கள் மூவகையாகப் பிரிக்கப்படும். அவை — வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாம்.

வல்லென்ற ஒலி (கடினமான ஓசை)யுடையதனுல் வல்லினம் முதலினும், மெல்லென்ற ஒலி (மிருதுவான ஓசை)யுடையதனுல் மெல்லினம் வல்லின எழுத்துக்களே அடுத்தும், இவ்விரண்டிற்கும் இடைநிகர்த்தாய ஒலியுடையதனுல் இடையினம் இறுதியிலும் வைக்கப்பட்டுள்ளன. றகர னகரங்கள், தமிழ்மொழியின் சிறப்பெழுத்துக்கள் என்பது தோன்ற, அவை எல்லாவற்றிற்கும் இறுதியில் வைக்கப்பட்டன.

*(1) **வல்லினம்** : க், ச், ட், த், ப், ற் இவ்வாறும் வல்லின மெய்கள்.

*(2) **மெல்லினம்** : ங், ஞ், ண், ந், ம், ன் இவ்வாறும் மெல்லின மெய்கள்.

*(3) **இடையினம்** : ய், ர், ல், வ், ழ், ள் இவ்வாறும் இடையின மெய்கள்.

தமிழெழுத்துக்களெல்லாம் இனிய மெல்லோசையுடையன ; ஆதலின், இங்கு வல்லினம் எனப்படுவன, மற்றைய மெல்லின இடையின மெய்களே நோக்க வன்மையாதலே யன்றி, வடமொழியில் வல்லோசையுடைய எழுத்துக்களைப் போன்றன அல்ல.

†10. இனவெழுத்து :

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும், 1. பிறப்பிடம், 2. ஒலித்தற்குரிய முயற்சி, 3. பொருள், 4. வடிவு முதலியவற்றுள், சிலவற்றின் ஒப்புமையால் இனமாகப் பிரிக்கப்படும்.

உயிரெழுத்துக்களுள் குறிலுக்கு நெடிலும், மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்துக்கு மெல்லெழுத்தும் முறையே இனமாம். இடையினம் ஆறும் ஓரினமாகக் கொள்ளப்படும். உயிர்களுள், ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு, உகரமும் இனமாகக்கொள்ளுதல் வழக்கு. இனம் ஆமாறு :

உயிர்		மெய்		
நெடில்	குறில்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
ஆ —	அ			
ஈ —	இ	க —	ங	ய
ஊ —	உ	ச —	ஞ	ர
ஏ —	எ	ட —	ண	ல
ஐ —	இ	த —	ந	வ
ஓ —	ஒ	ப —	ம	ழ
ஔ —	உ	ற —	ன	ள
				ஆறும் ஓர் இனம்

ஐகார ஔகாரங்கள், ஈருயிர்கள் இணைந்து இசைக்கப் பிறக்கும் எழுத்தாகலின், தனியே, ஒவ்வோர் இனவெழுத்தின்றி நெடிலாக நின்றன; ஆயினும், ஓசை ஒற்றுமைபற்றி, இகர உகரங்கள் அவற்றிற்கு முறையே இனமாகக் கொள்ளப்பட்டன.

11. பிறப்பு :

உயிரெழுத்தும் இடையெழுத்தும் மிடற்றினின்றும், மெல்லெழுத்து மூக்கினின்றும், வல்லெழுத்து மார்பினின்றும் பிறக்கின்றன.

II. சார்பெழுத்து

---

1. உயிர்மெய்யெழுத்து

***12.** உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து, உயிர்மெய் யெழுத்தாம். ஒவ்வொரு மெய்யின்மேலும் பன்னீருயிரும் ஏறி வருவதனால், (18 × 12 = 216) இருநூற்றுப் பதினாறு உயிர்-மெய் யெழுத்துக்கள் உண்டாகின்றன. அவற்றுள் (18 × 5 = 90) உயிர்மெய்க் குறில் தொண்ணூறும், (18 × 7 = 126) உயிர்மெய்-நெடில் நூற்றிருபத்தாறும் ஆயின. உயிர்மெய் எனப் பெயர் வழங்கினும், ஒலிக்கும்போது, மெய் முன்னும், உயிர் பின்னுமாக நின்று ஒலிக்கப்படும். (இதன் விரிவை 14, 15 ஆம் பக்கங்களிற் காண்க).

2. ஆய்தவெழுத்து

***13.** ஆய்தம், ஒரு மொழியில் தனிக்குற்றெழுத்துக்கு முன்னும், யாதேனும் ஒரு வல்லின உயிர்-மெய்க்குப் பின்னும் வரும்.

அஃது எஃகு வெஃகாமை பஃறி

இனி, லகார, ளகார மெய்யீற்றுச் சொற்களின் முன், தகார முதன்மொழி வரும்போது, அந்த லகார ளகார மெய்கள் ஆய்தவெழுத்தாகத் திரியும்.

அல் + தினை = அஃறினை
முள் + தீது = முஃடீது

உயிர் - மெய் எழுத்து — 216.

மெய் / உயிர்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க் +	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங் +	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச் +	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ் +	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட் +	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண் +	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த் +	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந் +	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப் +	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம் +	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய் +	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர் +	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல் +	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ் +	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ் +	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள் +	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற் +	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன் +	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

உயிர் - மெய்க் குறில் (18×5) 90 + உயிர் - மெய் நெடில் (18×7) 126 = 216

அ	இ	உ	எ	ஒ	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
க	கி	கு	கெ	கொ	கா	கீ	கூ	கே	கை	கோ	கௌ
ங	ஙி	ஙு	ஙெ	ஙொ	ஙா	ஙீ	ஙூ	ஙே	ஙை	ஙோ	ஙௌ
ச	சி	சு	செ	சொ	சா	சீ	சூ	சே	சை	சோ	சௌ
ஞ	ஞி	ஞு	ஞெ	ஞொ	ஞா	ஞீ	ஞூ	ஞே	ஞை	ஞோ	ஞௌ
ட	டி	டு	டெ	டொ	டா	டீ	டூ	டே	டை	டோ	டௌ
ண	ணி	ணு	ணெ	ணொ	ணா	ணீ	ணூ	ணே	ணை	ணோ	ணௌ
த	தி	து	தெ	தொ	தா	தீ	தூ	தே	தை	தோ	தௌ
ந	நி	நு	நெ	நொ	நா	நீ	நூ	நே	நை	நோ	நௌ
ப	பி	பு	பெ	பொ	பா	பீ	பூ	பே	பை	போ	பௌ
ம	மி	மு	மெ	மொ	மா	மீ	மூ	மே	மை	மோ	மௌ
ய	யி	யு	யெ	யொ	யா	யீ	யூ	யே	யை	யோ	யௌ
ர	ரி	ரு	ரெ	ரொ	ரா	ரீ	ரூ	ரே	ரை	ரோ	ரௌ
ல	லி	லு	லெ	லொ	லா	லீ	லூ	லே	லை	லோ	லௌ
வ	வி	வு	வெ	வொ	வா	வீ	வூ	வே	வை	வோ	வௌ
ழ	ழி	ழு	ழெ	ழொ	ழா	ழீ	ழூ	ழே	ழை	ழோ	ழௌ
ள	ளி	ளு	ளெ	ளொ	ளா	ளீ	ளூ	ளே	ளை	ளோ	ளௌ
ற	றி	று	றெ	றொ	றா	றீ	றூ	றே	றை	றோ	றௌ
ன	னி	னு	னெ	னொ	னா	னீ	னூ	னே	னை	னோ	னௌ

3. குற்றியலுகரம்

14. தனிக்குறிலே அடுத்திராத வல்லெழுத்தை ஊர்ந்து வரும் உகரம், குற்றியலுகரமாம்.

குற்றியலுகரத்தைத் தெரிந்துகொள்ள இரண்டு முறைகள் உண்டு. அவையாவன :

(i) ஒரு சொல்லின் ஈற்றில், கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லெழுத்துக்களில் ஏதேனும் ஒன்று நிற்கவேண்டும்.

(ii) அந்த ஈற்றெழுத்துக்குமேல், ஒரு குறில்-மட்டும் இருத்தல் கூடாது.

கு — சுக்கு	டு — பட்டு	பு — கொம்பு
சு — பஞ்சு	து — இருபது	று — கயிறு

குற்றியலுகரம், ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி, **ஆறு தொடர்**களாகப் பிரிக்கப்படும். அவையாவன :

(1) ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாக வல்லின மெய்களில் ஏதேனும் ஒன்று வரின், அது **வன்றொடர்க் குற்றியலுகரமாம்.**

க் — பாக்கு	ட் — எட்டு	ப் — உப்பு
ச் — கச்சு	த் — பத்து	ற் — புற்று

(2) ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாக மெல்லின மெய்களில் ஏதேனும் ஒன்று வரின், அது **மென்றொடர்க் குற்றியலுகரமாம்.**

ங் — பங்கு	ண் — பண்டு	ம் — வம்பு
ஞ் — பஞ்சு	ந் — பந்து	ன் — ஒன்று

(3) ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாக இடையின மெய்களில் ஏதேனும் ஒன்று வரின், அஃது இடைத் தோடர்க் குற்றியலுகரமாம்.

ய் — நொய்து	வ் — ——
ர் — மார்பு	ழ் — வீழ்து
ல் — சால்பு	ள் — தெள்கு

(4) ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாக ஆய்தம் வரின், அஃது ஆய்தத்தோடர்க் குற்றியலுகரமாம்.

அஃது இஃது எஃகு

(5) ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தாக உயிரெழுத்து வரின், அஃது உயிர்த்தோடர்க் குற்றியலுகரமாம்.

வாகு	படிறு
தராசு	இடையீடு

(6) ஈற்றெழுத்துக்கு அயலில் ஒரு நெட்டெழுத்து வரின், அது நெடிற்றோடர்க் குற்றியலுகரமாம்.

ஆடு	ஊது	ஐது
ஈடு	ஏடு	ஓடு

குறிப்பு — வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் இந் நான்கிலும், ஈற்றெழுத்துக்கு அயல் எழுத்து, புள்ளி எழுத்தாகவே இருக்கும்.

நெடிற்றொடர், இரண்டே எழுத்தில் வரும்.

உயிர்த்தொடர், இரண்டு எழுத்துக்களுக்கு மேற்பட்டு இருக்கும்; ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து நெடிலாக இருப்பினும், அச்சொல், இரண்டெழுத்துக்கு மேற்பட்டதாக இருந்தால், அதை உயிர்த்தொடராகவே கொள்ளுதல் வேண்டும்.

4. குற்றியலிகரம்

***15.** குற்றியலுகரத்திற்குமுன் யகரம்வரின், அவ்வுகரம் இகரமாகத்திரியும்; அந்த இகரம் குற்றியலிகரமாம்.

நாகு + யாது = நாகியாது
எஃகு + யாது = எஃகியாது

இவ்வாறு வரும் இகரமே யன்றி, மியா என்னும் அசைச்சொல்லிலுள்ள மி என்பதன் இகரமும், குறுகி ஒலித்தலினால் குற்றியலிகரமாகும்.

†16. மாத்திரை : ஒவ்வோர் எழுத்தும் உச்சரிக்க வேண்டிய கால அளவை யுடையன. அந்த அளவுக்கு மாத்திரை என்பது பெயர்.

ஒருமுறை இயல்பாகக் கண்ணிமைத்தல், அல்லது, ஒருமுறை கை நொடித்தல் ஒரு மாத்திரை அளவாகிய காலத்தை யுணர்த்துங் கருவியாம். இவற்றுள்,

கண்ணிமைப் பொழுது இயற்கை; கை நொடிப் பொழுது செயற்கை.

உயிர்க்குறிலுக்கு	மாத்திரை	ஒன்று.
உயிர்நெடிலுக்கு	மாத்திரை	இரண்டு.
மெய்யெழுத்துக்கு	மாத்திரை	அரை.
ஆய்தவெழுத்துக்கு	மாத்திரை	அரை.
குற்றியலுகரத்துக்கு	மாத்திரை	அரை.
குற்றியலிகரத்துக்கு	மாத்திரை	அரை.

உயிர்மெய்யெழுத்துக்களுக்கு, அம் மெய்யின் மேல் ஏறியுள்ள உயிரின் அளவே மாத்திரையாகும். அஃதாவது, உயிர்மெய்க் குறிலுக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெடிலுக்கு இரண்டு மாத்திரையும் ஆகும்.

உயிர்மெய் எழுத்து, உயிரும் மெய்யுங் கலந்திருப்பதாயினும், மெய்க்கு அங்கு மாத்திரை யில்லை. இரண்டுபடி தண்ணீரில் அரைப்படி உப்பைச் சேர்த்தால், அந்நீரின் அளவு அதிகப்படாது. அதுபோலவே, உயிரோடு சேர்ந்த மெய்க்கு அளவின்மை யறிக.

பக்கம் என்னும் சொல்லில் எத்தனை மாத்திரை என்றால், ப - மாத்திரை ஒன்று, க் - அரை, க - ஒன்று, ம் - அரை; ஆக மூன்று மாத்திரை யளவு என்க.

குரங்கு என்னும் சொல்லில், கு - மாத்திரை ஒன்று, ர - ஒன்று, ங் - அரை, கு - (குற்றியலுகரமாதலின்) அரை; ஆக மூன்று மாத்திரை யளவு என்க.

எஃகியாது என்பதில், எ - மாத்திரை ஒன்று, ஃ - அரை, கி - (குற்றியலிகரமாதலின்) அரை, யா - இரண்டு, து - (குற்றியலுகரமாதலின்) அரை; ஆக, நாலரை மாத்திரை யளவு என்க.

விளி, பண்டமாற்று, புலம்பல், இசை முதலியவற்றில், எழுத்துக்கள் தம் அளவு நீண்டு ஒலிக்கும்.

கம்பீ இ	— விளி
உப்போஒ உப்பு	— பண்டமாற்று
அண்ணாஆ	— புலம்பல்

†**17.** மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள்: பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க, த, ந, ப, ம, ச, வ, ஞ, ய, ங என்னும் பத்து மெய் யெழுத்துக்களும உயிரெழுத்துக்களோடுகூடி மொழிக்கு முதலில் வரும்.

[ட், ண, ர, ல, ழ, ள, ற, ன ஆகிய எட்டு மெய்கள், எந்த உயிரெழுத்தோடும் மொழி முதலில் வாரா.]

உயிர் வரி — 12

அரிசி	ஆறு	இலை	ஈரல்	உடை	ஊர்
எருது	ஏர்	ஐந்து	ஒன்று	ஓலை	ஔவியம்

(1) மொழிக்கு முதலாகும் மெய் யெழுத்துக்களுள், க, த, ந, ப, ம என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களே பன்னிரண்டு உயிரேழுத்தோடும் கூடி வரும்.

ககர வரி — 12

கரை	காடு	கிளை	கீரை	குடி	கூன்
கெடு	கேள்	கை	கொலை	கோன்	கௌவை

தகர வரி — 12

தந்தை	தாய்	தினை	தீமை	துன்பம்	தூக்கு
தென்னை	தேன்	தையல்	தொட்டி	தோண்டி	தௌவை

நகர வரி — 12

நன்மை	நாய்	நிலம்	நீளம்	நுட்பம்	நூல்
நெய்	நேர்மை	நைதல்	நொண்டி	நோன்பு	நௌவி

பகர வரி — 12

பயன்	பாடு	பிணி	பீர்க்கு	புண்	பூண்
பெண்	பேதை	பையன்	பொன்	போர்	பௌவம்

மகர வரி — 12

மணி	மாடு	மிடறு	மீன்	முடி	மூலை
மென்மை	மேன்மை	மையல்	மொட்டு	மோர்	மௌவல்

(2) சகரம் — ஔகாரம் ஒழிந்த பதினேர் உயிரோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

சகர வரி — 11

சருகு	சார்பு	சிறை	சீர்	சுவை	சூடு
செடி	சேறு	சைகை	சொல்	சோறு	—

[சௌ, முதலாகுஞ் சொல் தமிழில் இல்லை; சௌரியம், சௌக்கியம் என்பனபோன்ற வடசொற்கள் வழங்குகின்றன.]

(3) வகரம் — அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒள என்னும் எட்டு உயிரோடு சேர்ந்து மொழிக்கு முதலாகும். (உ, ஊ, ஒ, ஓ என்பவற்றோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வாராது.)

வகர வரி — 8

வண்டு	வாட்டம்	விடை	வீடு	——	——
வெடி	வேட்டை	வையம்	——	——	வெளவால்

(4) ஞகரம் — அ, ஆ, இ, எ, ஒ என்னும் ஐந்து உயிரோடு சேர்ந்து மொழிக்கு முதலாகும்.

ஞகர வரி — 5

ஞமலி	ஞாலம்	ஞிமிறு	——	——	——
ஞெண்டு	——	——	ஞொள்கல்	——	——

(5) யகரம் — ஆ என்னும் ஓர் உயிரோடு சேர்ந்தே மொழிக்கு முதலாகும்.

யகர வரி — 1

யானை

யமன், யுகம், யூபம், யோகம், யௌவனம் என்பன-போன்ற வடசொற்களும் தமிழில் வழங்குகின்றன.

ஙகரம் — 1

(6) ஙகரம் — அ, இ, உ என்னும் மூன்று சுட்டுக்களின் முன்னும், எ, யா என்னும் இரண்டு வினாக்களின் முன்னும் அகரத்தோடு மாத்திரம் கூடி மொழிக்கு முதலாகும்.

சுட்டு : அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம்.
வினா : எங்ஙனம், யாங்ஙனம்.

18. மொழிகளின் இடையில் ஒன்றோடொன்று இயைந்து நிற்கும் மெய்யெழுத்துக்கள் :

மெய்யெழுத்துக்கள், மொழிகளில் மயங்கி (கலந்து) வருவது மெய்ம்மயக்கம் எனப்படும். அம் மயக்கம் ஒரு மொழியிடத்தும், இரு மொழிகள் சேரு-மிடத்தும் கொள்ளப்படும்.

மெய்ம்மயக்கம் இரு வகைப்படும் — (1) உடனிலை மெய்ம்மயக்கம், (2) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பன.

(1) உடனிலை மெய்ம்மயக்கமாவது — மெய்களுள் ஒவ்வொன்றும் தன்னொடு தான் நின்று (மொழிக் கிடையே) மயங்குவது.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ல், வ், ள், ற், ன் என்னும் பதினாறு மெய்களும் உடனிலை மெய்ம் மயக்கமாக வரும்.

சிக்கல்	பட்டு	அப்பன்	தெவ்வர்
இங்ஙனம்	வண்ணம்	அம்மான்	வெள்ளம்
மிச்சம்	பத்து	வெய்யன்	புற்று
மஞ்ஞை	வெந்நீர்	கொல்லன்	பொன்னன்

(2) வேற்றுநிலை மெய்ம்மயக்கமாவது — மெய்-களுள், ஒரு மெய்யொடு வேறு மெய் மயங்கி வருவது.

ங், ஞ், ட், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினேன்கு மெய்களும் வேறு மெய்களோடு மயங்கும். அவை வருமாறு :

(i) ஙகரத்தின்முன், ககரம் வரும்.

தெங்கு

(ii) ஞகரத்தின்முன் — சகரமும், யகரமும் வரும்.

மஞ்சு உரிஞ்யாது

(iii) டகரத்தின்முன் — க, ச, ப ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

வெட்கம் காட்சி கட்பு

(iv) ணகரத்தின்முன் — க, ச, ஞ, ட, ப, ம, ய, வ ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

மண்கலம் நண்பர்
வெண்சோறு கண்மலர்
திண்ஞாலம் எண்யாது
கண்டல் கண்வலி

(v) நகரத்தின்முன் — த, ய ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

சிந்து பொருந்யாது

(vi) மகரத்தின்முன் — ப, ய, வ ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

கம்பர் கலம் யாது வரும் வேந்தன்

(vii) யகரத்துக்குமுன் — க, ச, த, ந, ப, ம, வ, ஞ ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

வேய் கடிது	சேய் நன்று	வாய் வலிது
நாய் சிறிது	காய் பெரிது	மெய் ஞமலி
பாய் தக்கது	தாய் மகிழ்ச்சி	———

(viii) ரகரத்துக்கும், ழகரத்துக்கும் முன்—க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ* ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

பார்கடிது	வீழ்கவிசை
நார்சிறிது	பாழ்செவி
போர்தீது	எழ்தடி
நீர்நன்று	வீழ்நன்று
சீர்பெரிது	எழ் பார்
கூர்மை	வாழ்மனை
கார்வலிது	ஆழ்வார்
நேர்யாது	காழ்யாது
சேர்ஞமலி	இகழ்ஞமலி

(ix) லகரத்தின் முன்னும் ளகரத்தின் முன்னும் — க, ச, ப, வ, ய ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

கால்கடிது	தேள்கடிது
சேல்சிறிது	எள்சிறிது
வேல்பெரிது	வாள்பெரிது
தோல்வி	கேள்வி
தோல்யாது	கொள்யாது

(x) வகரத்தின்முன் யகரம் மயங்கும்.

தெவ்யாது

(xi) றகரத்தின்முன் — க, ச, ப ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

கற்க அகற்சி பொற்பு

(xii) னகரத்தின்முன் — க, ச, ஞ, ப, ம, ய, வ, ற ஆகிய இவை தனித்தனி மயங்கும்.

---

*ஙகரம், சுட்டு விளக்கலே அடுத்தே வரும் என விதியிருப்பதனால், அது மற்ற எழுத்துக்களே யடுத்து வாராது.

புன்கு	பொன்மலர்
புன்செய்	மின்யாது
பொன்ஞாண்	பொன்வன்மை
என்பணி	கன்று

மேல் கூறியவற்றுல், பதினெட்டு மெய் யெழுத்துக்களுள்,

ரகர ழகர மெய்கள் இரண்டும், தம்மோடு தாம் மயங்கா என்பதும்,

க, ச, த, ப என்னும் மெய்கள் நான்கும் தம்மோடு தாமே மயங்கும் என்பதும் அறியப்படும்.

ஆகவே, மற்றைப் பன்னிரண்டு மெய்யெழுத்துக்கள் (ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்) தம்மொடும் பிறவற்றொடும் மயங்குதல் காண்க.

யகர, ரகர, ழகர மெய்கட்குமுன் — க், ச், த், ப், ங், ஞ், ந், ம் என்னும் எட்டு மெய்களும் ஈறொற்றுக மயங்கி வரும்.

காய்க்கும்	ஈர்க்கு	வாழ்க்கை
பாய்ச்சல்	தேர்ச்சி	சூழ்ச்சி
துய்த்தல்	போர்த்தல்	வாழ்த்தல்
தேய்ப்பு	சேர்ப்பன்	காழ்ப்பு
வேய்ங்குழல்	ஆர்ங்கோடு	பாழ்ங்கிணறு
தேய்ஞ்சது	வார்ஞ்ஞிலை	தாழ்ஞ்ஞிணை
தேய்ந்தது	சேர்ந்தது	வாழ்ந்தனம்
வேய்ம்புறம்	ஈர்ம்புனல்	பாழ்ம்பதி

ரகர, ழகரங்கள் தனிக்குறிலை யடுத்து வருதலில்லை. (உய்த்தல், எய்த்தல், உய்தல், எய்தல் என்பவற்றில் யகரம் — உ, எ என்னுங் குறிலை யடுத்து வருதல்போல, ரகரமும், ழகரமும் வருதல் தமிழ்மொழிக்கண் இல்லை.)

19. இறுதிநிலை :

இறுதிநிலை (ஈற்றுநிலை)யாவது, மொழிக்கு இறுதியில் எழுத்துக்கள் நிற்கும் நிலைமையாம். மொழியின் இறுதியில் வரக்கூடிய எழுத்துக்களாவன :

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பதினோர் உயிரும்; ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் என்னும் பதினொரு மெய்யும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்துமூன்று எழுத்துக்களும், தனித்தனி மொழிக்கு இறுதியில் வரும்.

உயிர் — 11

பல	பலா	பொடி	தீ	மடு	பூ
—	சே	மனே	நொ	போ	வௌ

இம் மொழிகளில் பதினோர் உயிரும் ஈறுயினவாறு காண்க. ஏகரம், அளபெடையில் மாத்திரமே ஈறுய் வரும். உதாரணம் : சேஎ நடந்தது.

மெய் — 11

உரிஞ்	பண்	வெரிந்	மரம்	செய்	வேர்
கால்	தெவ்	கீழ்	வாள்	பொன்	

இம் மொழிகளில் மேற்கூறிய பதினொரு மெய்களும் ஈறுயினவாறு காண்க.

தூற்றியலுகரம் — 1

வீடு

***20.** போலி :

ஒரு சொல்லில் இயல்பாய்நின்ற ஓர் எழுத்து நீங்க, பொருள் கெடாமல் மற்றோர் எழுத்து நிற்ப வழங்குவது போலியாம். வழக்கில் இவ்வாறு இயற்கையாக

ஆதலும், புலவர் வேண்டும் எனச் செய்துகொள்ளுதலும் ஆகிய இவ்விரண்டு வகையும் போலி எனப்படும்.

போலி — (1) மொழிமுதற்போலி, (2) மொழியிடைப்போலி, (3) மொழிகடைப்போலி என மூன்று வகைத்தாம்.

†(1) மொழிமுதற்போலி :

(i) சகரம், ஞகரம், யகரம் இவற்றிற்கு மேலிடத்தில் இருக்கும் அகரம், ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

பசல் — பைசல்
மஞ்சு — மைஞ்சு
பயல் — பையல்

(ii) சில சொற்களின் முதலிலுள்ள நகரத்துக்கு ஞகரமும், ஞகரத்திற்கு நகரமும் போலியாய் நிற்கும்.

நயம் — ஞயம் — ந = ஞ
ஞாயிறு — நாயிறு — ஞ = ந
ஞண்டு — நண்டு — ஞ = ந

†(2) மொழியிடைப்போலி :

(i) சில சொற்களின் இடையிலுள்ள அகரம் — சகர ஞகர யகரங்கள் வரின் ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

அமச்சன் — அமைச்சன்
இலஞ்சி — இலைஞ்சி
அரயன் — அரையன்

(ii) சில சொற்களின் இடையிலுள்ள தகரத்துக்குச் சகாரம் போலியாகும்.

தைத்தான் — தைச்சான்
வைத்தான் — வைச்சான்

(iii) சில சொற்களின் இடையிலுள்ள நகார, தகாரத்துக்கு ஞகாரம் போலியாகும்.

நீந்தினான் — நீஞ்சினான்
பொழிந்தது — பொழிஞ்சது

(iv) சில சொற்களின் முதலில் ஐகாரமும், அதை அடுத்து நகார தகாரமும் இருந்தால், அவற்றிற்கு முறையே அகரமும், ஞகார சகாரமும் இணைந்து போலியாக வரும்.

ஐந்து — அஞ்சு மைந்தன் — மஞ்சன்

†(3) மொழிகடைப்போலி :

(i) அஃறிணைப்பெயரியல், இணைக்குறிலடுத்த மகரத்துக்கு னகரம் போலியாகும்.

மரம் — மரன் முகம் — முகன்

(ii) சில குற்றியலுகரங்களுக்கு, அர் என்பது ஈறாகி வரும்.

சுரும்பு — சுரும்பர் சிறகு — சிறகர்
கொம்பு — கொம்பர் இடக்கு — இடக்கர்

(iii) சில சொற்களின் ஈற்றிலும் இடையிலும் உள்ள லகரத்துக்கு, ளகரம் போலியாகும்.

மதில் — மதிள் — ஈறு.
மெல்ல — மெள்ள } — இடை.
அலமரு — அளமரு }

(iv) சில சொற்களின் இறுதியிலுள்ள லகரத்துக்கு, ரகரம் போலியாகும்.

சாம்பல் — சாம்பர் குடல் — குடர்

21. எழுத்துக்கள் பெறும் சாரியைகள் :

(1) உயிர்க் குற்றெழுத்துக்களும், உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும், கரம், காரம், கான் என்னும் மூன்று சாரியைகள் பெறும்; கான் சாரியை வரும்போது இடையில், ஆய்தம் தோன்றும்.

அகரம் — கரச்சாரியை
அகாரம் — காரச்சாரியை
அஃகான் — கான்சாரியை
} உயிர்க் குற்றெழுத்து.

ககரம் — கரச்சாரியை
ககாரம் — காரச்சாரியை
மஃகான் — கான்சாரியை
} உயிர் மெய்க் குற்றெழுத்து.

(2) மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியை பெறும்.

க் — க
ங் — ங
} அ - சாரியை. மெய்யெழுத்து.

(3) உயிரெழுத்துக்களுள் நெட்டெழுத்துக்கள், காரச்சாரியை ஒன்றே பெறும்.

ஏகாரம்
ஐகாரம்
} காரம். உயிர் நெடில்கள்.

(4) ஐகாரம், ஔகாரம் இவ்விரண்டும் கான் சாரியையும் பெறும்.

ஐகான்
ஔகான்
} கான். ஐ ஔகக்கள்.



II. பதம்

***22.** ஓர் எழுத்தே தனித்து நின்றுயினும், பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றுயினும் ஒரு பொருளைத் தருமாயின், அது, பதம் எனப்படும். (பதம் - மொழி).

***23.** பதம் — பகாப்பதம் எனவும், பகுபதம் எனவும் இருவகைப்படும்.

***24.** பகாப்பதமாவது — பிரிக்க முடியாத பதம்; அஃது, ஓர் எழுத்து முதல் ஏழ் எழுத்துக்கள் வரையும் தொடர்ந்து வரும்.

ஆ	— 1	எழுத்துப் பகாப்பதம்.
கூன்	— 2	,, ,,
வயிறு	— 3	,, ,,
குரங்கு	— 4	,, ,,
அம்பலம்	— 5	,, ,,
உத்திராடம்	— 6	,, ,,
உத்திரட்டாதி	— 7	,, ,,

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நால்வகைச் சொற்களிலும் பகாப்பதம் உண்டு.

1. கல், மண்	—	பெயர்ப் பகாப்பதம்.
2. வா, செல்	—	வினைப் பகாப்பதம்.
3. மற்று, பிற	—	இடைப் பகாப்பதம்.
4. நனி, வய	—	உரிப் பகாப்பதம்.

*25. பகுபதமாவது — பிரிக்கக் கூடிய பதம்; அஃது இரண்டு எழுத்துக்கள் முதல் ஒன்பது எழுத்துக்கள் வரையும் தொடர்ந்து வரும்.

கூனி	(கூன்	+ இ)	2 எழுத்துப்பகுபதம்
கூனன்	(கூன்	+ அன்)	3 ,, ,,
மலையன்	(மலை	+ அன்)	4 ,, ,,
பொருப்பன்	(பொருப்பு	+ அன்)	5 ,, ,,
அம்பலவன்	(அம்பலம்	+ அன்)	6 ,, ,,
திருவோணத்தான்	(திருவோணம்	+ ஆன்)	7 ,, ,,
உத்திராடத்தான்	(உத்திராடம்	+ ஆன்)	8 ,, ,,
உத்திரட்டாதியான்	(உத்திரட்டாதி	+ ஆன்)	9 ,, ,,

பகுபதம் — (1) பெயர்ச்சொல், (2) வினைச்சொற்களில் பெரும்பான்மையாயும், (3) இடைச்சொல், (4) உரிச்சொற்களில் சிறுபான்மையாயும் வரும்.

†(1) பெயர்ச்சொற் பகுபதம், ஆறு வகையாகும். அவை :

1. பொருட் பெயர்ப் பகுபதம்.
2. இடப் பெயர்ப் ,,
3. காலப் பெயர்ப் ,,
4. சினைப் பெயர்ப் ,,
5. பண்புப் பெயர்ப் ,,
6. தொழிற் பெயர்ப் ,,

என்பனவாம்.

[சினை - உறுப்பு; பண்பு - குணம்.]

பொன்னன் — பொருட் பெயர்ப் பகுபதம்.
மலையன் — இடப் பெயர்ப் ,,
வேனிலான் — காலப் பெயர்ப் ,,

பல்லன் — பெயர்ப் பகுபதம்.
கரியன் — பண்புப் பெயர்ப் ,,
தட்டான் — தொழிற் பெயர்ப் ,,

செய்தல், நடத்தல், உண்டல் இவை போன்ற சொற்களும் தொழிற் பெயர்ப் பகுபதங்களாம்.

†(2) வினைச்சொற் பகுபதம் இருவகைப்படும். தெரிநிலை வினைப் பகுபதம், குறிப்பு வினைப் பகுபதம். இவற்றுள் தெரிநிலை வினைப் பகுபதம், காலத்தை வெளிப்படையாகக் காட்டும்; குறிப்புவினைப் பகுபதம், காலத்தைக் குறிப்பாகக் காட்டும்.

படித்தான் — தெரிநிலை வினைப்பகுபதம்
இவன் இப்போது செல்வன் — குறிப்பு வினைப்பகுபதம்

இப்போது என்னும் சொல்லினால், செல்வன் என்பது, செல்வத்தை யுடையவனு யிருக்கிறான் என, நிகழ்காலத்தைக் குறிப்பாகக் காட்டியது.

வினைமுற்றுக்கள், பெயர்த்தன்மைப்பட்டு, வேற்றுமை யுருபு ஏற்றுவந்தால், அவை, வினையாலணையும் பெயர் எனப்படும்.

அவன் **ஓடினானைப்** பிடித்தான்

ஓடினான் என்னும் சொல், ஓடினவனை (ஓடின மனிதனை) எனப் பொருள்படுதலால், அது வினையாலணையும் பெயர்ப்பகுபதமாம்.

†(3) இடைச்சொற் பகுபதம்.

புலி **போன்றான்**

போல் என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்தது.

†(4) உரிச்சொற் பகுபதம்.

களி கூர்ந்தான்

கூர் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்தது.

†26. பகுபத வுறுப்புக்கள் :

பதபதம் — முதல்நிலை - (பகுதி), இறுதிநிலை - (விகுதி), இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறு உறுப்புக்களையும் பெற்றுவரும்.

சில பகுபதங்கள், முதல்நிலை இறுதிநிலைகளைப் பெற்றும், மற்றவற்றைப் பெறாமலும் நிற்கும்.

பகுபதங்களின் உறுப்புக்கள், சொற்களில் நிற்கும் நிலையை நோக்கினால் - முதல்நிலை, விகாரம், சந்தி, இடைநிலை, சாரியை, இறுதிநிலை என்னும் முறை அமையும்.

சொல்	முதல் நிலை	விகாரம்	சந்தி	இடை நிலை	சாரியை	இறுதி நிலை
செய்தல்	செய்	--	—	—	—	தல்
செய்தான்	செய்	—	—	த்	—	ஆன்
செய்தனன்	செய்	—	—	த்	[1]அன்	அன்
படித்தனன்	படி	—	த்	த்	அன்	அன்
இருந்தனன்	இரு	—	[2]ந்	த்	அன்	அன்
வந்தனன்	வா	வ-(குறுகியது)	[2]ந்	த்	அன்	அன்

1. விகுதியின் முதல் குறிலாயிருப்பின் சாரியை வரும்.

2. த் - சந்தி என்றும், அது நகரவொற்றுக் திரிந்தது விகாரம் என்றும் கூறுவாரும் உளர்.

*(1) முதல்நிலை - (பகுதி) :

இஃது — ஒரு பகுபதத்தின் முதலில் நிற்பது; பகுக்கப்படாததாய் நின்று, செயலை யுணர்த்துவது. இதனைப் பிற்காலத்தவர் பகுதி என வழங்கினர். பகுதி என்பது, ப்ரக்ருதி என்னும் வடசொல்லின் சிதைவு; இதற்கு - இயல்பு, இயற்கை என்பது பொருள்.

படித்தான் — (படி + த் + த் + ஆன்)

இதில், படி என்பது முதல்நிலை; இது முதலில் நின்று, படித்தல் ஆகிய தொழிலைக் காட்டிற்று.

*(2) இறுதிநிலை - (விகுதி) :

இஃது — ஒரு பகுபதத்தின் இறுதியில் நிற்பது; திணை பால் இடங்களை யுணர்த்துவது. இதனைப் பிற் காலத்தவர் விகுதி என வழங்கினர். விகுதி என்பது, விக்ருதி என்னும் வடசொல்லின் சிதைவு. இதற்கு - செயற்கை, வேறுபாடு என்பது பொருள்.

படித்தான் — (படி + த் + த் + ஆன்)

இதில், ஆன் என்பது இறுதிநிலை. இஃது இறுதியில் நின்று, உயர்திணை ஆண்பால் படர்க்கை யிடத்தைக் காட்டிற்று.

*(3) இடைநிலை :

இது, முதல்நிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையில் நிற்பது; காலத்தைக் காட்டுவது. அதனால் இஃது இடைநிலை எனப்பட்டது.

படித்தான் — (படி + த் + த் + ஆன்)

இதில், த் என்பது இடை நின்று இறந்தகாலம் காட்டிற்று. [பெயர்ச்சொல்லில் இடைநிலை காலங் காட்டாது.]

†(4) சாரியை :

இஃது, இடைநிலை இறுதிநிலை முதலியவற்றைச் சார்ந்து, அவற்றை இயைவித்து நிற்பது.

சாரியை, எழுத்துச்சாரியை எனவும், மொழிச் சாரியை எனவும் இருவகைப்படும். சாரியை, பெரும்பாலும் இடைநிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையே நிற்கும்.

படித்தனன் — (படி + த் + த் + அன் + அன்)

இதில், அன் என்னும் சாரியை, இடைநிலைக்கும் இறுதி நிலைக்கும் இடையே நிற்றல் காண்க.

சாரியை சிறுபான்மையாக முதல்நிலைக்கும் இடைநிலைக்கும் இடையே வருவதும் உண்டு.

செய்குவன் — (செய் + கு + வ் + அன்)

இதில், கு என்னும் சாரியை, முதல்நிலைக்கும் இடைநிலைக்கும் இடையே நிற்றல் காண்க.

†(5) சந்தி :

இது, முதல்நிலை முதலியவை தம்முட் கூடும்போது வரும் புணர்ச்சி விகாரமாம்.

படித்தான் — (படி + த் + த் + ஆன்)

இதில், படி என்னும் முதல்நிலையோடு இடைநிலையாகிய த் சேரும்போது ஒரு த் சந்தியால் மிக்கது.

படிக்கின்றான்

இதில், முதல்நிலைக்கும் இடைநிலைக்கும் இடையே க் மிகுந்ததே யன்றி, கின்று என்னும் இடைநிலையின் ஈற்று உகரமும் கெட்டது.

†(6) விகாரம் :

இது முதல்நிலையில் உண்டாகும் குறுக்கல் முதலிய மாறுபாடு.

வந்தான் — (வா + ந் + த் + ஆன்)

இதில், வா என்னும் முதல்நிலை, வ எனக் குறுகி விகாரப்பட்டது காண்க.

†27. பண்பு முதனிலை :

மையீற்றுப் பண்புப் பெயர்கள் முதல்நிலையாக நிற்கும்.

செம்மையன் கருமையன்

இவற்றில்—செம்மை, கருமை என்பன முதல்நிலையாக நின்றமை காண்க.

இப் பண்புப் பெயர்கள் பெரும்பாலும் பலவகை விகாரங்களை அடையும் :

(1) ஈற்றிலுள்ள மை கெடும்.

சிறுவன் — (சிறுமை + அன்)

இதில், சிறுமை என்பதன் மை கெட்டது. [ஈற்றிலுள்ள மை கெடுதல், மற்ற விகாரங்கள் எல்லாவற்றிலும் வரும்]

(2) முதலிலுள்ள குற்றெழுத்து நீளும்.

பாசி — (பசுமை + இ)

இதில், பசுமை என்பதன் முதலிலுள்ள குறில் நீண்டது.

(3) இடையிலுள்ள உகரம் இகரமாகும்.

கரியன் — (கருமை + அன்)

இதில், கருமை என்பதிலுள்ள உகரம் இகரமாயிற்று.

(4) இடையில் மெய்யெழுத்து இரட்டித்து வரும்.

தற்றி — (குறுமை + இ)

இதில், குறுமை என்பதிலுள்ள (று) றகர ஒற்று இரட்டித்தது.

(5) இடையிலுள்ள மெய்யெழுத்து வேறு மெய்யாகத் திரியும்.

செம்மியன் — (செம்மை + அன்)

இதில், செம்மை என்பதன் இடையிலுள்ள மகர மெய், யகரமெய்யாகத் திரிந்தது.

(6) இடையிலுள்ள அகரம் ஐகாரமாகும்.

இளைது — (இளமை + து)

இதில், இளமை என்பதன் இடையிலுள்ள அகரம் ஐகாரமாயிற்று.

28. ஐம்பால் இறுதிநிலைகள் :

அன் — செய்தனன் ஆன் — செய்தான்	படர்க்கை ஆண்பால் விகுதி
அள் — செய்தனள் ஆள் — செய்தாள்	படர்க்கைப் பெண்பால் விகுதி.
அர் — செய்தனர் ஆர் — செய்தார் ப — செய்ப மார் — செய்மார்	படர்க்கைப் பலர்பால் விகுதி.
து — செய்தது டு[1] — குண்டுகட்டு று[1] — போயிற்று	படர்க்கை ஒன்றன்பால் விகுதி

1. து — டு ஆகவும், று ஆகவும் திரிந்து வந்தது.

அ — செய்தன — படர்க்கைப் பலவின்பால் விகுதி.

ஆ — செய்யா (செய்யமாட்டா) } எதிர்மறைப் பொருளில் வரும் பலவின்பால் விகுதி.

கு — செய்கு (செய்வேன்)
து — செய்து (செய்தேன்)
டு — கண்டு (கண்டேன்)
று — சென்று (சென்றேன்)
என் — செய்தனென்
ஏன் — செய்தேன்
அல் — செய்வல்
[1]அன் — செய்வன்
} தன்மை ஒருமை விகுதி.

அம் — நாம் செய்தனம்
ஆம் — நாம் செய்தாம்
} முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை விகுதி.

எம் — யாம் செய்தனெம்
ஏம் — யாம் செய்தேம்
ஒம் — யாம் செய்தோம்
} படர்க்கையை உளப்படுத்திய தன்மைப் பன்மை விகுதி.

கும் — செய்கும் (செய்வோம்)
தும் — செய்தும் (செய்வோம்)
[2]டும் — [3]காண்டும் (காண் + தும்) (காண்போம்)
[2]றும் — சென்றும் (செல் + தும்) (சென்றோம்)
சேறும் (செல் + தும்) (செல்வோம்)
} முன்னிலையையும் படர்க்கையையும் உளப்படுத்திய தன்மைப் பன்மை விகுதி.

---

1. அல் என்பதே அன் எனத் திரிந்தது.
2. தும் என்பது — டும், றும் எனத் திரிந்து வந்தது.
3. இறந்தகாலத்தில் வருவது சிறுபான்மை.

ஐ	— செய்தை	முன்னிலை ஒருமை விகுதி.
ஆய்	— செய்தாய்	
இ	— செய்தி (செய்கிறாய்) (செய்வாய்)	
இர்	— செய்திர் செய்தனிர்	முன்னிலைப் பன்மை விகுதி.
ஈர்	— செய்தீர்	
இ	— செய்தி (செய்) — ஏவலொருமை விகுதி.	
மின்	— செய்மின்	ஏவற்பன்மை விகுதி.
உம்	— செய்யும்	
உங்கள்	— செய்யுங்கள் — (கள் - விகுதிமேல் விகுதி.)	
ஈயர்	— நிலீயர் (நிற்க)	வியங்கோள் விகுதி.
க	— செய்க	
அ	— செய	
அல்	— செயல் (செய்க) (செயற்க)	
தல்	— ஆதல் (ஆகுக)	
உம்	— வேண்டும்	
ஆல்	— ஒரால் (ஒருவற்க)	
உம்	— வரும் (அவன் வரும்) (அவள் வரும்) (அது வரும்) (அவை வரும்)	செயீயும் என்னும் வாய்பாட்டு முற்றுவினை விகுதி. (இது — படர்க்கை ஆண்பால், பெண் பால், ஒன்றன்பால், பலவின் பால் இந்நான்கிற்குமே வரும்.)

29. இடைநிலை இருவகைப்படும் — (i) பெயரிடைநிலை, (ii) வினையிடைநிலை.

(i) பெயரிடைநிலையாவது — பெயர்ப்பகுபதங்களின் இடையில் நிற்பது; இது காலங் காட்டாது.

அறிஞன் — ஞ் இடைநிலை
உழுநர் — ந் ,,
வண்ணத்தி — த் ,,
வலைச்சி — ச் ,,

முதலியன காண்க.

(ii) **வினையிடைநிலை**யாவது — வினைச்சொற்களின் இடையில் நின்று காலத்தைக் காட்டுவது.

*(1) இறந்தகால இடைநிலை :

த் — செய்தான்
ட் — [1]உண்டான்
ற் — [1]கற்றான்
ய் — போயது
இன் — போயினன்

இன் என்பதில் இகரம் கெட்டும் வரும்.

போனன்

இன் என்பதில் ன் கெட்டும் வரும்.

சொல்லியது

*(2) நிகழ்கால இடைநிலை :

கிறு — செய்கிறான்
கின்று — செய்கின்றான்
ஆநின்று — செய்யாநின்றான்.

*(3) எதிர்கால இடைநிலை :

ப் — நடப்பான்
வ் — செய்வான்

---

1. இச் சொற்களில் த் - ட் ஆகவும் ற் ஆகவும் திரிந்து வந்தது என அறிக.

30. காலங் காட்டும் இறுதிநிலைகள் :

(1) இறந்தகாலங் காட்டும் விகுதி :

[1]து	— செய்து	(செய்தேன்)	ஒருமை.
டு	— உண்டு	(உண்டேன்)	
[2]று	— சென்று	(சென்றேன்)	
[3]தும்	— செய்தும்	(செய்தேம்)	பன்மை.
டும்	— உண்டும்	(உண்டேம்)	
[4]றும்	— சென்றும்	(சென்றேம்)	
[5]ப	— என்ப	(என்மூர்)	

(2) நிகழ்காலங் காட்டும் விகுதி :

[6]உம் — உண்ணும் (உண்கின்ருன், உண்கின்ருள், உண்கின்றது, உண்கின்றன.)

(3) எதிர்காலங் காட்டும் விகுதி :

கு	— செய்கு	(செய்வேன்)	ஒருமை
து	— வருது	(வருவேன்)	
று	— சேறு	(செல்வேன்)	
இ	— செய்தி	(செய்வாய்)	
கும்	— செய்கும்	(செய்வேம்)	பன்மை.
தும்	— வருதும்	(வருவேம்)	
றும்	— சேறும்	(செல்வேம்)	
ப	— செய்ப	(செய்வார்)	
மின்	— செய்மின்	(செய்யுங்கள்)	
மார்	— செய்மார்	(செய்வார்)	

உம் — உண்ணும் (அவன் உண்பான், அவள் உண்பாள், அது உண்ணும், அவை உண்ணும்)

---

1 - 6. இவ் விறுதிநிலைகள் எதிர்காலத்திலும் வருதல் காண்க.

31. வினைமுற்று :

சொல்	முதல் நிலை	விகாரம்	இடை நிலை	சாரியை	இறுதி நிலை
நடந்தான்	நட	———	ந்	த்	—	ஆன்
வந்தனன்	வா	வ - குறுகியது	ந்	த்	அன்	அன்
வந்தது	வா	வ - குறுகியது	ந்	த்	அ	து
கண்டேன்	காண்	கண்-குறுகியது	—	ட்	—	ஏன்
நடவான்	நட	———	வ்	[1]ஆ	—	ஆன்
கொணர்ந்தீர்	கொணர்	கொணர் - ஈறு திரிந்தது	ந்	த்	—	ஈர்

32. பெயரெச்சம் :

சொல்	முதல் நிலை	விகாரம்	சந்தி	இடை நிலை	சாரியை	இறுதி நிலை
சென்ற	செல்	———	(சென்) - லகர மெய் திரிந்தது.	ற்	—	அ
சிறிய	சிறு மை	(சிறு) - மை கெட்டது (சிறி)-உகரம் இகரமாகத் திரிந்தது	ய்	—	—	அ
செய்யாத	செய்	———	ய் த்-எழுத்துப்பேறு	[2]ஆ	—	அ
செய்கிலா [த	செய்	———	த்-எழுத்துப்பேறு	[3]இல்	[4]கு ஆ	அ

1 - 2. எதிர்மறை ஆ கெட்டது, சந்தி. 3. இல் - எதிர் மறை. 4. சாரியை கு - உகரம் கெட்டது, சந்தி.

33. வினையேச்சம் :

சொல்	முதல் நிலை	விகாரம்	சந்தி	இடை நிலை	சாரியை	இறுதி நிலை
கற்று	கல்	—	(கற்) - லகரம் றகரமானது.	ற்	—	உ
கற்கின்	கல்	—	(கற்) லகரம் றகரமாயிற்று (கு) - உகரங் கெட்டது.	—	கு	இன்
இன்றி	இல்	—	(இன்) லகரம் னகரமாகத் திரிந்தது.	—	—	றி

34. ஏவல், வியங்கோள்கள் :

சொல்	முதல் நிலை	விகாரம்	சந்தி	இடை நிலை	சாரியை	இறுதிநிலை
செய்தி	செய்	—	த்-எழுத்துப் பேறு.	—	—	இ - ஒருமை விகுதி. (எதிர் காலம் காட்டிற்று)
செய்மின்	செய்	—	—	—	—	மின் - பன்மை விகுதி.
செய்யுங்கள்	செய்	—	ய்	—	—	உம் - விகுதி. (கள் - விகுதி மேல் விகுதி.)
செய்க	செய்	—	—	—	—	க - வியங் கோள் விகுதி.
செயல்	செய்	—	—	—	—	அல் - வியங் கோள் விகுதி

III. சொல்

*35. சொல்லாவது — தன்னை உணர்த்தி, இருதிணை ஐம்பாற் பொருளையும் அறிவிப்பது. அது, மொழி எனவும் படும்.

36. மொழி :

மொழிகள் — (1) தனிமொழி, (2) தொடர்மொழி, (3) பொதுமொழி என மூன்று வகைப்படும்.

(1) ஒரே சொல்லாக இருப்பது தனிமொழியாம்.

மரம் இலை கண் கை கல்

(2) இரண்டு முதலான சொற்கள் சேர்ந்து வருவது தொடர்மொழி.

இராமன் வந்தான்
முருகன் ஊரை அடைந்தான்.

(3) ஒரு சொல், தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் பொருள்பட்டால், அது பொதுமொழியாகும்.

பலகை — இதைத் தனி மொழியாகக் கொண்டால், மரம் முதலியவற்றின் பலகை என்று பொருள்படும்

பலகை — இதைத் தொடர் மொழியாகக் கொண்டால், பல + கை என்று பிரிந்து, பல கைகள் என்று பொருள்படும் ; ஆகையால், பலகை என்பது பொதுமொழியாம்.

***37. சொல்லின் வகை :**

தமிழ்மொழியின் சொற்கள் நான்கு வகைப்படும். அவை :

(1) பெயர்ச் சொல்
(2) வினைச் சொல்
(3) இடைச் சொல்
(4) உரிச் சொல்

என்பனவாம்.

*(1) பொருளின் பெயரை உணர்த்துவது **பெயர்ச் சொல்**லாம்.

முருகன் நாய் பறவை காற்று

*(2) பொருளின் தொழிலை உணர்த்துவது **வினைச் சொல்**லாம்.

(முருகன்) **படிக்கிறான்** (பறவை) **பறக்கிறது**
(நாய்) **துரைக்கிறது** (காற்று) **வீசுகிறது**

*(3) பெயர் வினைகளை அடுத்து வருஞ் சொல் **இடைச் சொல்**லாம்.

இராமனும் முருகனும் போனார்கள் (உம்)
அவன் வந்தானும்; ஆனால், நான் காணவில்லை (ஆனால்)

*(4) பெயர், வினைகளின் குணத்தைக் காட்ட வருஞ் சொல் **உரிச் சொல்**லாம்.

பெயர் உரிச்சொல் — கழி பொருள் நனி பேதை
வினை உரிச்சொல் — சாலப் பேசினான் நனி தின்றான்

***38. திசைச்சொல், வடசொல் :**

தமிழ் மொழியின் சொற்களோடு வேறு மொழியின் சொற்களும் கலந்துவரும். அவை : (1) திசைச் சொல் (2) வடசொல் என இருவகைப்படும்.

*(1) திசைச்சொல் — ஸம்ஸ்கிருதம் ஒழிந்த மற்றைய பாஷையின் சொல், தமிழில் வந்து வழங்குவது **திசைச் சொல்** எனப்படும்.

திசைச்சொல்		தமிழ்ச்சொல்
பென்ஸில்	(அங்கிலச் சொல்)	— எழுது கோல்
ஸலாம்	(இந்துஸ்தானிச் சொல்)	— வணக்கம்

*(2) வடசொல்—ஸம்ஸ்கிருத பாஷையின் சொல் தமிழில் வந்து வழங்குவது வட சொல் எனப்படும்.

வடசொல்		தமிழ்ச்சொல்
குஞ்சரம்	——	யானை
பங்கஜம்	——	தாமரை
ஸர்ப்பம்	——	பாம்பு

†39. தற்சமம், தற்பவம் :

வட சொல் தமிழில் வந்து வழங்கும்போது (1) தற்சமம் (2) தற்பவம் என இருவகையாக நிற்கும்.

(1) வட சொல், தன் உச்சரிப்புக் கெடாமல் தமிழில் நிற்குமாயின், அது தற்சமம் எனப்படும். (தத் - அதற்கு, சமம் - சரியானது.)

கமலம்	காரணம்	மூலம்

(2) வட சொல், தன் உச்சரிப்புக் கெட்டுத் தமிழில் நிற்குமாயின் அது தற்பவம் எனப்படும். (தத் - அதினின்றும், பவம் - பிறந்தது.)

வடசோல்		தற்பவம்
பாணம்	(Banam)	பாணம்
ஹீநம்	(Heenam)	ஈனம்
முகம்	(Mukham)	முகம்

40. வடமொழியினின்றும் ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ என்னும் ஐந்து எழுத்துக்கள், தமிழில் தற்பவமாகியும் வழங்கப்பெறுகின்றன. அவை தற்பவப்படும்போது மாறும் நிலைகளாவன.

(1) ஜகாரம் — மொழிக்கு முதலில் சகரமாகவும், மொழிக்கு இடையில் சகரம் அல்லது யகரமாகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஜகம் — சகம்	விஜயம் — விசயம்
ஜயம் — சயம்	புஜம் — புயம்
ஜலம் — சலம்	அம்புஜம் — அம்புயம்

(2) ஷகாரம் — மொழிக்கு முதலில் சகரமாகவும், மொழிக்கு இடையில் டகரமாகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஷண்முகம் — சண்முகம்	நஷ்டம் — நட்டம்
ஷஷ்டி — சஷ்டி	விஷம் — விடம்

(3) க்ஷகாரம் — மொழிக்கு முதலில் ககரமாகவும், சகரமாகவும்; மொழிக்கு இடையில் இரண்டு ககரம், அல்லது, இரண்டு சகரம், அல்லது, டகர சகரங்கள் ஆக மாறும்.

மொழிமுதல்		மொழியிடை	
க்ஷீரம் —	கீரம்	பக்ஷம் —	பக்கம்
க்ஷேமம் —	சேமம்	பிக்ஷை —	பிச்சை
	கேமம்	பரீக்ஷை —	பரீட்சை

(4) ஸகாரம் — மொழிக்கு முதலில் சகரம், அல்லது, அகரமாகவும்; மொழிக்கு இடையில் சகரம், அல்லது, தகரமாகவும் மாறும்.

மொழிமுதல்		மொழியிடை	
ஸங்கதி —	சங்கதி	வாஸம் —	வாசம்
ஸமயம் —	சமயம்	தாஸன் —	தாசன்
	அமயம்	மாஸம் —	மாதம்

(5) ஹகாரம் — மொழிக்கு முதலில் தன்மேல் நின்ற உயிரெழுத்தாகவும், இடையில் ககரமாகவும் யகரமாகவும், வகரமாகவும் மாறும்.

மொழிமுதல்		மொழியிடை	
ஹரன்	— அரன்	தேஹம்	— தேகம்
ஹிமம்	— இமம்	மஹிமை	— மகிமை
ஹேமந்தம்	— ஏமந்தம்	மஹிஷம்	— மயிடம்
ஹோமம்	— ஓமம்	ஆஹுதி	— ஆவுதி

(6) சில சொற்கள் தற்பவப்பட்டு வருகையில் ஒரு நியதியில் அடங்கா.

பர்வதம்	பருவதம்	— பருப்பதம்	
பத்நி	பத்தினி	— பன்னி	
ஆத்மா	ஆத்துமா	— ஆன்மா	
ஸ்வர்ணம்	சுவர்ணம்	— சொர்ணம்	— சொன்னம்
வர்ணம்	வருணம்	— வண்ணம்	— வன்னம்

(7) ஈகார ஈற்று வடசொற்கள் தமிழில் இகர ஈறாக மாறும்.

நதீ	—	நதி
ஸ்த்ரீ	—	ஸ்திரி
கரிணீ	—	கரிணி

(8) ஆகார ஈற்று வடசொற்கள் தமிழில் ஐகார ஈறாக மாறும்.

மாலா	—	மாலை
பாடசாலா	—	பாடசாலை
தயா	—	தயை

(9) வடமொழியில் — மொழிக்கு முதலாகிய க (G), ஜ, ப (B) இவ் வெழுத்துக்களின்மேல் உள்ள அகர வுயிர், எகர வுயிராகத் தமிழில் வழங்குகின்றது.

கஜம்	—	கெஜம்
ஜகம்	—	செகம்
பலம்	—	பெலம்

(10) மொழி முதல் யகரம் எகரமாகும்.

யமன்	—	எமன்
யந்திரம்	—	எந்திரம்

41. வட மொழித் தத்திதாந்த நாமங்கள் :

தத்திதாந்த நாமம் என்பது — ஒரு பெயரைப் பற்றி அதன் ஈற்றில் நின்று பிறக்கும் பெயராகும்.

[தத் + ஹித + அந்தம் + நாமம் = அதனை (பெயரை)ச் சம்பந்தித்து, அதன் ஈற்றில் நின்று பிறக்கும் பெயர்.]

(1) முதலில் அகரத்தையுடைய சொற்கள் ஆகார-மாகத் திரிந்து வரும்.

தசரதன் — தாசரதி (தசரதனைச் சம்பந்தித்தவன்)
நகரம் — நாகரிகம் (நகரத்தைச் சம்பந்தித்தது)

(2) முதலில் ஆகாரத்தையுடைய சொற்கள் முதல் திரியாதே வரும்.

நாரதன் — நாரதீயம்
சாரதி — சாரத்யம்

(3) முதலில் இகர ஈகாரத்தையுடைய சொற்கள் ஐகாரமாகத் திரிந்து வரும்.

மிதிலா — மைதிலி
சிவன் — சைவன்
தீரம் — தைர்யம்
நீசம் — நைச்யம்

(4) முதலில் உகர ஊகாரத்தையுடைய சொற்கள் ஔகாரமாகத் திரிந்து வரும்.

சுகம் — சௌக்யம்
சுந்தரம் — சௌந்தர்யம்
சூரம் — சௌர்யம்
மூடம் — மௌட்யம்

(5) முதலில் எகாரத்தையுடைய சொற்கள் ஐகார-மாகத் திரிந்து வரும்.

ஏகம் — ஐக்யம்
வேதம் — வைதிகம்

(6) முதலில் ஓகாரத்தை யுடைய சொற்கள் ஔகாரமாகத் திரிந்து வரும்.

லோகம் — லௌகிகம்
கோசலம் — கௌசல்யை

(7) முதலில் 'இரு' (ஐ) என்னும் எழுத்தையுடைய சொற்கள் ஆர் எனத் திரிந்து வரும்.

இருஷி — ஆர்ஷம்
இருஹம் — கார்ஹஸ்தம்

1. பெயர்ச் சொல்

***42.** பெயர்ச் சொல்லாவது — பொருள்களை யுணர்த்தி, வேற்றுமை யுருபுகளை ஏற்க நிற்பது.

†பெயர் — (1) இடுகுறிப்பெயர் என்றும், (2) காரணப்பெயர் என்றும் இருவகைப்படும்.

†(1) இடுகுறிப்பெயராவது — (காரணங் கருதாமல்) பொருள்களுக்கு அடையாளமாக இட்ட பெயர்.

அஃது, இடுகுறிப்பொதுப் பெயர் என்றும், இடுகுறிச் சிறப்புப்பெயர் என்றும் இருவகைப்படும்.

மரம் — இடுகுறிப் பொதுப்பெயர்
பனை — இடுகுறிச் சிறப்புப்பெயர்

மரம் என்னுஞ் சொல், எல்லா மரங்களுக்கும் பொதுவாக வருதலின், அஃது இடுகுறிப் பொதுப் பெயர் ஆயிற்று.

பனை என்னுஞ் சொல், ஒருவகை மரத்திற்கே வருதலின், அஃது இடுகுறிச் சிறப்புப்பெயர் ஆயிற்று.

†(2) காரணப்பெயராவது — யாதேனும் ஒரு காரணங் கருதிப் பொருள்களுக்கு இட்ட பெயர்.

அது, காரணப் பொதுப்பெயர் என்றும், காரணச் சிறப்புப்பெயர் என்றும் இருவகைப்படும்.

அணி — காரணப் பொதுப்பெயர்
வளை — காரணச் சிறப்புப்பெயர்

அணி என்னுஞ் சொல், அணியப்படுதலாகிய காரணம்பற்றி ஆபரணங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக வழங்கி வருதலால், காரணப் பொதுப்பெயர் ஆயிற்று.

வளை என்னுஞ் சொல், வளைந்திருத்தலாகிய காரணம்பற்றி (வளையலாகிய) ஒருவகை ஆபரணத்திற்கே பெயராகி வருதலால், காரணச் சிறப்புப்பெயர் ஆயிற்று.

†43. இனி, காரண இடுகுறிப் பெயர் என்பதும் ஒன்று உண்டு. அஃதாவது, காரணம் உடையதாய், அக் காரணமுடைய பலவற்றிற்கும் செல்லாமல், ஒன்றற்கே பெயராய் வருவது.

நாற்காலி

நாற்காலி என்னுஞ் சொல், நான்கு காலையுடையது என்னும் காரணத்தையுடையது; ஆயின், நான்கு கால்களையுடைய கட்டில், மேசை முதலிய பலவற்றிற்கும் பெயராகாமல், ஒருவகை ஆசனத்திற்கே பெயராய் வருதலின், காரண இடுகுறிப்பெயர் ஆயிற்று.

*44. பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும். அவையாவன :

(1) பொருட்பெயர் (4) சினைப்பெயர்
(2) இடப்பெயர் (5) பண்புப்பெயர்
(3) காலப்பெயர் (6) தொழிற்பெயர்

என்பனவாம்.

பண்புப் பெயரைக் குணப் பெயர் என வழங்குவர்; வினையாலணையும் பெயர் தொழிற் பெயரில் அடங்கும்.

1. இராமன், பசு, நாற்காலி, பொன் — பொருட்பெயர்
2. நாடு, ஊர், தெரு, வீடு — இடப்பெயர்
3. யாண்டு, மாதம், திங்கட்கிழமை, பகல் — காலப்பெயர்
4. தலை, கிளை, இலை, பூ — சினைப்பெயர்
5. இனிமை, செம்மை, அன்பு — பண்புப்பெயர்
6. வருதல், போதல் — தொழிற்பெயர்

தட்டான், ஒற்றன், பாடுவோன் - வினையாலணையும்பெயர்.

45. தொழிற் பெயர் :

(1) விகுதிபெற்ற தொழிற் பெயர்
(2) விகுதிபெறாத தொழிற் பெயர்
(3) முதனிலைத் தொழிற் பெயர்
(4) முதனிலைதிரிந்த தொழிற் பெயர்
(5) காலங்காட்டுந் தொழிற் பெயர்
(6) எதிர்மறைத் தொழிற் பெயர்

என ஆறு வகைப்படும். அவை வருமாறு :

(1) ஒரு வினைப் பகுதி — தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, தி, சி, வி, வு, உள், காடு, பாடு, இ, மதி, அடம் முதலிய விகுதிகளில் ஏற்ற ஒன்றைப் பெற்றுவருவது விகுதிபெற்ற தொழிற் பெயராம்.

தல்	— செய்தல்	கு	— போக்கு
அல்	— நாடல்	பு	— மடிப்பு
அம்	— நோக்கம்	தி	— மறதி
ஐ	— கொலை	சி	— உணர்ச்சி
கை	— வருகை	வி	— கல்வி
வை	— பார்வை	வு	— நினைவு

உள்	— கடவுள்	இ	— வெகுளி
காடு	— வேக்காடு	மதி	— ஏற்றுமதி
பாடு	— விதைப்பாடு	அடம்	— கட்டடம்

ஒரே வினைப்பகுதி வெவ்வேறு விகுதிகளை ஏற்றுத் தொழிற் பெயராதலும் உண்டு. அவ்வாறு வரின், பொருள் மாறுபடும்.

கொள்	— கொள்ளுதல்	நட	— நடத்தல்
	கொள்ளை		நடத்தை
	கொள்கை		நடப்பு
	கொட்பு		நடை
செய்	— செயல்	கல்	— கல்வி
	செய்கை		கற்றல்
	செய்தி		கல்லுதல்
	செயற்கை		கற்பு

இவற்றின் பொருள்வேறுபாடுகளை உணர்க.

(2) பகுதி விகுதியாகப் பிரிக்கப் பெறுமல் ஒரே நிலையாக இருக்கும் தொழிற் பெயர், **விகுதிபெறுத தொழிற் பெயராம்.**

கூத்து

(3) சில வினைப் பகுதிகள், விகுதி பெறுமலே தொழிற் பெயர்ப் பொருளை உணர்த்திப் பெயராக நிற்கும். அவை **முதனிலைத் தொழிற் பெயர்களாம்.** (முதனிலை எனினும் பகுதி எனினும் ஒன்றே.)

அவனை ஒரு குட்டுக் குட்டு
அவனைக் கன்னத்தில் ஓர் **அறை** அறை
அவனை ஓர் **அடி** அடி

குறிப்பு — இவற்றில் பின் உள்ள குட்டு, அறை, அடி என்பன எவல்வினையாய் நின்றன. முன்னுள்ளவை குட்டுதல்,

அறைதல், அடித்தல் எனப் பொருள் படுவதனால் தொழிற் பெயர்கள் ஆயின. இவை முதனிலையாக நின்று தொழிற் பெயர்ப் பொருளே உணர்த்துதலின், **முதனிலைத் தொழிற் பெயர்கள்** ஆயின.

(4) சில வினைப் பகுதிகள் சிறிது மாறுபட்டுத் தொழிற் பெயர் ஆகும். அவை முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள் எனப்படும்.

சுடு	—	சூடு	(சுடுதல்)
படு	—	பாடு	(படுதல்)
பெறு	—	பேறு	(பெறுதல்)
விடு	—	வீடு	(விடுதல்)

(5) சில வினைப் பகுதிகள் — து, மை ஆகிய இரண்டு விகுதிகளில் ஒன்றையும், வினை இடைநிலையையும் பெற்றுக் **காலங்காட்டும் தொழிற் பெயர்**களாக வரும்.

து — அவன் இங்கு வந்தது நல்லகாலம். (இறந்தகாலம்)
அவன் இங்கு வருகிறது எதற்கு? (நிகழ்காலம்)
அவன் இங்கு வருவது நல்லது. (எதிர்காலம்)

மை — அவன் இங்கு வந்தமை சரியன்று. (இறந்தகாலம்)
அவன் இங்கு வருகின்றமை எதற்கு? (நிகழ்காலம்)

குறிப்பு — மை விகுதி எதிர் காலத்தில் வாராது.

(6) வினைப் பகுதிகள் — து, மை என்னும் விகுதிகளில் ஒன்றை ஈற்றிலும், எதிர்மறை விகுதியாகிய ஆகாரத்தை இடையிலும் பெற்று வருதல் **எதிர்மறைத் தொழிற் பெயராம்.**

து — செய்யாதது	மை — செய்யாமை
பாடாதது	பாடாமை
வணங்காதது	வணங்காமை

***46. வினையாலணையும் பெயர் :**

வினைமுற்றுக்கள், பெயர்ச்சொல்லின் தன்மையை யடைந்து, வேற்றுமை யுருபு ஏற்க நிற்கும்போது, அவை வினையாலணையும் பெயர் எனப்படும். [வினையால் அணையும் பெயர் - தொழிலால் வரும் பெயர்.]

படித்தான் வந்தான்

அவன் **படித்தான்** என்பதில், படித்தான் என்பது தொழிலைக் காட்டுகின்றது. **படித்தான்** வந்தான் என்பதில், **படித்தான்** என்பது படித்த மனிதனைக் காட்டுகின்றது. அதனால், இதில் **படித்தான்** என்பது வினையாலணையும் பெயர் ஆயிற்று. **படித்தானை** எனப் பிற வுருபுகளையும் ஒட்டுக.

***47. பண்புப் பெயர் :**

(1) ஒரு பண்படி — மை, ஐ, கு, பு, றி, று, அம், பம், சி, து, இல், மன் என்னும் விகுதிகளில் ஏற்ற ஒன்றைப் பெற்று வருவது **பண்புப் பெயராம்.**

மை — நன்மை	அம் — நலம்
ஐ — தொல்லை	பம் — திட்பம்
கு — நன்கு	சி — மாட்சி
பு — மாண்பு	து — நீது
றி — நன்றி	இல் — குறில்
று — நன்று	மன் — பருமன்

(2) ஒரே பண்படி, பல இறுதிநிலைகளைப் பெற்றும்வரும். அவ்வாறு வரின் பொருள் வேறுபடும்.

நல் — நன்மை	நல் — நன்று
நன்றி	நன்கு

இவற்றின் பொருள் வேறுபாடுகளை அறிக.

(3) விகுதி பெறுத பண்புப் பெயர்களும் உண்டு.

அன்பு அழகு சுவை

***48. கிளப் பெயர் :**

உறவைக் காட்டும் பெயர் **கிளப் பெயர்** ஆகும்.

தாய் அண்ணன் மாமி

முதலாயின.

***49. சாதிப் பெயர் :**

சாதியைக் காட்டும் பெயர் **சாதிப் பெயர்** ஆகும்.

இடையன் குறவன் வண்ணன்

முதலாயின.

***50. அளவுப் பெயர் :**

எண்ணல், நீட்டல், முகத்தல், எடுத்தல் ஆகிய நான்கு வகை அளவின் பெயரைக் காட்டும் பெயர் **அளவுப் பெயர்** ஆகும். [முகத்தல் - மொள்ளுதல்].

ஒன்று கஜம் ஆழாக்கு வீசை

முதலாயின.

***51. பொதுப் பெயர் :**

தான், தாம், எல்லாம் என்பன மூன்று இடங்களுக்கும் வரும் பொதுப் பெயர்களாம்.

நான் தான் நீ தான் அவன் தான் — தான்
நாம் தாம் நீர் தாம் அவர் தாம் — தாம்
நாம் எல்லாம் நீர் எல்லாம் அவர் எல்லாம் — எல்லாம்

***52. ஆகுபெயர் :**

ஒரு பொருளுக்கு இயற்கையாயுள்ள பெயர், அப் பொருளுக்கு ஒற்றுமையுடைய பிறிதொரு பொருளுக்குப் பெயராய் வரின், அஃது ஆகுபெயர் எனப்படும்.

அஃதாவது **வெள்ளை** என்னும் சொல், 'வீட்டிற்கு **வெள்ளை** அடித்தான்' என்னும்போது வெள்ளை நிறத்தையுடைய சுண்ணும்பைக் குறித்தலால், அங்கு வெள்ளை என்பது ஆகுபெயராம்.

ஆகுபெயர் பதினறு வகைப்படும் :

†(1) முதலாகுபெயர் :

தாமரை போன்ற சேவடி

இங்குத் தாமரை என்னும் முதற் பொருளின் பெயர், அதற்கு ஒற்றுமையுடைய மலராகிய சினைப் பொருளைக் குறித்தலால் முதலாகு பெயராம்.

தாமரை என்பது முதலாகிய கொடியின் பெயர். இங்கே அடிக்கு உவமையாதலால் அதன் சினையாகிய மலரைக் குறிக்கின்றது; ஆகவே அது முதலாகு பெயராயிற்று. முதலாகு பெயரைப் **பொருளாது பெயர்**|| என்று கூறுதலும் உண்டு.

†(2) சினையாகுபெயர் :

தலைக்கு நாலணு கிடைத்தது,

இங்குத் தலை என்னும் சினைப்பெயர், தலையையுடைய மனிதரைக் குறித்தலால், சினையாகு பெயராயிற்று.

[சினை - உறுப்பு]

†(3) இடவாகுபெயர் : [தானவாகுபெயர்].

நான் போகும்போது ஊர் அடங்கிவிட்டது

இங்கு ஊர் என்னும் இடப்பெயர், ஊரிலுள்ளவரைக் குறித்தலால் இடவாகுபெயராயிற்று.

†(4) தானியாகுபெயர் : [இடப்பொருளாகுபெயர்].

அவள் தலைமேலுள்ள தண்ணீரை இறக்கு

இங்குக் குடம் என்பது தானம் (இடம்) ; அதிலுள்ள தண்ணீர், தானி (இடத்திலுள்ளது). குடத்தை இறக்கு என்று சொல்லவேண்டுவதைத் தண்ணீரை இறக்கு என்பது தானியாகுபெயராம். தண்ணீராகிய தானி, குடமாகிய தானத்தை யுணர்த்தியது காண்க.

இதைத் **தானியாகு பெயர்** என்பதற்கேற்ப இடவாகு பெயரைத் **தானவாகு பெயர்** எனக் கூறுதல் ஏற்புடைத்து ; அல்லது **இடவாகு பெயர்** என்பதற்கேற்ப, **இடப்பொருளாகு பெயர்** என்றிருத்தல் நேர்.

†(5) காலவாகுபெயர் :

பொழுது சாய்ந்தது

இங்கு, பொழுது என்னுங் காலப்பெயர், சூரியனைக் குறித்தலால் காலவாகுபெயர்.

†(6) பண்பாகுபெயர் :

இந்தப் பச்சை என்ன விலை?

இங்குப் பச்சை என்னும் பண்புப்பெயர், அந்நிறத்தையுடைய மரகத மணியைக் குறித்தலால் பண்பாகுபெய-

ராயிற்று. விருந்து வந்தது என்பதும் அது. விருந்து - புதுமை. இது புதிதாக வந்த விருந்தினரைக் குறித்தல் காண்க. குணவாகு பெயர் எனப்படுவதும் இதுவே.

†(7) தொழிலாகுபெயர் :

பொங்கல் உண்டான்

பொங்கல் என்பது, பொங்குதல் என்னுந் தொழிற் பெயராம். அது, பொங்குதலால் உண்டான ஒரு வகை உணவைக் குறித்தலால், தொழிலாகு பெயராகும்.

(8) எண்ணலளவையாகுபெயர் :

பத்து வந்தாலும் பதற்றம் ஆகாது

இங்குப் பத்து என்பது, பத்துப் பொன்னைக் குறித்தலால், எண்ணலளவை யாகுபெயர் ஆயிற்று.

(9) எடுத்தலளவையாகுபெயர் :

(சர்க்கரை முதலிய பொருளை வாங்க நினைத்தவன், வணிகனிடம்) 'மணங்கு என்ன விலை?' என்பது வழக்கம்.

இங்கு மணங்கு என்னும் எடுத்த லளவையின் பெயர், அவ்வளவைக் கொண்ட பொருளைக் குறித்தலால், எடுத்தலளவை யாகுபெயர் ஆயிற்று.

(10) முகத்தலளவையாகுபெயர் :

ரூபாய்க்கு எத்தனை படி?

இங்கு, படி என்னும் முகத்தலளவையின் பெயர், அவ்வளவைக் கொண்ட தானியத்தைக் குறித்தலால், முகத்தலளவை யாகுபெயர் ஆயிற்று.

(11) நீட்டலளவையாகுபெயர் :

'சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே'

இங்குச் சாண் என்னும் நீட்டலளவையின் பெயர், அவ்வளவைக் கொண்ட வயிற்றைக் குறித்தலால், நீட்டலளவை யாகுபெயர் ஆயிற்று. நாலு முழம் கொடு என்பதும் அது.

(12) சொல்லாகுபெயர் :

அவன் என் சொல்லைக் கேட்பான்

இங்குச் சொல் என்பது, சொல்லப்படும் செய்தியைக் குறித்தலால், சொல் லாகுபெயர் ஆயிற்று.

√ (13) கருவியாகுபெயர் : [காரண ஆகுபெயர்].

திருவாசகம் படித்தான்

இங்கு வாசகம் என்னும் கருவிப்பெயர், அதன் காரிய மாகிய செய்யுளைக் குறித்தலால், கருவி யாகுபெயர் ஆயிற்று. கருவி என்பது காரணம்.

'மலர் வேய்ந்து கொள்ளும் மணம்' என்பதில் மலர் என்பது, மலரால் தொடுத்த மாலைக்கு ஆதலால், கருவி யாகுபெயராம்.

(14) காரியவாகுபெயர் :

மாது வந்தாள்

இங்கு மாது என்னும் காரியத்தின்பெயர், அதனை யுடைய காரணமாகிய பெண்ணைக் குறித்தலால், காரிய-வாகுபெயர் ஆயிற்று. [மாது என்பதற்குக் காதல் என்பது பொருள்.]

(15) கருத்தாவாகுபெயர் :

திருவள்ளுவர் கற்றார்

இங்குத் திருவள்ளுவர் என்பது, அவராற் செய்யப்பட்ட திருக்குறள் என்னும் நூலைக் குறித்தலால், கருத்தாவாகு பெயராயிற்று. [கருத்தா - செய்பவர்.]

(16) உவமையாகுபெயர் :

மயில் வந்தாள்

இங்கு மயில் என்பது, நடை சாயல் முதலியவற்றால் அதை ஒத்த ஒரு பெண்ணைக் குறித்தலால், உவமையாகுபெயர் ஆயிற்று. காளை வந்தான் என்பதும் அது.

***53. திணை :** உயர்திணை அஃறிணை

திணை என்பது வகுப்பு. அஃது இரண்டு வகைப்படும் — உயர்திணை, அஃறிணை என்பன.

உயர்திணை = உயர்வாகிய திணை.

அஃறிணை = (அல் + திணை) உயர்வு அல்லாத திணை.

மனிதர், தேவர் — உயர்திணைப் பொருள்கள்.

யானை, நாய், கல், மண் — அஃறிணைப் பொருள்கள்.

[உயிருள்ள பொருள்களுள், மனிதர் தேவர் அல்லாத பிற எல்லா வுயிர்களும், உயிரில்லாத பொருள்கள் அனைத்தும் அஃறிணைப் பொருள்களே.]

***54. பால் :**

பால் என்பது - பகுப்பு. அஃது ஐந்து வகைப்படும்—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.

(1) உயர்திணைப் பொருள்கள்—ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூவகைப்படும்.

இராமன், முருகன்	— ஆண்பாற் பெயர்.	
சீதை, வள்ளி	— பெண்பாற் பெயர்.	
புதல்வர், அரசர்	— ஆண் பன்மை	பலர்பாற் பெயர்.
புதல்வியர், அரசியர்	— பெண் பன்மை	
மக்கள்	— ஆண் பெண் பன்மை	

(2) அஃறிணைப் பொருள்கள் — ஒன்றன்பால், பலவின்பால் என இருவகைப்படும்.

குதிரை, மரம் — ஒன்றன்பால்.
குதிரைகள், மரங்கள் — பலவின்பால்.

[அஃறிணைப் பெயர்களுள் — காளை, சேவல் என ஆண்பாற் பெயர்களும், பசு, பெட்டை எனப் பெண்பாற் பெயர்களும் இருப்பினும், அஃறிணைப் பொருள்களாகிய எல்லா வுயிரினங்களுள்ளும் அவ்வகையான பாகுபாடுகள் இல்லாமையானும், உயர்திணையிற்போல, அஃறிணையில் ஆண்பால் பெண்பால்களுக்கு வினைமுற்றில் வேறுபாடு இன்மையானும் அவற்றை ஆண்பால் பெண்பால் எனப் பிரித்து வழங்குதல் இல்லை.]

(3) உயர்திணையுள் ஆணை உணர்த்தும் பால் ஆண்பாலாம். அன், ஆன், மன், மான், ன் இவ்வைந்தும் ஆண்பாலை உணர்த்தும் விகுதிகளாம்.

ஆண்பால்

அன்	—	பொன்னன்
ஆன்	—	பொருளான்
மன்	—	வடமன்
மான்	—	சோமான்
ன்	—	பிறன்

(4) உயர்திணையுள் பெண்ணை உணர்த்துஞ் சொல் பெண்பாலாம். அள், ஆள், ள், இ - இந் நான்கும் பெண்பாலை உணர்த்தும் விகுதிகளாம்.

		பெண்பால்
அள்	—	குழையள்
ஆள்	—	குழையாள்
ள்	—	பிறள்
இ	—	பொன்னி

(5) ஆண்பாலில் 'அன்' விகுதி பெற்று வரும் பெயர், பெண்பாலில் 'இ' விகுதி பெற்று வரும்.

ஆண்பால்		பெண்பால்
அரசன்	—	அரசி
ஒருத்தன்	—	ஒருத்தி
குருடன்	—	குருடி
தலைவன்	—	தலைவி
தோழன்	—	தோழி
பாங்கன்	—	பாங்கி
பாட்டன்	—	பாட்டி
பேரன்	—	பேர்த்தி
மூக்கன்	—	மூக்கி

(6) ஆண்பாலில் 'அன்' என்று முடியும் ஜாதிப் பெயர், பெண்பாலில் 'ச்' அல்லது 'இச்' இடைநிலை-யோடு 'இ' விகுதி பெற்று முடியும்.

ஆண்பால்		பெண்பால்	
இடையன்	—	இடைச்சி	
கணக்கன்	—	கணக்கச்சி	ச்-இடைநிலை.
பறையன்	—	பறைச்சி	
தச்சன்	—	தச்சிச்சி	— இச்-இடைநிலை.

(7) ஆண்பாலில் — அன், ஆன் என்னும் விகுதி-களைப்பெறும் ஜாதிப் பெயர், பெண்பாலில் 'த்' இடை-நிலையோடு 'இ' விகுதி பெறும்.

ஆண்பால்		பெண்பால்
குறவன்	—	குறத்தி
மறவன்	—	மறத்தி
தட்டான்	—	தட்டாத்தி
பார்ப்பான்	—	[1]பார்ப்பாத்தி
வண்ணன்	—	வண்ணத்தி

(8) சில பெயர்ச் சொற்கள் ஆண்பாலில் வேறுகவும், பெண்பாலில் வேறுகவும் வரும்.

ஆண்பால்		பெண்பால்
அண்ணன்	—	அக்கை
அப்பன்	—	அம்மை
தந்தை	—	தாய்
தம்பி	—	தங்கை

(9) இகரத்தை ஈற்றிலுடைய சில பெயர்ச்சொல், ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வரும்.

ஆண்பால்		பெண்பால்
(அவன்) நோயாளி	—	(அவள்) நோயாளி
(அவன்) குற்றவாளி	—	(அவள்) குற்றவாளி

(10) ஆண்பாலில் வான் என்னும் விகுதியுள்ள வட மொழிப்பெயர்கள், பெண்பாலில் 'வதி' என்று வரும்.

ஆண்பால்		பெண்பால்
குணவான்	—	குணவதி
பாக்யவான்	—	பாக்யவதி

1. பார்ப்பனன் என்னும் சொற்குப் பார்ப்பனி என்பது பெண்பால்.

(11) 'சாலி' என்பது, தமிழில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வரும். [வடமொழியில், பெண்பாலுக்குச் சாலிநீ என வரும்.]

	ஆண்பால்		பெண்பால்
(அவன்)	குணசாலி	— (அவள்)	குணசாலி
(அவன்)	தைர்யசாலி	— (அவள்)	தைர்யசாலி

(12) தமிழில் வழங்கும் வடசொற்களுள் ஆண்பாலில் இகர ஈறாக வரும் பெயர்கள், பெண்பாலில் 'னி' என்னும் எழுத்தை ஈற்றில் பெற்று வரும்.

ஆண்பால்		பெண்பால்
சக்ரவர்த்தி	—	சக்ரவர்த்தினி

(13) தமிழில்வழங்கும்வடசொற்களுள்ஆண்பாலில் னகர ஈறாகவருவது, பெண்பாலில் இகரம் சேர்ந்துவரும்.

ஆண்பால்		பெண்பால்
உபாத்யாயன்	—	உபாத்யாயனி

(14) வடசொற்களுள் சில, தமிழில் ஆண்பால் பெண்பால் இரண்டிலும் ஒரே ஈறாக வழங்கும்.

	ஆண்பால்		பெண்பால்
(அவன்)	பாவி	— (அவள்)	பாவி
(அவன்)	ரோகி	— (அவள்)	ரோகி

55. எண் :

எண் என்பது — அளவு. அஃது, (1) ஒருமை, (2) பன்மை என இரு வகைப்படும்.

(1) ஒருமை — ஒரு பொருளை உணர்த்துவது.

(2) பன்மை — ஒன்றற்கு மேற்பட்ட பொருளை உணர்த்துவது.

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமைப்பாலாம்; பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மைப்பாலாம்.

(1) அஃறிணை ஒருமைப் பெயரோடு 'கள்' விகுதி சேர்ந்தால் பன்மைப்பெயர் ஆகும்.

ஒருமை		பன்மை
யானை	—	யானைகள்
கால்	—	கால்கள்
வேர்	—	வேர்கள்
வீடு	—	வீடுகள்

குறிப்பு : தமிழில் பேசும்போது, கள் விகுதி சேர்க்காமல் பேசுதலே வழக்கு.

பத்துப் புத்தகம் வாங்கினேன்
அவனுக்கு நாலு வீடு இருக்கிறது

(2) ஆண்பாலில் — அன் என்றும், பெண்பாலில் 'அள்' என்றும் வரும் ஒருமைப் பெயர்கள் பலர்பால் ஆகும்போது, 'ர்' என்றாகி, அதனோடு 'கள்' என்பதும் சேரப் பெறும்.

ஆண்பால்	பெண்பால்	இருபாற் பன்மை
அவன்	— அவள்	— அவர், அவர்கள்
இவன்	— இவள்	— இவர், இவர்கள்
எவன்	— எவள்	— எவர், எவர்கள்
மற்றவன்	— மற்றவள்	— மற்றவர், மற்றவர்கள்

(3) 'ஆர்' என்பது மரியாதை ஒருமையாக வரும்.

ஒருமை		மரியாதை ஒருமை
தமையன்	—	தமையனார்
அவ்வை	—	அவ்வையார்

ஒருமை		மரியாதை ஒருமை
தாய்	—	தாயார்
தந்தை	—	தந்தையார்
பாட்டி	—	பாட்டியார்
அரசி	—	அரசியார்

†(4) அர் என்பது பன்மையைக் குறித்தே வரும்.

ஒருமை		பன்மை
தாய்	—	தாயர்
தந்தை	—	தந்தையர்
பாட்டி	—	பாட்டியர்
அரசி	—	அரசியர்

†(5) 'மார்' என்பது பலர்பாலை உணர்த்த வரும். அதனோடு 'கள்' விகுதி சேர்ந்து வருதலும் உண்டு.

ஒருமை		பன்மை
குரு	—	குருமார் குருமார்கள்
செட்டி	—	செட்டிமார் செட்டிமார்கள்
தம்பி	—	தம்பிமார் தம்பிமார்கள்
துரை	—	துரைமார் துரைமார்கள்
தோழி	—	தோழிமார் தோழிமார்கள்
பாங்கி	—	பாங்கிமார் பாங்கிமார்கள்
மந்திரி	—	மந்திரிமார் மந்திரிமார்கள்

56. இடம் :

இடம் - (1) தன்மை, (2) முன்னிலை, (3) படர்க்கை என மூன்று வகையாம்.

(1) பேசுவோன் இடம் தன்மை எனப்படும்.

யான்
நான் } — தன்மை ஒருமை

நாம் — தன்மைப் பன்மை - தன்மை யோடு முன்னிலை கூடியது.

யாம்
யாங்கள்
தாங்கள் } — தன்மைப் பன்மை - தன்மை யோடு படர்க்கை கூடியது.

(2) தன்மை யிடத்தவன் பேசுவதைக் கேட்டு முன்னிற்பவனது இடம் முன்னிலை எனப்படும்.

நீ — முன்னிலை ஒருமை

நீர்
நீயிர்
நீவிர்
நீங்கள் } — முன்னிலைப் பன்மை

(3) தன்மை முன்னிலை இடத்தவர்களால் பேசப்படும் செய்தி சென்று படரும் இடம் படர்க்கை எனப்படும்.

அவன் — படர்க்கை ஆண்பால்
அவள் — படர்க்கைப் பெண்பால்
அவர், அவர்கள் — படர்க்கைப் பலர்பால்
அது — படர்க்கை ஒன்றன்பால்
அவை — படர்க்கைப் பலவின்பால்

***57. வேற்றுமை :**

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம். அஃது எட்டு வகைப்படும். அவை :

வேற்றுமை	உருபு
முதல் வேற்றுமை	——
இரண்டாம் வேற்றுமை	ஐ
மூன்றும் வேற்றுமை	ஆல், ஓடு
நான்காம் வேற்றுமை	கு
ஐந்தாம் வேற்றுமை	இன்
ஆறும் வேற்றுமை	அது
ஏழாம் வேற்றுமை	இல், கண்
எட்டாம் வேற்றுமை	——

என்பனவாம்.

†(1) பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமையாம் ; அஃது எழுவாய் வேற்றுமை எனவும்படும். எழுவாய் வேற்றுமையின் பொருள் — வினை, பெயர், வினை இவற்றுள் ஒன்றைக் கொள்ளுதல்.

முருகன் வந்தான் — வினையைக் கொண்டது
அஃது என் தோழி — பெயரைக் கொண்டது
அவர் யார்? — வினாவைக் கொண்டது

†(2) இரண்டாம் வேற்றுமையின் உருபு — ஐ என்பதாம். அதன் பொருள் — ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பனவாம். இது, செயப்படுபொருள் வேற்றுமை எனவும் படும்.

குடத்தைச் செய்தான் — ஆக்கப்படு பொருள்
வீட்டை இடித்தான் — அழிக்கப்படு பொருள்
ஊரைச் சேர்ந்தான் — அடையப்படு பொருள்

மாட்டை விற்றான் — நீக்கப்படு பொருள்
புலியை நிகர்த்தான் — ஒக்கப்படு பொருள்
பொன்னை உடையான் — உடைமைப் பொருள்

(3) மூன்றும் வேற்றுமையின் உருபு — ஆல், ஐ, ஓடு, ஓடு என்பனவாம்; அவற்றின் பொருள் — கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பன.

குறிப்பு: கருவிப்பொருள், கருத்தாப் பொருள் இவ் விரண்டற்கும் **ஆல்** உருபு வரும்; உடனிகழ்ச்சிப் பொருளுக்கு ஓடு, ஓடு உருபுகள் வரும்.

(i) கருவி — முதற் கருவி, துணைக் கருவி என இருவகைப்படும்.

(1) **முதற் கருவி** — தானே செயப்படு பொருளாவதாய் உள்ளது.

மண்ணிற் செய்த குடம் — மண் முதற் கருவி.

மண்ணே குடமாதல் காண்க.

(2) **துணைக் கருவி** — முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் உடனின்று உதவுவது.

உளியாற் செய்த கதவு — உளி துணைக் கருவி.

மரம், கதவாக அமையுமளவும் உளி துணையாதல் காண்க.

(ii) கருத்தா — இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இரண்டு வகைப்படும்.

(1) **இயற்றுதற் கருத்தா** — தொழிலைச் செய்யும் கருத்தா.
தச்சனால் ஆகிய கோயில் — தச்சன் இயற்றுதற் கருத்தா.

(2) **ஏவுதற் கருத்தா** — தொழிலைச் செய்வித்தும் கருத்தா.
அரசனால் ஆகிய கோயில் — அரசன் ஏவுதற் கருத்தா.

†(iii) உடனிகழ்ச்சிப் பொருள் — வினை கொண்டு முடியும் பொருளின் தொழிலை, தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.

தகப்பனோடு மகன் வந்தான் — உடனிகழ்ச்சி

ஈண்டு, தகப்பனது வருகைத் தொழில் மகனுக்கும் உடன் நிகழ்ந்தமை அறிக.

(4) நான்காம் வேற்றுமையின் உருபு — கு என்பதாம். அதன் பொருள் — கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்பனவாம்.

யாசகர்க்குப் **பொன் கொடுத்தான்**	— கொடை
பாம்புக்குப் **பகை** கருடன்	— பகை
இராமனுக்கு **நண்பன்** சுக்ரீவன்	— நேர்ச்சி
அரசர்க்குச் **செங்கோல் உரியது**	— தகுதி
காப்புக்குப் **பொன் கொடுத்தான்**	— அதுவாதல்
கூலிக்கு வேலை செய்தான்	— பொருட்டு
தசரதனுக்கு **மகன்** இராமன்	— முறை

குறிப்பு : தசரதனது மகன் இராமன் என்பது தவருகும். **அது** என்னும் உருபு அஃறிணை ஒருமைக்கே வருதல் முறை ; அவ்வுருபு உயர்திணைக்கு வருதல் அமைதியாகாது. அன்றியும், ஆறும் வேற்றுமைக்கு முறைப் பொருள் இன்மையும் அறிக. ஆகலின், ஆறும் வேற்றுமைப்பொருளில், **தசரதன் மகன்** என்றுவது, **தசரதனுடைய மகன்** என்றுவது எழுதுதலே அமைதி.

†(5) ஐந்தாம் வேற்றுமையின் உருபு — இன், இல் என்பனவாம். அவற்றின் பொருள் — நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பன.

மலையின் **வீழருவி**	— நீக்கப் பொருள்
காக்கையிற் **கரிது** களம்பழம்	— ஒப்புப் பொருள்
மதுரையின் **வடக்குச் சென்னை**	— எல்லைப் பொருள்
கல்வியிற் **பெரியன் கம்பன்**	— ஏதுப் பொருள்

நீக்கப்பொருளில் இன் உருபோடு நின்று என்னும் சொல்லுருபும் சேர்ந்துவரும்.

வீட்டினின்று புறப்பட்டான்.

குறிப்பு : காக்கையிற் கரிது களம்பழம் என்பதனை காக்கைபோலக் கரிது எனப்பொருள் கொண்டால் ஒப்புப் பொருள்; அதனையே காக்கையைக் காட்டிலும் கரிது எனப் பொருள் கொண்டால், (பண்பு) எல்லைப்பொருள் ஆகும்.

(6) ஆறும் வேற்றுமையின் உருபு — அது, அ, உடைய என மூன்றும். அவற்றின் பொருள் — பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபுணக்கம் ஆகிய ஐந்து தற்கிழமையும், பொருள், இடம், காலம் ஆகிய மூன்று பிறிதின்கிழமையும் ஆகும்.

குறிப்பு : அது என்னும் உருபு அஃறிணை ஒருமைக்கும், அ என்னும் உருபு அஃறிணைப் பன்மைக்கும், உடைய என்னும் உருபு இருதிணையிலும் ஒருமை பன்மைகளுக்கும் வருதல் அமைதி.

எனது புத்தகம்	என்னுடைய மகன்
என கைகள்	என்னுடைய வீடுகள்

குறிப்பு : என கைகள் என்பது உரைநடையில் வாராது; செய்யுளிலேயே வரும். உரைநடையில், என் கைகள் என்றாவது, என்னுடைய கைகள் என்றாவது வரும்.

தற்கிழமையாவது — தன்னைவிட்டு நீங்காத உரிமையுடையது.

எனது **கை**

பிறிதின்கிழமையாவது — தன்னினின்று நீங்கியதாயும் உரிமையுடையதாயும் இருப்பது.

எனது **புத்தகம்**

தற்கிழமை

இராமனது **கருமை** — குணப்பண்புத் தற்கிழமை
இராமனது **வாவு** — தொழிற்பண்புத் தற்கிழமை
இராமனது **கை** — உறுப்புத் தற்கிழமை
மனிதரது **கூட்டம்** — ஒன்றன்கூட்டத் தற்கிழமை
படைகளது **தோகுதி** — பலவின்கூட்டத் தற்கிழமை
நெல்லினது **பொரி** — திரிபினுக்கத் தற்கிழமை

[திரிபினுக்கம் ஆவது, ஒன்று மற்றொன்றாகத் திரிதல்.]

பிறிதின்கிழமை

முருகனது **பசு** — பொருட் பிறிதின்கிழமை
முருகனது **வீடு** — இடப் பிறிதின்கிழமை
முருகனது **நாள்** — காலப் பிறிதின்கிழமை

(7) ஏழாம் வேற்றுமையின் உருபு — இல், கண், தலை, முகம், கால், இடம் முதலிய பலவாம்.

(1) பொருள் (3) காலம் (5) குணம்
(2) இடம் (4) சினை (6) தொழில்

ஆகிய ஆறும் தற்கிழமை, பிறிதின்கிழமை இரண்டற்-கும் இடமாய் நிற்றல் அவற்றின் பொருளாம்.

(1) பொருள் { மணியில் ஒளி — பொருள் இடமான தற்கிழமை
பனையில் அன்றில் ,, பிறிதின்கிழமை

(2) இடம் { ஊரில் வீடு — இடம் இடமான தற்கிழமை
ஆகாயத்தில் பருந்து ,, பிறிதின்கிழமை

(3) காலம் { நாளில் நாழிகை — காலம் இடமான தற்கிழமை
ஆடியில் பாதிரி பூத்தது ,, பிறிதின்கிழமை

(4) சினை { கையில் விரல் — சினை இடமான தற்கிழமை
கையில் மோதிரம் ,, பிறிதின்கிழமை

(5) குணம் { கருமையில் அழகு-குணம் இடமான தற்கிழமை
இளமையில் செல்வம் ,, பிறிதின்கிழமை

(6) தொழில் { ஆட்டத்தில் அபிநயம் தொழிலிடமான தற்கிழமை
ஆட்டத்தில் பாட்டு ,, பிறிதின்கிழமை

†(8) எட்டாம் வேற்றுமையின் உருபு — பெயரின் ஈறு திரிதல், ஈறு கெடுதல், ஈறு மிகுதல், ஈற்றயலெழுத்-துத் திரிதல், ஈறு இயல்பாதல் முதலியனவாம். இவற்-றின் பொருள், படர்க்கைப் பொருளை முன்னிலையாக அழைத்தல். இதனை விளிவேற்றுமை என்பதேவழக்கு.

அம்மை — அம்மா (ஈறு திரிதல்.)
அரசன் — அரச (ஈறு கெடுதல்.)
மகன் — மகனே (ஈறு மிகுதல்.)
மக்கள் — மக்காள் (ஈற்றயலெழுத்துத் திரிதல்.)
தம்பி — தம்பி (இயல்பு.)

(9) பொதுப் பெயரின் இறுதியிலுள்ள ஐகாரம், விளியில் ஆ அல்லது ஆய், ஏ என்று திரியும்.

அம்மை — அம்மா
பிள்ளை — பிள்ளாய்
அன்னை — அன்னே

(10) உயர்திணை, அஃறிணைப் பெயர்களில் ஈற்று ஐகாரம், விளியில் ஆய் எனத் திரியும்.

உயர்திணை		அஃறிணை	
நங்கை	— நங்காய்	நாரை	— நாராய்
மங்கை	— மங்காய்	கிள்ளை	— கிள்ளாய்

(11) சில ஆண்பாற் பெயரீறுகள், விளியில் ஈறு கெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரம் மிகுத-

லும், ஏகாரம் மிகுதலும், ஈறு கெட்டு அயல் அகரம் ஏகாரமாதலும் உண்டு.

அப்பன் — அப்பா
அண்ணன் — அண்ணு
} ஈறுகெட்டு அயல் நீளல்.

அப்பன் — அப்பாவோ
அண்ணன் — அண்ணுவோ
} ஈறுகெட்டு அயல் நீண்டு ஓகாரம் மிகுதல்.

அப்பன் — அப்பாவே
ஐயன் — ஐயாவே
} ஈறுகெட்டு அயல் நீண்டு ஏகாரம் மிகுதல்.

ஐயன் — ஐயே
அண்ணன் — அண்ணே
} ஈறுகெட்டு அயல் அகரம் ஏகாரம் ஆதல்.

குறிப்பு : ஓகாரம் மிகுதல் புலம்பலுக்கே கொள்க.

(12) விளி, அண்மைவிளி என்றும் சேய்மைவிளி என்றும் இரண்டு வகைப்படும்.

[அண்மை — சமீபம்; சேய்மை — தூரம்]

(13) அண்மைவிளி இயல்பாக வரும்; சேய்மை-விளி முன் சொன்னவாறு திரிந்தும் அளபெடுத்தும் வரும்.

தம்பி — அண்மை விளி

தம்பீ, அப்பா
தம்பீஇ
} — சேய்மை விளி

†58. விளிக்கப்படாத பெயர்கள் :

தன்மைப் பெயர்கள், முன்னிலைப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், வினாப் பெயர்கள், தமன், நுமன் முதலிய இழிப் பெயர்கள் இவை விளிவேற்றுமை-யில் வருவதில்லை. [தமன் - தம்மைச் சார்ந்தவன்; நுமன் - நும்மைச் சார்ந்தவன்.]

***59.** வேற்றுமையில் வேறுபடும் பெயர்கள் :

(1) ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய ஆறு உருபுகளையும் ஏற்கும்போது,

தான்	என்பது	தன்	எனவும்,
தாம்	என்பது	தம்	எனவும்,
யான்	என்பது	என்	எனவும்,
யாம்	என்பது	எம்	எனவும்,
நாம்	என்பது	நம்	எனவும்,
நீ	என்பது	நின், உன்	எனவும்,
நீர்	என்பது	நும், உம்	எனவும்,

முறையே விகாரப்பட்டு வரும். குவ்வுருபு வரும்போது, அ என்பது இடையே வரும்.

வேற்றுமை	தான்	தாம்	யான்	யாம்
2	தன்னை	தம்மை	என்னை	எம்மை
3	தன்னால்	தம்மால்	என்னால்	எம்மால்
4	தனக்கு	தமக்கு	எனக்கு	எமக்கு
5	தன்னின்	தம்மின்	என்னின்	எம்மின்
6	தனது	தமது	எனது	எமது
7	தன்கண்	தங்கண்	என்கண்	எங்கண்

வேற்றுமை	நாம்	நீ		நீர்	
2	நம்மை	நின்னை	உன்னை	நும்மை	உம்மை
3	நம்மால்	நின்னால்	உன்னால்	நும்மால்	உம்மால்
4	நமக்கு	நினக்கு	உனக்கு	நுமக்கு	உமக்கு
5	நம்மின்	நின்னின்	உன்னின்	நும்மின்	உம்மின்
6	நமது	நினது	உனது	நுமது	உமது
7	நங்கண்	நின்கண்	உன்கண்	நுங்கண்	உங்கண்

†(2) எழுவாய் வேற்றுமையும் விளிவேற்றுமையும் தவிர, மற்ற வேற்றுமைகள் — **இன், அன், அ, அத்து, அற்று** என்னும் சாரியைகளில் ஒன்றைப்பெற்று வரும்.

	பெயர்	சாரியை	உருபு
ஆவினை	— (ஆ	+ **இன்**	+ ஐ)
அதனால்	— (அது	+ **அன்**	+ ஆல்)
எனக்கு	— (என்	+ **அ**	+ கு)
மரத்தால்	— (மரம்	+ **அத்து**	+ ஆல்)
அவற்றில்	— (அவ்	+ **அற்று**	+ இல்)

†(3) மகர ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது மகரங் கெட அத்துச் சாரியை பெறும்; பெறுமிடத்-துச் சாரியை முதலிலுள்ள அகரம் கெடும்.

குளத்தை — (குளம் + **அத்து** + ஐ)

†(4) எல்லாம் என்பது மகரம் கெட அற்றுச் சாரியையும், உருபுக்குப் பின்னுல் உம் என்னும் இடைச் சொல்லும் பெறும்.

எல்லாவற்றையும் — (எல்லாம் + **அற்று** + ஐ + உம்)
எல்லாவற்றாலும் — (எல்லாம் + **அற்று** + ஆல் + உம்)

†(5) எண்ணுப் பெயர்கள், வேற்றுமை யுருபை ஏற்கையில் அன்சாரியை பெறும்.

ஒன்றனை — (ஒன்று + **அன்** + ஐ)

†(6) பல, சில என்னும் பெயர்கள் வேற்றுமை யுருபு ஏற்கையில், அற்றுச்சாரியை பெறும்.

பலவற்றை (பல + **அற்று** + ஐ)
சிலவற்றை (சில + **அற்று** + ஐ)

குறிப்பு : பல என்பது **இன்** சாரியை பெற்று, **பலவின் பால்** என வந்துளது.

†(7) நான் என்பது எழுவாய் வேற்றுமையில் மாத்திரமே வரும் ; மற்ற வேற்றுமை யுருபுகளை ஏற்காது.

(8) எல்லைப் பொருளில் வரும் இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், அது, அ, உடைய என்னும் ஆறும் வேற்றுமை உருபும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும்.

மதுரையின் வடக்குச் சிதம்பரம்
மரத்தினது கிளை
தன கைகள்
இராமனுடைய தம்பி

(9) மற்ற வேற்றுமைகள் வினைச் சொல்லைக் கொண்டு முடியும்.

1. குதிரை ஓடினது
2. பழத்தைத் தின்றான்
3. பிரம்பால் அடித்தான்
4. எனக்குக் கொடுத்தான்
5. ஊரினின்று வந்தான்
7. வீட்டில் இருக்கிறான்

(10) விளிப் பெயர்கள் எவ்வினை கொண்டு முடியும்.

அண்ணா வா

(11) நான்காம் வேற்றுமை உருபும், ஏழாம் வேற்றுமை உருபும் வினையோடு கூடிவரும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும்.

நோய்க்குக் கொடுக்கும் மருந்து
பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகள்

2. வினைச் சொல்

*60. வினைச் சொல்லாவது — ஒரு பொருளின் தொழிலைக் காட்டுவது; அது வேற்றுமை யுருபை ஏற்காது. வினைச்சொல் (1) தெரிநிலைவினை, (2) குறிப்பு வினை என இரு வகைப்படும்.

†(1) தெரிநிலைவினையாவது — காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது. அது, பகுதியினால் செயலையும் (தொழிலையும்), இடைநிலையால் காலத்தையும், விகுதியினால் செய்பவனையும் (கர்த்தாவையும்) வெளிப்படையாகக் காட்டும். நிலம், கருவி, செயப்படுபொருள் இம்மூன்றனையும் குறிப்பாகக் காட்டும்; ஆகவே, வினைச் சொல் — செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபோருள் ஆகிய ஆறும் உணர்த்தும் என அறிக.

அங்கையைத் தைத்தான்

தைத்தான் என்னும் வினைச் சொல்லில், தைத்தலாகிய செயலும், தைக்கும் யந்திரம் ஊசி முதலிய கருவியும், தைத்த இடமும், காலமும் (இறந்த காலமும்), தையற்காரனாகிய கர்த்தாவும், அங்கியாகிய செயப்படு பொருளும் அறியலாகும்; ஆனால், சில வினைச்சொற்களில் செயப்படு பொருள் குறைந்தும் வரும்.

நடந்தான் — இதில் செயப்படுபொருள் குறைந்திருப்பதை யறிக. இவ்வாறு செயப்படுபொருள் குறைந்திருக்கும் வினைச் சொல், செயப்படுபோருள் குன்றியவினை எனப்படும்.

மேற்காட்டியவாறு ஆறு உறுப்புக்களும் குறையாமலிருக்கும் வினைச்சொல் செயப்படுபோருள் குன்றாவினை எனப்படும்.

†(2) **குறிப்புவினை**யாவது — செயலையும் காலத்தையும் குறிப்பாகக் காட்டுவது. அது — பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகப் பிறக்கும்.

பொன்னன்	— பொருளடியாகப் பிறந்தது.
பட்டணத்தான்	— இடமடியாகப் பிறந்தது.
திருவோணத்தான்	— காலமடியாகப் பிறந்தது.
நெடும்பல்லன்	— சினையடியாகப் பிறந்தது.
கறுப்பன்	— குணமடியாகப் பிறந்தது.
ஒற்றன்	— தொழிலடியாகப் பிறந்தது.

பொன்னன் என்பது — பொன்னை யுடையவனை **யிருந்தான்**, பொன்னை யுடையவனை **யிருக்கிறான்**, பொன்னை யுடையவனை **யிருப்பான்** எனப் பொருள்படுமிடத்து, குறிப்புவினை முற்றுகும்; இவ்வாறே பிறவற்றிலுங் காண்க.

***61. காலங்கள் :**

காலம் மூன்று வகை: அவை — (1) இறந்தகாலம், (2) நிகழ்காலம், (3) எதிர்காலம் என்பனவாம்.

(1) **இறந்தகாலம்** — தொழில் முன்பே நடந்துவிட்டதை உணர்த்தும்.

படித்தான்

(2) **நிகழ்காலம்** — தொழில் இப்போது நடக்கிறதை உணர்த்தும்.

படிக்கிறான்

(3) **எதிர்காலம்** — தொழில் இனி நடக்கப்போவதை உணர்த்தும்.

படிப்பான்

†(4) இனி, இறந்தகாலத்தை—இறந்தகாலத்தில் இறந்தகாலம், இறந்தகாலத்தில் நிகழ்காலம், இறந்தகாலத்தில் எதிர்காலம் என மூன்று காலமாகப் பிரிக்கலாம்.

நேற்று வந்திருந்தான் — இறந்தகாலத்தில் இறந்தகாலம்
நேற்றே வந்திருக்கிறான்— இறந்தகாலத்தில் நிகழ்காலம்
நேற்றே வந்திருப்பான் — இறந்தகாலத்தில் எதிர்காலம்

†(5) நிகழ்காலத்தை — நிகழ்காலத்தில் இறந்தகாலம், நிகழ்காலத்தில் நிகழ்காலம், நிகழ்காலத்தில் எதிர்காலம் என மூன்று காலமாகப் பிரிக்கலாம்.

வந்துகொண்டிருந்தான் — நிகழ்காலத்தில் இறந்தகாலம்
வந்துகொண்டிருக்கிறான் — நிகழ்காலத்தில் நிகழ்காலம்
வந்துகொண்டிருப்பான் — நிகழ்காலத்தில் எதிர்காலம்

***62.** வினையின் வகைகள் :

வினைச்சொற்கள் — வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

***63.** வினைமுற்று :

வினைமுற்றுவது — வினை முடிந்ததை யுணர்த்துஞ் சொல். வினைமுற்றுக்களுள் — தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும், விகுதியால் பால் இடங்களைக் காட்டும் ; படர்க்கை வினைமுற்று, இவற்றோடு திணையையும் காட்டும்.

படித்தேன் படித்தாய்

இவற்றில் விகுதிகள், பால் இடங்களைக் காட்டின.

படித்தான்

இதில் விகுதி, திணை பால் இடங்களைக் காட்டிற்று.

*64. தன்வினை, பிறவினை :

வினைச்சொற்கள் — (1) தன்வினை, (2) பிறவினை என இருவகைப்படும்.

(1) தன்வினையாவது — ஒருவன் தானேச் செய்யும் செயலைத் தெரிவிப்பது.

அவன் படித்தான்

படித்தான் என்னும் வினைச்சொல், ஒருவன் தானே செய்த செயலைத் தெரிவித்தது.

(2) பிறவினையாவது — ஒரு தொழிலைச் செய்விப்பவனது செயலைக் குறிப்பது.

அண்ணன் தம்பியைப் படிப்பித்தான்

இதில், தம்பி தொழில் படித்தல், அண்ணன் தொழில் அவனைப் படிக்கும்படி செய்தல்; ஆதலால், படிப்பித்தான் என்பது பிறவினையாயிற்று.

†(3) தன்வினைப் பகுதிகள் — வி, பி, கு, சு, டு, து, பு, று எனனும் விகுதிகளில் ஏற்ற ஒன்றனைப் பெற்றுப் பிறவினையாகும்.

செய்	— செய்வி	(வி)
உண்	— உண்பி	(பி)
போ	— போக்கு	(கு)
பாய்	— பாய்ச்சு	(சு)
உருள்	— உருட்டு[1]	(டு)
நட	— நடத்து	(து)
பர	— பரப்பு	(பு)
துயில்	— துயிற்று[1]	(று)

1. இச் சொற்களிலும் பிறவினையைக் காட்டவந்தது, து என்பதே; அது, டு ஆகவும் று ஆகவும் திரிந்துளது என அறிக.

†(4) சில தன்வினைப் பகுதிகள் பிறவினையாகும் போது, இடையிலுள்ள மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரியும்.

திருந்து — திருத்து
அடங்கு — அடக்கு

†(5) சில தன்வினைப் பகுதிகள் பிறவினை யாகும் போது, இடையே வல்லொற்று மிகப் பெறும்.

ஓடு — ஓட்டு
உருகு — உருக்கு

†(6) வினையெச்சங்களோடு செய்தான், வைத்தான் என்னும் சொற்கள் சேர்ந்து பிறவினைப் பொருள் தருதலும் உண்டு.

ஆசிரியன், மாணக்கரைப் **படிக்கச் செய்தான்**
அண்ணன், தம்பியைப் **படிக்க வைத்தான்**

இவற்றில், படிக்க என்னும் வினையெச்சத்தோடு, செய்தான், வைத்தான் என்பவை சேர்ந்து பிறவினைப் பொருள் தந்தமை அறிக.

†65. செய்வினை, செயப்பாட்டுவினை :

(1) செய்வினையாவது—ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் சாதாரண வினைச்சொல்லாம்.

இராமன் இராவணனைக் **கொன்றான்**

இதில், கொன்றான் என்பது இராமன் செய்த தொழிலாதலின், செய்வினையாயிற்று.

(2) செயப்பாட்டுவினையாவது — ஒரு பொருளின் தொழிலினாலாகிய செயலை உணர்த்துவதாம்.

இராமனால் இராவணன் கொல்லப்பட்டான்

இதில், இராமனது தொழில் கொல்லுதல்; அதனாலாயது இராவணன் படுதல்; ஆதலின், இது செயப்பாட்டுவினை ஆயிற்று.

குறிப்பு: வினையெச்சச் சொல்லோடு **படு** என்னும் சொல் சேர்ந்து செயப்பாட்டுவினையாக வரும். செய்வினையில் **செயப்படுபொருளா** யிருக்கும் சொல், செயப்பாட்டு வினையில் **எழுவாயாக** இருக்கும்; செய்வினையில் **எழுவாயாக** இருக்கும் சொல், செயப்பாட்டு வினையில் **மூன்றும் வேற்றுமைக் கருத்தாவாகும்.**

(3) படு விகுதி சேராமல், **உண்** என்னும் சொல் சேர்ந்து செயப்பாட்டுவினைப் பொருளில் வருதலும் உண்டு.

இராமனால் இராவணன் கொலையுண்டான்.

***66. உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை :**

எல்லா வினைச் சொற்களும் — (1) உடன்பாட்டு வினை, (2) எதிர்மறை வினை என இரு வகைப்படும்.

(1) உடன்பாட்டுவினை—தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும்.

உண்டான் **உண்டேன்**

(2) எதிர்மறைவினை—தொழில் நிகழாமையையும், மறுத்தலையும் உணர்த்தும்.

உண்டிலன் — தொழில் நிகழாமையை உணர்த்திற்று
உண்ணேன் — தொழில் மறுத்தலை உணர்த்திற்று

எதிர்மறைவினைச் சொல் பகுதியும் காலங் காட்டும் இடைநிலையும் இல் என்னும் எதிர்மறைச் சொல்லும் விகுதியும் சேர்ந்து வரும்.

உண்டிலன் உண்கின்றிலன் உண்கிலன்

இதில் — உண் பகுதி, ட் முதலியன காலங் காட்டும் இடைநிலைகள், இல் எதிர்மறை விகுதி, அன் - விகுதி.

பகுதிகளின்மேல் எதிர்மறைவிகுதி புணர்ந்து கெட்டும் எதிர்மறைவினை வரப் பெறும்; இது முக்காலத்துக்கும் பொதுவாம்.

உண்ணுன்

உண் பகுதி, ஆ எதிர்மறை விகுதி, ண் சந்தி, ஆன் தன்மை யொருமை விகுதி. இதில் எதிர்மறை ஆகார விகுதி புணர்ந்து கெட்டது.

***67.** எச்ச வினைகள் :

எச்சம் என்பது குறைவு; அஃதாவது — விகுதியால் திணை, பால், இடங்களைக் காட்டாமல் நிற்பது.

எச்சம் — பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

பெயரைக் கொண்டுமுடியும் எச்சம் பெயரெச்சம்; வினையைக் கொண்டுமுடியும் எச்சம் வினையெச்சம்.

படித்த பாடம் — (பெயரெச்சம்)
படித்துப் போனான் — (வினையெச்சம்)

இங்கே, படித்த என்னுஞ் சொல்லிலுள்ள அகர விகுதியும், படித்து என்னுஞ் சொல்லிலுள்ள உகர விகுதியும்

திணை, பால், இடங்களைக் காட்டாமல், எச்ச விகுதிகளாகி, முறையே பெயரையும் வினையையுங் கொண்டு முடிந்தமை காண்க.

***68. பெயரெச்சங்கள் :**

தெரிநிலைப் பெயரெச்சம் — இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என மூன்று வகைப்படும்.

(1) இறந்தகால நிகழ்காலப் பெயரெச்சங்கள் காலங் காட்டும் இடைநிலைகளோடு அகர விகுதி பெற்றுவரும்.

படித்த பையன் — இறந்தகாலப் பெயரெச்சம்
படிக்கின்ற பையன் — நிகழ்காலப் பெயரெச்சம்

(2) எதிர்காலப் பெயரெச்சம், இடைநிலை பெறாமல் உம் விகுதி பெற்று வரும். அவ் விகுதியே காலம் காட்டும். அவற்றில் சில சொற்கள் கு என்னும் சாரியையும் பெறும்.

உண்ணும் பையன்.
படிக்கும் பையன் — சாரியை பெற்றது

†(3) குறிப்புப் பெயரெச்சம் — காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், பெயரைக்கொண்டு முடியும்.

பெரிய பையன் **சிறிய** வீடு **கரிய** குதிரை

†(4) எதிர்மறைப் பெயரெச்சம் ஆகார விகுதியும், தகர எழுத்துப்பேறும், அகர விகுதியும் பெற்றுவரும்.

படியாத பாடம்

படியாத என்பது, படி என்னும் பகுதியும், எதிர்மறை ஆகார விகுதியும், தகர எழுத்துப் பேறும், அகர விகுதியும் பெற்று வந்தது.

†(5) இஃது ஈறு கெட்டும் வரும்; அப்போது, ஈறுகேட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

படியாப் பாடம்

***69.** வினை எச்சங்கள்:

தெரிநிலை வினை எச்சம் — இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

(1) இறந்தகால வினையெச்சம், பகுதியின்மேல், இறந்தகாலஇடைநிலைகளோடுஉகர விகுதி பெற்றுவரும்.

படித்து வந்தான் — (படி + த் + உ)
உண்டு போனான் — (உண் + [1]ட் + உ)

இது, பகுதியோடு, இகர விகுதியும் யகர மெய்யும் பெற்றும் வரும்.

ஓடி வந்தான் — (ஓடு + இ)
போய் வந்தான் — (போ + ய்)

(2) நிகழ்கால வினையெச்சம் — பகுதியோடு அகர விகுதி பெற்று, கு என்னும் சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

படிக்க — (படி + கு + அ) — குச்சாரியை பெற்றது.
எண்ண — (எண் + — + அ) — குச்சாரியை பெறாதது.

(3) எதிர்கால வினையெச்சம் — இன், ஆல், கால், கடை, இடத்து, [2]வான், [2]பான், பாக்கு என்னும் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

---

1. த் என்பதே ட் ஆக மாறியது என அறிக. 2. வான், பான் என்பவற்றில் ஆன் என்பதே விகுதி என்றும், வ், ப் எதிர்கால இடைநிலை என்றும் கொள்ளுவர்.

செய்யின்	செய்தவிடத்து
செய்தால்	செய்வான் — செய்ய
செய்தக்கால்	உண்பான் — உண்ண
செய்தக்கடை	உண்பாக்து — உண்ண

(4) இன் விகுதி — பகுதியோடு கு என்னும் சாரியை பெற்றும் பெறுதும் வரும்.

படிக்கின் — (படி + கு + இன்)
உண்ணின் — (உண் + — + இன்)

(5) ஆல் விகுதி — பெரும்பாலும் துச் சாரியையும், சிறுபான்மை இன் சாரியையும் பெற்றும், சில இடத்தில் சாரியை பெறுமலும் வரும்.

படித்தால் — (படி + து + ஆல்)
ஆடினால் — (ஆடு + இன் + ஆல்)
விட்டால் — (விடு + — + ஆல்)

(6) கால் விகுதி — து, அ ஆகிய இரண்டு சாரியை பெறும்.

படித்தக்கால் — (படி + து + அ + கால்)
உண்டக்கால் — (உண் + து + அ + கால்)

†(7) செய்யா என்னும் வினையெச்சம் — பகுதியோடு ஆ விகுதி பெற்று, செய்து என்னும் வினையெச்சப் பொருளில் இறந்தகாலத்தைக் காட்டும்.

செய்யா வந்தான் (செய்து)
பெய்யாக் கொடுக்கும் (பெய்து)

†(8) இந்த வினையெச்சத்தைப்போலவே, செய்யாமல் என்னும் வினையெச்சத்தில், மல் விகுதி தொக்கு, செய்யா என வரும் வினையெச்சங்களும், ஈறு கெட்ட

எதிர்மறைப் பெயரெச்சங்களும் வரும். அவற்றைப் பொருள் நோக்கத்தால் அறிந்து கொள்க.

உண்ணு வருந்தினன் — உண்ணுமல் வருந்தினன்
உண்ணு நாள் — உண்ணுத நாள்

†(9) குறிப்பு வினையெச்சம் — காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், வினையைக் கொண்டு முடியும் எச்சம் குறிப்பு வினையெச்சமாம்.

மெல்லப் பேசினன் **பைய** நடந்தான்

†(10) எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் — ஆகார விகுதியோடு மல், மே, து விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உண்ணுமல் — (உண் + ஆ + மல்)
உண்ணுமே — (உண் + ஆ + மே)
உண்ணுது — (உண் + ஆ + து)

இவை ஆகார எதிர்மறை விகுதியோடு மல், மே, து விகுதிகளில் ஒன்றைப் பெற்று வந்தன.

***70. ஏவல் வினை :**

ஏவல்வினை, கட்டளைப் பொருளைத் தரும் முற்றுச் சொல். அது முன்னிலை யிடத்துக்கே உரித்தாய் வரும்.

(1) உடன்பாட்டு ஏவல் ஒருமைவினை, ஆய் விகுதியோடு புணர்ந்தும், புணராதும் வரும்.

உண்ணாய் — ஆய் விகுதி புணர்ந்து வந்தது.
உண் — ஆய் விகுதி புணராது வந்தது.

(2) உடன்பாட்டு ஏவற்பன்மைவினை, மின், உம், ஈர் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உண்மின் — மின் விகுதி பெற்று வந்தது.
உண்ணும் — உம் விகுதி பெற்று வந்தது.
உண்ணீர் — ஈர் விகுதி பெற்று வந்தது.

(3) எதிர்மறை ஏவல் ஒருமைவினை — அல், [1]எல் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உண்ணல் — அல் விகுதி பெற்று வந்தது.
உண்ணேல் — ஏல் விகுதி பெற்று வந்தது.

(4) எதிர்மறை ஏவற்பன்மைவினை—அல் விகுதியோடு மின் விகுதியும் பெற்று வரும்.

உண்ணன்மின் — (உண் + அல் + மின்)

இது, அல் விகுதியோடு மின் விகுதியும் பெற்றது.

†71. வியங்கோள் :

வியங்கோள் — இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்குப் பொதுவாய் வரும் முற்றுச்சொல்; அஃது ஏவற்பொருளைக் கொண்டு நிற்கும். அதன் விகுதிகள் க, அ, அல், இயர், தல், இ என்பனவாம்.

க — உண்க
அ — தீது ஒழிய } 'தீ தொழிய நன்மை
அல் — நன்மை செயல் } செயல்.'
இயர் — நீ வாழியர்
தல் — மாசிலன் ஆதல் — (ஆகுக)
இ — போற்றி

[இங்கு, ஒழிய என்பது ஒழிக என்றும், செயல் என்பது செய்க என்றும் பொருள் படும்.]

---

1. அல் என்பதே ஏல் எனத் திரிந்து வந்துளது.

அல் விகுதி, எதிர்மறைப் பொருளிலும் வரும்.

அஞ்சல் — அஞ்சற்க

எதிர்மறையில் அல் விகுதியோடு க விகுதியும் சேர்ந்து வரும்.

உண்ணற்க — (உண் + அல் + க)
(அல் — எதிர்மறை விகுதி)

'தாங்கள் தயைசெய்து வரவேண்டும்' என்பதில், உம் விகுதி வியங்கோட் பொருளில் வந்துளது. இஃது இவ்வாறு உலகவழக்கில்மட்டும் வரும்.

†72. முன்னிலை, ஏவல், வியங்கோள் வினைகளின் வேறுபாடு :

முன்னிலை வினைமுற்று, அவ்வக் கால இடைநிலைகள் பெற்று, செய்தாய், செய்கின்றாய், செய்வாய் என மூன்று காலத்தும் வரும். ஏவல் வினைமுற்று, எதிர் காலத்தைக் காட்டி, முன்னிலையில்மட்டும் வரும். வியங்கோள் வினைமுற்று, எதிர்காலத்தைக் காட்டி, இருதிணை, ஐம்பால், மூன்றிடங்களிலும் பொதுவாக வரும்.

†73. முற்றெச்சம் :

வினைமுற்று வினையெச்சப் பொருளில் வரும் போது, முற்றெச்சம் என்று சொல்லப்படும்.

'விளையாடினள் போனள்'

இதில், விளையாடினள் என்பது, விளையாடிக்கொண்டு என்று பொருள் படுவதனால், முற்றெச்சம் ஆயிற்று.

3. இடைச் சொல்

*74. இடைச்சொல்லாவது—பெயர் வினைகளைப் போலத் தனித்து வாராமல், அப் பெயர் வினைகளைச் சார்ந்துவருஞ் சொல்லாம்.

*(1) வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவம உருபுகளும், சுட்டும், வினாவும், ஏ, ஓ, உம், மற்று, கொல், தான், வாளா, சும்மா, அந்தோ, ஐயோ, சீ, சீசீ, சிச்சி, அம்மா முதலியனவும் இடைச் சொற்களாம்.

அவனைக் கண்டேன்	— (ஐ - வேற்றுமை உருபு).
வந்தான்	— (ஆன் - விகுதி).
செல்கின்றன்	— (கின்று-வினை இடைநிலை).
அறிஞன்	— (ஞ் - பெயர் இடைநிலை).
போகின்றனன்	— (அன் - சாரியை).
தாமரை போன்ற பாதம்	— (போல் - உவம உருபு).
அப் பலகை	— (அ - சுட்டு).
வந்தானு	— (ஆ - வினா).

†(2) ஏகார இடைச்சொல்—பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளைத் தரும்.

1. பாண்டவரில் விசயனே வில்லில் தேர்ந்தவன்—இங்கு ஏகாரம் விசயனைப் பாண்டவரினின்றும் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

2. பள்ளிக்கூடத்திற்குத்தானே போகிறாய்? என்பதில், பள்ளிக்கூடத்திற்குத்தானே என்பதிலுள்ள ஏகாரம், வினவி நிற்றலால் வினா.

3. நிலனே நீரே தீயே வளியே — இங்கு ஏகாரம் நிலனும் நீரும் தீயும் வளியும் என்னும் பொருளில் வந்ததனால் எண்.

4. தொழுவோம் யாமே — ஏகாரம் ஒரு பொருளையுந் தாராமையால் அசைநிலை; இது பெரும்பாலும் செய்யுளின் ஈற்றில் வருவதால் ஈற்றசை எனப்படும்.

5. சூரியனே வெப்பம் தருபவன் — இங்கு ஏகாரம் தணிவுப் பொருளைக் காட்டுதலால் தேற்றம். (தேற்றம் — தணிவு).

6. ஏ ஏ இவள் பேடி. இதில், ஏகாரம் இசையை நிறைத்து நிற்றலின் இசைநிறை.

†(3) ஓகார இடைச்சொல் — ஒழியிசை, வினு, உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு, ஐயம் என்னும் பத்துப் பொருளைத் தரும்.

1. வினையாடவோ வந்தாய் — இதில் ஓகாரம், வினையாட அன்று, படிக்க வந்தாய் என ஒழிந்த பொருளைத் தருதலால் ஒழியிசை.

2. மணியோ பாடினன்? — (மணியா பாடினன்?) இதில், ஓகாரம் வினுப்பொருளைத் தருதலால் வினு.

3. திருவள்ளுவரோ கூறினர் — ஓகாரம் உயர்வைச் சிறப்பித்தலால் உயர்வு சிறப்பு.

4. குறவரோ கோற்பார் — ஓகாரம் இழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பு.

5. பரதனே தமையன் சொல்லை மீறுபவன்? — இதில் ஓகாரம், அவன் மீறமாட்டான் என எதிர்மறுத்துச் சொல்லுவதனால் எதிர்மறை.

6. ஒரு பொருளைத் தூரத்திற் கண்டு, 'மனிதனே, அன்று' என்றல், குற்றி எனத் தெரிய நிற்பதனால் **தேரிநிலை.**

7. உனக்கு இவ்வளவு துன்பம் வந்ததோ? — இதில், **ஓகாரம்,** ஒருவனுக்கு வந்த துன்பத்தை நினைந்து இரங்குவதை உணர்த்துவதனால் **கழிவு.**

8. விசும்பு என்பது என்கொலோ — இதில், **ஓகாரம்** ஒரு பொருளையும் உணர்த்தாமையால் **அசைநிலை.**

9. அவர்களுள் இவனே கொண்டான்? — இதில், பலருள் ஒருவனைப் பிரித்தலின் **பிரிப்பு.**

10. பத்தோ எட்டோ கொடு? — இதில், **ஓகாரம்** ஐயத்தைக் காட்டுவதனால் **ஐயம்.**

(4) உம் என்னும் இடைச்சொல் — எதிர்மறை, உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு, ஐயம், இறந்தது தழுவிய எச்சம், எதிரது தழுவிய எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் பத்துப் பொருளைத் தரும்.

1. செய்யவும் கூடும் — இதில் **உம்மை,** செய்யாதிருக்கவும் கூடும் எனப் பொருள்படுவதனால் **எதிர்மறை.**

2. மந்தியும் ஏறி அறியாத மரம் — இதில் **உம்மை,** மரமேறுந் தொழிலில் வல்லதாகிய மந்தியும் அறியாத என மரத்தின் உயர்வைக் குறித்தலால் **உயர்வு சிறப்பு.**

3. நாயும் உண்ணு இறைச்சி — இதில் **உம்மை,** இறைச்சியின் இழிவைக் குறித்தலால் **இழிவு சிறப்பு.**

4. சிந்தாமணியாயினும், சிலப்பதிகாரமாயினும் கொடு — இதில், **உம்மை,** ஒன்றனை நிச்சயித்து உரைக்காமையால் **ஐயம்.**

5. அரசனும் வந்தான் — இதில் **உம்மை,** முன்னே வரவேண்டிய அமைச்சன் வந்ததே யல்லாமல் எனப் பொருள்படுவதனால் **இறந்தது தழுவிய எச்சம்.**

6. அமைச்சனும் வந்தான் — இதில் **உம்மை**, இனி, அரசனும் வருவான் எனப் பொருள்படுவதனால் **எதிரது தழுவிய எச்சம்.**

7. முத்தமிழும் உணர்ந்தான் — இதில் **உம்மை**, தமிழின் பிரிவாகிய மூன்றனையும் உணர்த்துவதனால் **முற்று.**

8. இராமனும் சீதையும் இலக்குமணனும் போயினர்கள் — இதில் **உம்மை** எண்ணி நிற்றலால் **எண்.**

9. அவனும் அல்லன், அவளும் அல்லள் — இதில் **உம்மை** வேறொருவர் எனத் தெரிய நிற்றலால் **தெரிநிலை.**

10. பாலும் ஆயிற்று — இதில் **உம்மை**, (பால், உணவானதேயன்றி) மருந்தும் **ஆயிற்று** என்னும் ஆக்கப் பொருளைத் தருதலால் **ஆக்கம்.**

(5) மற்று என்பது அசைநிலைப் பொருளிலும், பிறிது என்னும் பொருளிலும் வரும்.

மற்று அடிகள் கண்டருளினர் — அசைநிலை.
இவனுக்காக மற்றவனுக்குச் சொல் — பிறிது.

(6) கோல் என்பது ஐயப்பொருளையும், அசைநிலைப் பொருளையும் தரும்.

அன்னம் இவ்வளவிற் செல்லுங்கோல் — **ஐயம்**
என்று தருங்கோல் — **அசைநிலை.**

*(7) தான் — தேற்றப்பொருளில் வரும்.

அவன்தான் சொன்னான்.

*(8) வாளா, சும்மா — இவை பயனின்மைப் பொருளில் வரும்.

வாளா இருந்தான்.
சும்மா வந்தான்.

*(9) அந்தோ, ஐயோ — இவை இரக்கப் பொருளில் வரும்.

அந்தோ! உனக்குத் துணை யார்?
ஐயோ! இஃது என்ன பாவம்!

*(10) சீ, சீசீ, சிச்சீ — இவை இகழ்ச்சிப் பொருளில் வரும்.

சீ போ.
சீசீ மூடா.
சிச்சீ மானமழிந்து வாழ்தல் நன்றன்று.

*(11) அம்மா — வியப்புப் பொருளைத் தரும்.

'அம்மா பெரிதென் றகமகிழ்க'

†(12) கோன் — பயனின்மைப் பொருளைத் தரும்.

'கோன்னே கழிப்பர்தம் வாழ்நாளே'

†(13) மற்றையது[1] என்பது, சுட்டிய பொருளின் இனத்தையே குறிக்கும்; வேறு இனத்தைக் குறியாது.

ஒருவன், தனக்கு ஓர் ஆடை கொண்டுவந்தவனை நோக்கி,

'மற்றையது கொண்டுவா'

என்றால், ஆடைகளுள் பிறிதொன்றை யுணர்த்துமே யன்றி, ஆடையொழிந்த வேறு பொருள்களுள் ஒன்றினை உணர்த்தாது என அறிக.

---

1. மற்ற என்னும் இடைச்சொல்லோடு அது என்னும் சுட்டுப்பெயர் சேர்ந்து வந்தது என அறிக.

4. உரிச் சொல்

*75. உரிச்சொல் என்பது குணத்தை உணர்த்தி, பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு வழங்கும் சொல்லாம்.

நனி பேதை — (பெயருரிச்சொல்)
தவ உழைத்தான் — (வினையுரிச்சொல்)

†(1) சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு பொருளை உணர்த்தும் உரிச்-சொற்களாம்.

சாலப் பெரிது — சால
உறு பொருள் — உறு
தவ வுயர்ந்தது — தவ
நனி பேதை — நனி
களி கூர்ந்தான் — கூர்
கழி கண்ணேட்டம் — கழி

†(2) கடி என்பது — காவல், கூர்மை, வாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை முதலிய பல பொருளை உணர்த்தும் உரிச் சொல்லாம்.

கடி நகர் — காவல்
கடி தினைப் பகழி — கூர்மை
கடி மலர் — வாசனை
கண்ணுடியன்ன கடிமார்பன் — ஒளி
கடியர மகளிர் — அச்சம்
கடி அரண் — சிறப்பு
அம்பு கடி விடுதும் — விரைவு
கடியுண் கடவுள் — மிகுதி
கடி மணம் — புதுமை

5. பொது இயல்

†76. நாம், இயல்பாக வழங்கும் சொல்வழக்கை ஆறுவகையாகப் பிரிக்கலாம். அவை—(1) இலக்கணம் உடையது, (2) இலக்கணப் போலி, (3) மரூஉ மொழி; (4) இடக்கர் அடக்கல், (5) மங்கலம், (6) குழூஉக்குறி என்பன.

(1) இலக்கணம் உடையதாவது — இலக்கண அமைதி வழுவாமல் வழங்குவது.(வழுவுதல்-தவறுதல்)

ஞாயிறு, தீ, காற்று

முதலியன.

(2) இலக்கணப் போலியாவது — இலக்கண அமைதியுள்ள சொற்கள் முன் பின்னாக மாறி நின்று வழங்குவது. ஒரு மொழியிலேயே எழுத்துக்கள் மாறி நிற்றலும் இதன்பாற் படும்.

வாயில், ஞிமிறு

முதலியன.

இவற்றுள், வாயில் என்பது — இல் + வாய் என்னும் சொற்கள் முன் பின்னாக மாறி வந்துள்ளன. ஞிமிறு என்பது — மிஞிறு என்னும் சொல்லில் எழுத்துக்கள் முன் பின்னாக மாறி வந்தன காண்க.

(3) மரூஉ மொழியாவது — சொற்கள் சிறிது சிதைந்தும் திரிந்தும் வழங்குவது.

ஆயிற்று — ஆய்த்து ; ஆச்சு
தஞ்சாவூர் — தஞ்சை
சோழநாடு — சோணாடு

என்பன போல்வன காண்க.

இலக்கணம் உடையது முதலிய மூன்று வழக்குக்களும் இயல்பாகவே வழங்குதலின், இயல்பு வழக்கு எனப்படும்.

(4) இடக்கர் அடக்கலாவது — இடக்கான (சபையில் சொல்லத்தகாத) சொற்களை மறைத்து, வேறு வாய்பாட்டால் வழங்குவது.

கால் கழுவி வந்தான்
குளத்திற்குப் போயிருக்கிறான்

என்பவை போல்வன.

(5) மங்கலமாவது — தீமையான சொற்களை நன்மையான சொற்களால் வழங்குவது.

சுடுகாடு என்பதனை நன்காடு என்றும்
ஓலை என்பதனைத் திருமுகம் என்றும்
காராடு என்பதனை வெள்ளாடு என்றும்

வழங்குதல் போல்வன.

(6) குழூஉக்குறியாவது — ஒரு கூட்டத்தார், பிறர் அறியாதபடி, தமக்குள்ளே வழங்கி வரும் குறிப்புச் சொல்.

பொன் என்பதனைப் பறி என்று

தட்டார் வழங்குதல் போல்வன.

வெள்ளைக்குதிரைமேல் ஏறியிருக்கிறான் — கள்
இரண்டு வட்டம் கொடு — ரூபாய்

என வழங்குதலும், கடைக்காரர் ஆடைகளின் விலையைக் குறிக்க வழங்கும் சங்கேதங்களும் இதன்பாற்படும்.

இடக்கரடக்கல் முதலிய மூன்று வழக்கும், சொல்லத்தகாத சொற்களை ஒழித்து, அவற்றிற்குத் தகுதியான சொற்களை வழங்குதலின், தகுதி வழக்கு எனப்படும்.

†77. சில சொற்கள் குறிப்பாகப் பொருளை உணர்த்த வரும். அவை — (1) ஒன்றெழு பொதுச் சொல், (2) விகாரம், (3) தகுதி வழக்கு, (4) ஆகு பெயர், (5) அன்மொழித் தொகை, (6) குறிப்பு வினை, (7) முதற் குறிப்பு, (8) தொகைக் குறிப்பு, (9) பிற குறிப்பு என்பனவாம்.

(1) ஆயிரம் மக்கள் பொருதார்

இதில், மக்கள் என்னும் பொதுப் பெயர், பொருதார் என்னுங் குறிப்பினால், பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டிற்று.

அரசி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்

இதில், மக்கள் என்னும் பொதுப்பெயர், பொறையுயிர்த்த கட்டில் என்னும் குறிப்பால், ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டிற்று — ஒன்றெழு பொதுச்சொல்.

(2) மரைமலர்

இதில், மரை என்னுஞ் சொல், மலர் என்னுங் குறிப்பினால் ஒருவகை மானை உணர்த்தாமல், தாமரையை உணர்த்திற்று — விகாரம் (முதற்குறை.)

(3) திருமுகம் படித்தான்

இதில், திருமுகம் என்பது, படித்தான் என்னுங் குறிப்பினால் முகத்தை உணர்த்தாமல், கடிதத்தை உணர்த்திற்று — தகுதி.

(4) கார் அறுத்தான்

இதில், கார் என்பது, அறுத்தான் என்னுங் குறிப்பினால் கார்காலத்தை உணர்த்தாமல், கார்காலத்து விளையும் பயிரை உணர்த்திற்று — ஆகுபெயர்.

(5) போற்றெடி வந்தாள்

இதில், போற்றெடி என்பது, வந்தாள் என்னுங் குறிப்பினால் தொடியை உணர்த்தாமல், தொடியை அணிந்த பெண்ணை உணர்த்திற்று — அன்மொழித் தொகை.

(6) அவன் இப்போது பொன்னன்

இதில், பொன்னன் என்னும் சொல், இப்போது என்னும் குறிப்பினால் பெயர்ப்பொருளை ஒழித்துப் பொன்னை யுடையவனாய் இருக்கிறான் என்னும் வினைப் பொருளைத் தந்தது — குறிப்பு வினை.

(7) வாக்குண்டாம் படித்தான்

இதில், வாக்குண்டாம் என்பது, படித்தான் என்னுங் குறிப்பினால், 'வாக்குண்டாம்' என்பதை முதலிலுடைய நூலைக் குறித்தது — முதற் குறிப்பு.

(8) ஐவரில் மூத்தவன் தருமன்

இதில், ஐவர் என்பது, தருமன் என்னும் குறிப்பினால், ஐவர் என்னுந் தொகையுடைய பாண்டவரைக் குறித்தது — தொகைக் குறிப்பு.

(9) கல்லைக் கடிக்க நன்முகச் சமைத்தாய்
பாயா வேங்கை வளர்ந்தது
பறவாக் கொக்கு ஒன்று வேண்டும்

இவற்றில், கல்லைக் கடிக்க என்பதனால் நன்முகச் சமைக்கவில்லை என்றும், பாயா என்பதனால் வேங்கை என்பது மரம் என்றும், பறவா என்பதனால் கொக்கு என்பது குதிரை என்றும் அறியப்பட்டன — பிறகுறிப்பு.

†78. வழுவமைதி :

திணை, பால், இடம், காலம் முதலியவை யாதாயினும் ஒரு காரணம்பற்றி இலக்கண விதியினின்று வழுவியும் வரும்; ஆயினும், அவை முன்னோரால் எடுத்தாளப்பட்டு வந்தனவாயின், அவை கொள்ளப்படுவனவாகும். அவற்றிற்கு வழுவமைதி என்று பெயர்.

†(1) திணை வழுவமைதி :

மகிழ்ச்சியினாலும், உயர்வினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், இழிப்பினாலும் திணை மயங்கி வரும். அது திணை வழுவமைதி யாகும்.

1. பசுவைச் சுட்டி, 'என் அம்மை வந்தாள்' என்பது, மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணை ஆயிற்று.

2. 'கிளியாரே சொல்வீர்' என்பதில், உயர்வினால் அஃறிணை உயர்திணை ஆயிற்று.

3. 'தம் பொருள் என்ப தம் மக்கள்' என்பதில் சிறப்பினால் உயர்திணை அஃறிணை ஆயிற்று.

4. 'தானும் அறியான், பிறர்சொல்லுங் கேளான்; அவ்வுயிரால் யாது பயன்' என்பதில், கோபத்தினால் உயர்திணை அஃறிணை ஆயிற்று.

5. 'நாம் கடவுளின் உடைமை' என்பதில், இழிப்பினால் உயர்திணை அஃறிணை ஆயிற்று. (இழிப்பு — இழிவு).

(2) பால் வழுவமைதி :

மேற் கூறிய காரணங்களால் பால்களும் மயங்கிவரும்; அப்போது அவை பால்வழுவமைதி யாகும்.

1. தன் மகனை, 'என் அம்மை வந்தாள்' என்பதில், மகிழ்ச்சியினால் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

2. ஒருவனைக் கூறுமிடத்து, 'அவர் வந்தார்' என்பதில், உயர்வினுல் ஒருமைப்பால் பன்மைப்பால் ஆயிற்று.

3. 'அரசன் எல்லாருக்கும் தாயி' என்பதில், சிறப்பினுல் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

4. ஒருவனைப் பார்த்து, 'நீர் நன்கு அடி படுவீர்' என்பதில், கோபத்தினுல் ஒருமைப்பால் பன்மைப்பால் ஆயிற்று.

5. பெண்புத்தி கேட்பவனைச் சுட்டி, 'இவன் ஒருபெண்' என்பதில், இழிப்பினுல் ஆண்பால் பெண்பால் ஆயிற்று.

(3) இட வழுவமைதி :

ஓர் இடத்துச் சொல், மற்றோர் இடத்தில் வருவது இட வழுவாகும். அவற்றுள்ளும் ஓராற்றுன் அமைதியுடையது இடவழுவமைதியாம்.

1. இராமன் தாயி இப்படிச் செயீவேனே? — இதில், தாய் என்னும் படர்க்கைப்பெயர் தன்மை இடத்தில் வந்துளது. இராமன் தாயாகிய யான் என்பது வழாநிலை.

2. நீ என் தம்பி — இதில், தம்பி என்னும் படர்க்கைப் பெயர் முன்னிலைக் கண் வந்துளது.

3. 'நீ என் தம்பியை' என்பது வழா நிலை.

†(4) கால வழுவமைதி :

விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு என்னும் காரணங்களால் ஒரு காலம் மற்றொரு காலமாக மாறி வருவது கால வழுவமைதி எனப்படும்.

1. உண்கின்ற ஒருவன், தன்னை அழைப்பவனுக்கு, 'உண்டேன் உண்டேன்' என்று சொல்லுதல், விரைவினுல் நிகழ்காலம், இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி.

2. உண்ணச் செல்லும் ஒருவன், தன்னை அழைப்பவனுக்கு 'உண்டேன் உண்டேன்' என்று சொல்லுதல், வினையினுல் எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி.

3. 'நீ அந்தக் காட்டிற்குப் போனுல் பொருளைப் பறிகொடுத்தாயி' என்பதில், மீதுதியினுல் எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி. (மிகுதி - பெரும்பான்மை.)

4. 'எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினுல் மழை பெய்தது' என்பதில், தெளிவினுல் எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி.

5. 'நாங்கள், முன்பு இச் சோலையில்தான் வினையாடுவோம்' என்பதில், இயல்பினுல் இறந்தகாலம் எதிர்காலமாக வந்த காலவழுவமைதி. (இயல்பு - இயற்கை).

***79. மரபு :**

பெரியோர், எந்தச் சொல்லை எப்படி வழங்கினரோ அந்தச்சொல்லை அப்படியே நாமும் வழங்குதல் மரபாம்.

எருமைக் கன்று	சிங்கக் குட்டி
யானைக் கன்று	குதிரைக் குட்டி
மான் கன்று	ஆட்டுக் குட்டி
அணிற் பிள்ளை	ஆட்டு மந்தை
தென்னம் பிள்ளை	யானைப்பாகன்

[இவ்வாறன்றி, யானைப்பிள்ளை, மான்குட்டி, யானைமந்தை என்று சொல்லுதல் மரபு வழுவாம்]

†80. இரட்டைக் கிளவி :

பிரித்து தனித்து வழங்காமல், இரண்டாகச் சேர்ந்தே வரும் சொற்றொடர் இரட்டைக்கிளவியாம்.

கொளகொள என நீர் கொதித்தது.
சலசல என மழை பெய்தது.

6. புணர் இயல்

***81.** புணர்ச்சி என்பது சேர்க்கை; அஃதாவது, நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் பொருத்தமுறக் கூடுதல்.

நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்; வருமொழி - பின்னர் வரும் சொல்.

புணர்ச்சி — வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகைப்படும்.

†82. வேற்றுமைப் புணர்ச்சி :

சொற்கள் புணரும்போது இடையில் **வேற்றுமை**யுருபுகள் மறைந்தேனும், வெளிப்பட்டேனும் வருவது வேற்றுமைப் புணர்ச்சியாம்.

சொற்கள் புணரும்போது வேற்றுமை யுருபுகள் மறைந்து வருவது **வேற்றுமைத் தொகை** எனப்படும். இதனை, **வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்** என்பர்.

சொற்கள் புணரும்போது வேற்றுமை யுருபுகள் மறையாமல் விரிந்து வருவது **வேற்றுமை விரி** எனப்படும். இதனை, **வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்** என வழங்குவர்.

வேற்றுமைத் தொகை	வேற்றுமை விரி
2. புத்தகம் வாங்கினன்	— புத்தகத்தை வாங்கினன்
3. கடவுள் கண் பார்த்தார்	— கடவுள் கண்ணுல் பார்த்தார்
4. கூலி வேலை	— கூலிக்கு வேலை
5. மலை வீழ் அருவி	— மலையின் வீழ் அருவி
6. முருகன் வீடு	— முருகனது வீடு
7. மலைக் கோட்டை	— மலைமேல் கோட்டை

வேற்றுமைப் புணர்ச்சி — வேற்றுமைத் தழுவு தொடர் எனவும், வேற்றுமைத் தழாத் தொடர் எனவும் இருவகைப்படும்.

வேற்றுமை யுருபு விரிந்தபோது, வருமொழிப் பொருள் பொருத்தமுறத் தழுவி நிற்பது வேற்றுமைத் தழுவு தொடராம்.

பால் குடித்தான் — பாலைக் குடித்தான்.

வேற்றுமை யுருபு விரிந்த காலத்து, வருமொழியைத் தழுவாமல், கொண்டு முடிக்குஞ் சொல் ஒன்றை அவாவி நிற்பது வேற்றுமைத் தழாத் தொடராம்; இஃது, 'உருபும் பயனும் உடன் தொக்க தொகை' எனவும் படும். இஃது ஆறும் வேற்றுமையில் வாராது.

வேற்றுமைத் தொகை	உருபும் பயனும் விரிதல்.
2. தயிர்க் குடம்	— தயிரையுடைய குடம்
3. பொற்காப்பு	— பொன்னால் செய்த காப்பு
4. தலைவலி மருந்து	— தலைவலிக்குக் கொடுக்கும் மருந்து
5. விண் மழை	— விண்ணினின்று விழும் மழை
7. காட்டுப் புலி	— காட்டில் வாழும் புலி

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சி எனப்படும். தமக்கென உருபு இல்லாத முதல் வேற்றுமையும், எட்டாம் வேற்றுமையும் அல்வழியில் சேரும்.

†83. அல்வழிப் புணர்ச்சி :

அல்வழிப் புணர்ச்சி — (i) அல்வழித் தொகை நிலைத் தொடர் எனவும், (ii) அல்வழித் தொகாநிலைத் தொடர் எனவும் இருவகைப்படும்.

(i) அல்வழித் தொகை நிலைத் தொடர் ஐந்து வகையாம். அவை — (1) வினைத்தொகை, (2) பண்புத் தொகை, (3) உவமத்தொகை, (4) உம்மைத்தொகை, (5) அன்மொழித்தொகை என்பனவாம்.

(1) வினைத் தொகையாவது — வினைப் பகுதியும் பெயரும் சேர்ந்து, இடையே, காலங்காட்டும் இடைநிலையும் விகுதியும் மறைய வருவது. [இது விரித்தால், தெரிநிலைப் பெயரெச்சம் ஆகும்.]

வளர்தெங்கு — வினைத் தொகை.

இது, வளர்ந்த தெங்கு, வளர்கின்ற தெங்கு, வளரும் தெங்கு என விரியும்.

(2) பண்புத் தொகையாவது—பண்புப் பகுதியும் பண்புகொள்பெயரும் சேர்ந்து வருமிடத்து, இடையே பண்பினை விளக்கும் சொல் மறைந்து வருவது.

செங்கல் — பண்புத் தொகை.

இது, செம்மையாகிய கல் என விரியும்; ஆகிய என்பது பண்பினை விளக்கும் சொல். அது மறைந்துளது காண்க.

பண்புத் தொகையில் இரண்டு பெயர்கள் ஒட்டி வருவதும் உண்டு.

பனை மரம்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

இது, பனையாகிய மரம் என விரியும். இதில் சிறப்புப் பெயர் முன்னும், பொதுப் பெயர் பின்னும் வரும். [சிறப்புப் பெயர் - பனை; பொதுப்பெயர் - மரம்.]

(3) உவமத் தொகையாவது — உவமானச் சொல்லோடு உபமேயச் சொல் சேர்ந்து இடையே உவம வுருபு மறைய வருவது.

மதி முகம் — உவமத் தொகை.

இது, மதி போன்ற முகம் என விரியும்.

(4) உம்மைத் தொகையாவது — தொடர்புடைய இரண்டு சொற்கள் சேர்ந்து வருமிடத்து, உம் என்னும் இடைச்சொல் இடையிலும் ஈற்றிலும் மறைந்து வருவது.

இராப் பகல் — உம்மைத் தொகை.

இஃது, இரவும் பகலும் என விரியும்.

(5) அன்மொழித் தொகை — இது, வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத் தொகை, உம்மைத்தொகை இவற்றின் புறத்தே பிறந்து வேறு சொல்லின் பொருளை புணர்த்தும். [அன்மொழித் தொகை - பொருளைக் குறித்தல் அல்லாத சொற்கள் சேர்ந்து வருவது.]

போற்றெடி வந்தாள்.

இதில், பொற்றொடி என்பது, பொன்னாலாகிய தோடி என விரியும்; அது, வந்தாள் என்னும் சொல்லினால், பொன்னாலாகிய தோடியை யுடையவளைக் குறித்தது — வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தாழ்குழல் வந்தாள்.

இதில், தாழ்குழல் என்பது, தாழ்ந்த குழல் என விரியும்; அது, வந்தாள் என்னும் சொல்லினால், தாழ்ந்த குழலை யுடையவளைக் குறித்தது — வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கருங்குழல் வந்தாள்.

இதில், கருங்குழல் என்பது, கருமையாகிய குழல் என விரியும்; அது, வந்தாள் என்னும் சொல்லினால், கருமையாகிய கூந்தலை யுடையவளைக் குறித்தது — பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தேன்மொழி வந்தாள்.

இதில், தேன்மொழி என்பது, தேன்போன்ற மொழி என விரியும்; அது, வந்தாள் என்னும் வினையினால், தேன்போன்ற மொழியை யுடையவளைக் குறித்தது — உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு.

இதில், உயிர் மெய் என்பது, உயிரும் மெய்யும் என விரியும்; அஃது, இருநூற்றுப் பதினாறு என்னும் தொகையினால், உயிரும் மெய்யும் கூடிய எழுத்தை உணர்த்திற்று — உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

(ii) அல்வழித் தோகா நிலைத் தொடர், ஒன்பது வகையாம்: அவை — (1) எழுவாய்த் தொடர், (2) விளித்தொடர், (3) பெயரெச்சத் தொடர், (4) வினையெச்சத் தொடர், (5) தெரிநிலை வினைமுற்றுத் தொடர், (6) குறிப்பு வினைமுற்றுத் தொடர், (7) இடைச்சொற் றொடர், (8) உரிச்சொற் றொடர், (9) அடுக்குத் தொடர் என்பனவாம்.

(1) **இராமன் வந்தான்** — எழுவாய்த் தொடர்
(2) **முருகா வா** — விளித் தொடர்

(3) ஓடின குதிரை — பெயரெச்சத் தொடர்
(4) வந்து போனான் — வினையெச்சத் தொடர்
(5) வந்தான் இராமன் — தெரிநிலை வினைமுற்றுத்தொடர்
(6) பொன்னன் இவன் — குறிப்பு வினைமுற்றுத் தொடர்
(7) மற்று ஒன்று — இடைச்சொற் றொடர்
(8) நனி பேதை — உரிச்சொற் றொடர்
(9) பாம்பு பாம்பு — அடுக்குத் தொடர்

அல்வழியிலும் கலாத்தொடர் உண்டு. அது, 'சுரையாழ அம்மி மிதப்ப' என்பதுபோல வரும். இதை, 'சுரைமிதப்ப அம்மி ஆழ' என மாற்றினால்தான் பொருள் பொருந்தும்.

84. புணர்ச்சியின் வகை :

புணர்ச்சி — (i) இயல்பு புணர்ச்சி, (ii) திரிபு புணர்ச்சி (விகாரப் புணர்ச்சி) என இருவகைப்படும்.

*(i) இயல்பு புணர்ச்சி, நிலைமொழி யீற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் விகாரப்படாமல் புணர்வதாம்.

பொன் + மலை = பொன் மலை
நிலம் + பெரிது = நிலம் பெரிது

*(ii) திரிபு புணர்ச்சி என்பது—நிலைமொழி யீற்றெழுத்தும், வருமொழி முதலெழுத்தும் புணரும் போது, (1) தோன்றல், (2) திரிதல், (3) கெடுதல் ஆகிய மூவகைத் திரிபுகளில் ஒன்றேனும் பலவேனும் உண்டாகப் புணர்வதாம்.

*(1) தோன்றலாவது — எழுத்தாயினும் சாரியையாயினும் தோன்றச் சொற்கள் புணர்வது.

வாழை + பழம் = வாழைப்பழம்
(எழுத்துத் தோன்றல்)

புளி + காய் = புளியங்காய்
(சாரியை தோன்றல்)

*(2) திரிதலாவது — நிலைமொழி ஈற்றெழுத்தாயினும், வருமொழி முதலெழுத்தாயினும், அவ்விரண்டுமாயினும் திரிந்து வருவது.

பொன் + சரடு = பொற்சரடு.

இதில், நிலைமொழி யீறு திரிந்தது.

விண் + நாடு = விண்ணாடு.

இதில், வருமொழி முதல் திரிந்தது.

கல் + தூண் = கற்றூண்.

இதில், நிலைமொழி யீறும் வருமொழி முதலும் திரிந்தன.

*(3) கெடுதலாவது — நிலைமொழி யீறு கெட்டு வருவது.

மரம் + வேர் — மரவேர்.

*85. இயல்பு புணர்ச்சி :

(1) தனிக்குறிலைச் சேராத மெய்யெழுத்துக்கு முன் உயிர் வரின் அவ்வுயிர், அம் மெய்யோடு கூடும்.

கால் + அடி — காலடி.
நிழல் + அருமை — நிழலருமை. } வேற்றுமை
இருள் + அரிது — இருளரிது — அல்வழி

*(2) உயர்திணைப் பெயர்களுக்குமுன் வரும் வல்லெழுத்து இயல்பாகும்.

நம்பி + பெரியன் = நம்பி பெரியன்
நங்கை + சிறியள் = நங்கை சிறியள்
இராமன் + பெரியன் = இராமன் பெரியன்
அவள் + கொடியள் = அவள் கொடியள்

[ஙகர ளகர மெய்களுக்குமுன் மட்டும் தகரம் திரியும்; அது மயக்கவிதி இன்மையான் என அறிக]

†(3) போதுப்பெயர்களுக்கு முன்னும் வல்லினம் இயல்பாகும்.

தந்தை + பெரியன் = தந்தை பெரியன்
தந்தை + பெரிது = தந்தை பெரிது
தாய் + பெரியள் = தாயி பெரியள்
தாய் + பெரிது = தாயி பெரிது

*(4) ஆ, மா என்னும் பெயர்கள், சில இகரவீற்றுப் பெயர்கள், சில ஐகார ஈற்றுப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள் இவற்றிற்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

ஆ + குறிது = ஆ குறிது.
மா + குறிது = மா குறிது.
ஆமா + குறிது = ஆமா குறிது.
மணி + சிறிது = மணி சிறிது.
பனை + பெரிது = பனை பெரிது.
அது + குறிது = அது குறிது.
இது + நீது = இது நீது.

[ஆமா - காட்டுப் பசு.]

(5) ஈற்று வினைவாகிய ஆ - வினைச் சொல்லிற்கு முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

அவனு + கொண்டான் = அவனு கொண்டான்?
அவனு + சென்றான் = அவனு சென்றான்?
அவனு + தந்தான் = அவனு தந்தான்?
அவனு + போயினன் = அவனு போயினன்?

†(6) வினு, தேற்றம், பிரிநிலை முதலிய பொருள்களில் வரும் ஏகார ஓகாரங்களுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

அவன்தானே + கொண்டான் = அவன்தானேகொண்டான்.
அவன்தானே + சென்றான் = அவன்தானே சென்றான்.
அவன்தானே + தந்தான் = அவன்தானே தந்தான்.
அவன்தானே + போயினன் = அவன்தானே போயினன்.

அவனே + கொண்டான் = அவனே கொண்டான்.
அவனே + சென்றான் = அவனே சென்றான்.
அவனே + தந்தான் = அவனே தந்தான்.
அவனே + போயினன் = அவனே போயினன்.

இவற்றை — வினு, தேற்றம், பிரிநிலை முதலிய பொருள்படக் கூறிக் கொள்க.

†(7) எண்ணுப் பொருளில் வரும் ஏகாரத்தின் முன் வரும் வல்லெழுத்து இயல்பாகும்.

இராமனே + கண்ணனே = இராமனே கண்ணனே.

(8) யாவினுவிற்கு முன், அல்வழி வேற்றுமை யாகிய இருவழியிலும் வரும் வல்லினம் இயல்பாகும்.

யா + குறியன = யா குறியன — அல்வழி.
யா + தந்தான் = யா தந்தான் — வேற்றுமை.

[யா - யாவை, யாவற்றை]

*(9) விளிப்பெயருக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

இராமா + கொள் = இராமா கொள்
நம்பீ + செல் = நம்பீ செல்
வேந்தே + தா = வேந்தே தா
நங்கை + போ = நங்கை போ

†(10) முன்னிலை வினைச்சொற்களுக்குமுன் வரும் வல்லினம் இயல்பாகும்.

வருதி + குமரா = வருதி குமரா
வந்தனை + தேவா = வந்தனை தேவா
வந்தாய் + சாத்தா = வந்தாய் சாத்தா
வந்தீர் + தேவரே = வந்தீர் தேவரே

†(11) ஏவல் வினைச்சொற்களுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

நட + கொற்ரு = நட கொற்ரு
வா + குமரா = வா குமரா
எறி + சாத்தா = எறி சாத்தா
போ + தேவா = போ தேவா
உண் + சாத்தா = உண் சாத்தா
செல் + சாத்தா = செல் சாத்தா

(12) செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

உண்ணிய + சென்ரூன் = உண்ணிய சென்ரூன்
ஆடிய + போனான் = ஆடிய போனான்

[உண்ணிய - உண்ண. ஆடிய - ஆட. இது, செய்யுளிலேயே வரும்.]

†(13) தெரிநிலைப் பெயரெச்சங்களுக்கு முன்னும், குறிப்புப் பெயரெச்சங்களுக்கு முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

வந்த	+ சிறுவன் =	வந்த சிறுவன்	தெரிநிலை
வருகின்ற	+ பையன் =	வருகின்ற பையன்	
வரும்	+ சிறுவன் =	வருஞ்[1] சிறுவன்	
பெரிய	+ கோயில் =	பெரிய கோயில்	குறிப்பு
கரிய	+ காக்கை =	கரிய காக்கை	

†(14) முற்றுவினைகளுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

வந்தன + குதிரைகள் = வந்தன குதிரைகள்.
வாரா + குதிரைகள் = வாரா குதிரைகள்.
வாழி + கொற்ரு = வாழி கோற்ரு.

(15) மூன்ரும் வேற்றுமையுருபு, ஆரும்வேற்றுமையுருபு இவற்றிற்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

அவனொடு + சென்ரான் = அவனொடு சென்ரான்.
தனது + சுவடி = தனது சுவடி.
தன + கைகள் = தன கைகள்.
தன்னுடைய + பொருள் = தன்னுடைய பொருள்.

(16) ஒரு, இரு, அறு, எழு எனத் திரிந்தும், ஒன்பது, ஆறு, எழு எனத் திரியாதும் வரும் எண்ணுப் பெயர்களுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

ஒரு	+ பொழுது =	ஒரு பொழுது	திரிந்தவை
இரு	+ சுடர் =	இரு சுடர்	
அறு	+ சுவை =	அறு சுவை	
எழு	+ கடல் =	எழு கடல்	

1. நிலைமொழித்திரிபு ஈண்டுக் கொள்ளலாகாது.

ஒன்பது + கோள் = ஒன்பது கோள்
ஆறு + கால் = ஆறு கால்
ஏழு + குதிரை = ஏழ குதிரை
} திரியாதவை

[கோள் - கிரகம்.]

†(17) வினைத்தொகைக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

சுடு + தண்ணீர் = சுடு தண்ணீர்
அலை + கடல் = அலை கடல்
நாட்டு + புகழ் = நாட்டு புகழ்
கொல் + களிறு = கொல் களிறு

*(18) ணகர னகர ஈறுகள், அல்வழியில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இவை வரின் இயல்பாகும்.

மண் + பெரிது = மண் பெரிது. } வல்லினம்
பொன் + பெரிது = பொன் பெரிது. }

மண் + மாண்டது = மண் மாண்டது. } மெல்லினம்
பொன் + மாண்டது = பொன் மாண்டது. }

மண் + யாது = மண் யாது. } இடையினம்
பொன் + யாது = பொன் யாது. }

(19) ணகர னகர ஈறுகள், வேற்றுமையில் மெல்லினம், இடையினம் வரின் இயல்பாகும்.

மண் + மாட்சி = மண் மாட்சி. } மெல்லினம்
பொன் + மாட்சி = பொன் மாட்சி. }

மண் + வன்மை = மண் வன்மை. } இடையினம்
பொன் + வன்மை = பொன் வன்மை. }

(20) மகர ஈற்றுப் பெயர்கள், அல்வழியில் உயிரெழுத்துக்களும், இடையெழுத்துக்களும் வரின், ம்கரம் கெடாது நிற்கும்.

மரம் + அழகிது = மரம் அழகிது
வெல்லம் + இனிது = வெல்லம் இனிது } உயிர்

மரம் + யாது = மரம் யாது
மரம் + வலிது = மரம் வலிது } இடை

†(21) ய, ர, ழ ஈறுகளுக்கு முன், அல்வழியில் க ச த பக்கள் வரின் இயல்பாதலும் உண்டு.

நாய் + குறிது = நாய் குறிது
காய் + சிறிது = காய் சிறிது
தேர் + பெரிது = தேர் பெரிது
கூழ் + தீது = கூழ் தீது

†(22) லகர ளகர ஈறுகள், அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் இடையினம் வரின் இயல்பாகும்.

கல் + யாது = கல் யாது
முள் + யாது = முள் யாது } அல்வழி.

கல் + வன்மை = கல் வன்மை
முள் + வன்மை = முள் வன்மை } வேற்றுமை.

(23) குயின் என்னும் சொல், அல்வழி வேற்றுமை இருவழியிலும் வல்லினம் வரும்போது இயல்பாகும்.

குயின் + செல்கின்றது = குயின் செல்கின்றது —அல்வழி
குயின் + குழாம் = குயின் குழாம் —வேற்றுமை

[குயின் - மேகம்]

(24) அன்றி, இன்றி என்னும் வினையெச்சங்கள், அன்று, இன்று என்றாகி வரின், அவற்றிற்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

நாளன்று + போனான் = நாளன்று போனான்
உப்பின்று + புற்கை யுண்கம் = உப்பின்று புற்கை யுண்கம்

[நாளன்று - நல்லநாளல்லாமல்; உப்பின்று - உப்பில்லாமல்.]

†(25) குற்றுகரங்களுள் — நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த்தொடர், மென்றொடர், இடைத்தொடர் என்னும் ஐந்து தொடர்களுக்கு முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்.

நாடு + சிறிது = நாடு சிறிது — நெடில்
எஃகு + கொடிது = எஃகு கொடிது — ஆய்தம்
வரகு + பெரிது = வரகு பெரிது — உயிர்
பந்து + சிறிது = பந்து சிறிது — மென்மை
மார்பு + பெரிது = மார்பு பெரிது — இடைமை

†(26) இடையே ஒற்று மிகாத நெடிற்றொடர், உயிர்த் தொடர்களுக்கு முன்னும், ஆய்தத் தொடருக்கு முன்னும், இடைத்தொடருக்கு முன்னும் வேற்றுமையிலும் வல்லினம் இயல்பாகும்.

காசு + பெருமை = காசு பெருமை } ஒற்றிடை மிகா
வரகு + கதிர் = வரகு கதிர் } தவை
எஃகு + கடுமை = எஃகு கடுமை — ஆய்தம்
தெள்கு + சிறுமை = தெள்கு சிறுமை — இடைத்தொடர்

†(27) எல்லா உயிரீறுகளுக்கு முன்னும் அல்வழி வேற்றுமை இருவழியிலும் வரும் மெல்லினம் இடையினம் இயல்பாகும்.

விள + நீண்டது	= விள நீண்டது	அல்வழி
பூ + மணமுடையது	= பூ மணமுடையது	
சே + யாது	= சே யாது	
சோ + வலிது	= சோ வலிது	
விள + நீட்சி	= விள நீட்சி	வேற்றுமை
பூ + மணம்	= பூ மணம்	
சே + யாப்பு	= சே யாப்பு	
சோ + வலிமை	= சோ வலிமை	

86. திரிபு புணர்ச்சி :

1. தோன்றல்

*உயிரீறுகளுக்கு முன் உயிர் முதல் மொழிகள் வருமாயின், அவ்விரண்டு உயிரெழுத்தையும் உடம்படுத்தும் பொருட்டு இடையே ஒரு மெய்யெழுத்து வரும். அதற்கு, உடம்படுமெய் என்பது பெயர்.

(1) அ, ஆ, உ, ஊ, ஏ, ஓ, ஔ இவற்றிற்கு முன் உயிர் வரும்போது இடையே வகரமெய் தோன்றும்.

விள + அழகிது = விளவழகிது
கௌ + அரிது = கௌவரிது
} அல்வழி.

பல + அரசர் = பலவரசர்
தெரு + அழகு = தெருவழகு
பூ + அழகு = பூவழகு
சே + அழகு = சேவழகு
கோ + அழகு = கோவழகு
} வேற்றுமை.

என்பன காண்க.

*(2) இ, ஈ, ஐ இவ் வீறுகளுக்குமுன் உயிர் வரின் இடையே யகரமெய் தோன்றும்.

மணி + அழகிது = மணியழகிது
தீ + எரிகிறது = தீயெரிகிறது
பனை + உயர்ந்தது = பனையுயர்ந்தது
} அல்வழி

மணி + அழகு = மணியழகு
தீ + ஒழுங்கு = தீயொழுங்கு
பனை + உயர்வு = பனையுயர்வு
} வேற்றுமை

†(3) கூட்டெழுத்துக்களுக்கு முன்னும் எகர விளைவிற்கு முன்னும் வல்லினம் மெல்லினம் வரின் அவை மிகும்.

அ + கொற்றன் = அக் கொற்றன்
இ + சாத்தன் = இச் சாத்தன்
எ + தெரு = எத் தெரு
அ + பழம் = அப் பழம்
} வலி

இ + ஞாலம் = இஞ் ஞாலம்
எ + நாடு = எந் நாடு
அ + மாடு = அம் மாடு
} மெலி

†(4) சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எகர வினாவிற்கு முன்னும் உயிரெழுத்துக்களும் இடையெழுத்துக்களும் வரின், வகரமெய் தோன்றும்.

அ + அடை = அவ்வடை
இ + ஆடை = இவ்வாடை
எ + இலை = எவ்விலை
} உயிர்

அ + யானை = அவ்யானை
இ + வழி = இவ்வழி
எ + வீடு = எவ்வீடு
} இடை

(5) செய்யுட்களில் அகரச்சுட்டு நீண்டும் வரும்; அதன்முன் உயிர் வரின் யகரமெய் தோன்றும்.

அ + இடை = ஆயிடை

*(6) எல்லா உயிரீறுகளுக்கு முன்னும் வரும் வல்லெழுத்துப் பெரும்பாலும் மிகும். [மிகாது வருதல் சிறுபான்மை]

விள + குறிது = விளக்குறிது
பலா + பெரிது = பலாப்பெரிது
கிளி + குறிது = கிளிக்குறிது
தீ + கொடிது = தீக்கொடிது
} அல்வழி

கடு	+ கடிது	= கடுக்கடிது	அல்வழி
பூ	+ சிறிது	= பூச்சிறிது	
சே	+ பெரிது	= சேப்பெரிது	
சோ	+ கொடிது	= சோக்கொடிது	
விள	+ குறுமை	= விளக்குறுமை	வேற்றுமை
பலா	+ காய்	= பலாக்காய்	
கிளி	+ சிறகு	= கிளிச்சிறகு	
ஈ	+ சிறகு	= ஈச்சிறகு	
கடு	+ கடுமை	= கடுக்கடுமை	
பூ	+ பொலிவு	= பூப்பொலிவு	
சே	+ பெருமை	= சேப்பெருமை	
சோ	+ கொடுமை	= சோக்கொடுமை	

[ஏரிகரை என்பது போல்வன மிகாதவை; அவ்வாறு வருதல் சிறுபான்மை]

†(7) சில மரப்பெயர்கள், வேற்றுமையில் தமக்கு முன் வல்லினம் வருமிடத்து அவற்றிற்கு ஒத்த இன மெல்லெழுத்துக்கள் மிக்கு வர முடியும்.

விள + காய் = விளங்காய்
மா + காய் = மாங்காய்

(8) ஐகார ஈற்று மரப்பெயர்கள், இறுதி ஐகாரம் கெட அம் என்னும் சாரியை பெற்று முடியும்.

பனை + காய் = பனங்காய்
எலுமிச்சை + பழம் = எலுமிச்சம்பழம்
வழுதுணை + காய் = வழுதுணங்காய்

*(9) புளி என்னும் மரப்பெயருக்கு முன் வல்லினம் வரின், இடையே அம் என்னும் சாரியை வரும்.

புளி + காய் = புளியங்காய்
புளி + பழம் = புளியம்பழம்

†(10) புளி என்பது சுவையை யுணர்த்துமிடத்து வல்லினம் வரின், இடையே வல்லெழுத்தே யன்றி, மெல்லெழுத்து மிகுதலும் உண்டு.

புளி + கறி = புளிங்கறி

[புளிக்கறி என வல்லெழுத்து மிக்குவருதலே சிறப்பு.]

(11) தனிக்குறில் அடுத்துவரும் ஆகார ஈற்றுப் பெயர்களுள் சில, அகர ஈறாகத் திரியும்; அதன்மேல் உகரம் சேர்ந்து வரும்.

நிலா — நில — நிலவு கனா — கன — கனவு

†(12) இகர ஐகார ஈற்றுச் சொற்கள் பண்புத் தொகை, உவமத்தொகையாக வருமிடத்து அவற்றிற்கு முன்வரும் வல்லெழுத்து மிகும்.

ஆடி + திங்கள் = ஆடித் திங்கள் — பண்புத்தொகை
[ஆடியாகிய திங்கள்]

வடி + கண் = வடிக்கண் — உவமத்தொகை
[வடிபோன்ற கண்; வடி - மாவடு]

தை + திங்கள் = தைத் திங்கள் — பண்புத்தொகை

பனை + கை = பனைக்கை — உவமத்தொகை
[பனைபோன்ற கை]

*(13) பூ என்னும் சொற்குமுன் வல்லெழுத்து வரின், அதற்கு ஒத்த இன மெல்லெழுத்தும் தோன்றும்.

பூ + கொடி = பூங்கொடி
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தோட்டம் = பூந்தோட்டம்
பூ + பொழில் = பூம்பொழில்

[இதனை, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகக் கொள்க.]

*(14) தனிக் குற்றெழுத்தை யடுத்துள்ள மெய்-யெழுத்துக்கள், உயிர் முதன்மொழி வரின் மிகும்.

கண்	+ அழகிது	=	கண்ணழகிது	அல்வழி
நெய்	+ இனிது	=	நெய்யினிது	
பல்	+ அழகிது	=	பல்லழகிது	
எள்	+ அரிது	=	எள்ளரிது	
பொன்	+ அரிது	=	பொன்னரிது	
கண்	+ அழகு	=	கண்ணழகு	வேற்றுமை
நெய்	+ இனிமை	=	நெய்யினிமை	
பல்	+ அழகு	=	பல்லழகு	
எள்	+ அருமை	=	எள்ளருமை	
பொன்	+ அருமை	=	பொன்னருமை	

(15) யகரமெய் ஒழிந்த மற்ற மெய்யீற்றுச் சொற்-களுக்கு முன் யகரம் வரின், இடையே சிறுபான்மை இகரம் தோன்றுதலும் உண்டு.

ஆண்	+ யாவன்	=	ஆணியாவன்
கல்	+ யாது	=	கல்லியாது
மகள்	+ யாவள்	=	மகளியாவள்
அவன்	+ யார்	=	அவனியார்

†(16) மகரவீற்றுச் சொற்களுக்கு முன் வேற்று-மைப் புணர்ச்சியில் வல்லினம் வருமிடத்து, அம் மகர மெய் கெட, வந்த வல்லெழுத்து மிகும்.

மரம்	+ கிளை	=	மரக்கிளை
மரம்	+ செறிவு	=	மரச்செறிவு
பழம்	+ தோல்	=	பழத்தோல்
மரம்	+ பொந்து	=	மரப்பொந்து

†(17) மகரவீற்றுச் சொற்கள், அல்வழியில் பண்புத் தோகை, உவமத்தோகையாக வருமிடத்து, அம் மகரம் கெட, வரும் வல்லெழுத்து மிகும்.

வட்டம் + பலகை = வட்டப் பலகை
நீலம் + கண் = நீலக்கண்

†(18) ய, ர, ழ இவ்வீற்றுச் சொற்களுக்கு முன் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வருமிடத்து, வல்லெழுத்தாவது மெல்லெழுத்தாவது மிகும்.

நாய் + கால் = நாய்க் கால்
நாய் + செவி = நாய்ச் செவி
தேர் + கால் = தேர்க் கால்
தேர் + தட்டு = தேர்த் தட்டு
பூழ் + கால் = பூழ்க் கால்
பூழ் + சிறகு = பூழ்ச் சிறகு
} வல்லெழுத்து மிக்கது

வேய் + குழல் = வேய்ங் குழல்
ஆர் + கோடு = ஆர்ங்கோடு
பாழ் + கிணறு = பாழ்ங்கிணறு
} மெல்லெழுத்து மிக்கது

[பூழ் - குறும்பூழ் ; காடை]

(19) தனிக்குறில் அடுத்த யகர மெய்க்கு முன் வரும் மெல்லெழுத்துக்கள் மிகுதலும் உண்டு.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்
மெய் + நெறி = மெய்ந்நெறி
மெய் + மொழி = மெய்ம்மொழி

(20) தமிழ் என்னும் சொல், வல்லெழுத்து வருமிடத்து அகரச் சாரியை பெறும்.

தமிழ் + கூத்து = தமிழக் கூத்து
தமிழ் + சேரி = தமிழச் சேரி
தமிழ் + பிள்ளை = தமிழப் பிள்ளை

(21) தாழ் என்னும் சொல், கோல் என்னும் சொல்லோடு சேருமாயின் அகரச் சாரியை பெறும்.

தாழ் + கோல் = தாழக்கோல்

(22) கீழ் என்னும் சொற்குமுன், வல்லெழுத்து வருமாயின், அவ் வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும் உண்டு.

கீழ் + குலம் = கீழ்க்குலம், கீழ் குலம்
கீழ் + தோட்டம் = கீழ்த் தோட்டம், கீழ் தோட்டம்

(23) கீழ், மேல் என்னும் சொற்களுக்கு முன் வல்லெழுத்து வருமாயின், அவை (கீழ், மேல்) ஐகாரம் பெறுதலும் உண்டு.

கீழ்	+ குளம்	= கீழைக் குளம்
	+ சேரி	= கீழைச் சேரி
	+ தோட்டம்	= கீழைத் தோட்டம்
மேல்	+ குளம்	= மேலைக் குளம்
	+ சேரி	= மேலைச் சேரி
	+ தோட்டம்	= மேலைத் தோட்டம்

*(24) தெங்கு என்னும் சொல்முன் காய் என்னும் சொல் வரின், குற்றுகரம் கெட அம்முச் சாரியை வரும்.

தெங்கு + காய் = தெங்கங்காய்

[தெங்கு என்பதில், 'கு' கெட, முதலெழுத்து நீண்டு, தேங்காய் என வழங்குகின்றது.]

(25) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்கு முன் வரும் வல்லெழுத்து மிகும்.

உண்ணு + குதிரை = உண்ணுக் குதிரை
உண்ணு + சிறுவன் = உண்ணுச் சிறுவன்

உண்ணு + தாய் = உண்ணுத் தாய்
உண்ணு + பண்டம் = உண்ணுப் பண்டம்

[உண்ணு — உண்ணுத என்பதன் இறுதி (த) கெட்டது]

(26) செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின்முன் வரும் வல்லெழுத்து மிகும்.

உண்ணு + கிடந்தான் = உண்ணுக் கிடந்தான்
உண்ணு + சென்றான் = உண்ணுச் சென்றான்
உண்ணு + திரிந்தான் = உண்ணுத் திரிந்தான்
உண்ணு + போயினான் = உண்ணுப் போயினான்

[உண்ணு = உண்டு; இச் சொல், உண்ணல் என்னும் பொருளும் தரும்; அப்பொழுது ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் எனப்படும்.]

†(27) வன்றொடர்க் குற்றியலுகரம், அல்வழி வேற்றுமை இரண்டிலும் வல்லெழுத்து வரின், அவ்வல் லெழுத்து மிகப் பெறும்.

சுக்கு + கடிது = சுக்குக் கடிது
பாக்கு + சிறிது = பாக்குச் சிறிது
மறப்பு + நீது = மறப்புத் நீது
கொக்கு + பெரிது = கொக்குப் பெரிது
} அல்வழி

கொக்கு + கால் = கொக்குக் கால்
கொக்கு + சிறகு = கொக்குச் சிறகு
கொக்கு + தலை = கொக்குத் தலை
கொக்கு + புறம் = கொக்குப் புறம்
} வேற்றுமை

†(28) நெடிற்றொடர்க் குற்றுகரங்களுள்ளும் உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள்ளும் டு, று ஈற்றுக் குற்றுகரங்கள் ஒற்று இரட்டி வருமிடத்து, அவற்றிற்கு முன்வரும் வல்லெழுத்து மிகும்.

ஆடு	+ கால்	= ஆட்டுக் கால்	நெடிற் றொடர்
நாடு	+ சிறுமை	= நாட்டுச் சிறுமை	
யாறு	+ தண்ணீர்	= யாற்றுத் தண்ணீர்	
யாறு	+ புனல்	= யாற்றுப் புனல்	
அகடு	+ கொடுமை	= அகட்டுக் கொடுமை	உயிர்த் தொடர்
மலடு	+ சிறுமை	= மலட்டுச் சிறுமை	
முயிறு	+ திரட்சி	= முயிற்றுத் திரட்சி	
வயிறு	+ பசி	= வயிற்றுப் பசி	

(29) மென்றொடர்க் குற்றியலுகரங்களுள் சில, வன்றொடர்க் குற்றியலுகரங்களாகத் திரியும்; அவற்றின்முன் வரும் வல்லெழுத்து மிக்கு முடியும்.

குரங்கு + குட்டி = குரக்குக் குட்டி
குரங்கு + செம்மல் = குரக்குச் செம்மல்
அன்பு + தலை = அறீபுத் தலை
நஞ்சு + பொய்கை = நச்சுப் பொய்கை

(30) இரண்டாம் வேற்றுமை யுருபுக்குமுன் வரும் வல்லினம் மிகும்.

இராமனை + கண்டான் = இராமனைக் கண்டான்
கோயிலை + சுற்றினன் = கோயிலைச் சுற்றினன்
பகைவரை + தாக்கினன் = பகைவரைத் தாக்கினன்
நூலை + படித்தான் = நூலைப் படித்தான்

(31) அந்த, இந்த என்னும் சொற்களுக்கு முன்னும், எந்த என்னும் சொற்கு முன்னும் வரும் வல்லெழுத்து மிகும்.

அந்த + குளம் = அந்தக் குளம்
இந்த + தெரு = இந்தத் தெரு
எந்த + புறம் = எந்தப் புறம்

2. திரிதல்

மொழிக்கு ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்துக்கள் பதினேன்றனுள் — ஞ, ந, ய, ர, ழ ஆகிய ஐந்தெழுத்துக்களும் புணர்ச்சியில் திரியமாட்டா ; வகரம் ஓரோவழித் திரியும் ; ம, ண, ள, ன, ல ஆகிய ஐந்துமே பெரும்பாலும் திரியும்.

(1) அவ், இவ் என்னும் வகரவீற்றுச் சுட்டுப் பெயர்களுக்குமுன் வல்லெழுத்து வருமிடத்து, அந்த வகரம் ஆய்தமாகத் திரியும்.

அவ் + கடிய = அஃகடிய
அவ் + சிறிய = அஃசிறிய
இவ் + தீய = இஃதீய
இவ் + பெரிய = இஃபெரிய

[இவை, இப்போது இவ்வாறாக வழங்குதல் இல்லை ; அக்கடிய, அச்சிறிய, இத்தீய, இப்பெரிய என வழங்கும்.]

(2) வகர வீற்றுச் சுட்டுப் பெயர்களுக்கு முன், ஞ, ந, மக்கள் வருமிடத்து, அவ் வகரமெய், வந்த எழுத்துக்களாக மாறும்.

அவ் + ஞாலம் = அஞ்ஞாலம்
அவ் + நாடு = அந்நாடு
இவ் + மாடு = இம்மாடு

(3) தெவ் என்னும் சொல்லின் வகரமெய், மகர முதன் மொழி வருமிடத்து மகரமெய்யாகத் திரியும்.

தெவ் + முனை = தெம்முனை

*(4) மகரவீறு, அல்வழியில் க, ச, தக்கள் வருமிடத்து, அவற்றின் இனமெல்லெழுத்தாகத் திரியும்.

மரம் + குறிது = மரங் குறிது
மரம் + சிறிது = மரஞ் சிறிது

மரம் + தீயது = மரந் தீயது
யாம் + குறியேம் = யாங் குறியேம்
நாம் + சிறியம் = நாஞ் சிறியம்
தாம் + தூயர் = தாந் தூயர்

†(5) எம், நும், தம் நம் என்னும் சொற்களுக்கு முன் வேற்றுமையில் க, ச, தக்கள் வருமிடத்து, அம் மகரமெய் முறையே ங, ஞ, நக்களாக மாறும்.

எம் + கை = எங் கை
நும் + செவி = நுஞ் செவி
தம் + தலை = தந் தலை
நம் + செவி = நஞ் செவி

†(6) மேற்கூறிய எம், நும், தம், நம் என்னும் முதலிய சொற்களுக்குமுன் ஞ, நக்கள் வரின், அம் மகரமெய், வந்த எழுத்துக்களாக மாறும்.

எம் + ஞாண் = எஞ்ஞாண்
நும் + ஞாண் = நுஞ்ஞாண்
தம் + நாடு = தந்நாடு
நம் + நாடு = நந்நாடு

(7) ணகர ளகர ஈறுகள், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து வருமிடத்து டகரமாகத் திரியும்.

மண் + குடம் = மட்குடம்
மண் + சுவர் = மட்சுவர்
மண் + தன்மை = மட்டன்மை
மண் + பானை = மட்பானை

முள் + கடுமை = முட்கடுமை
முள் + சிறுமை = முட்சிறுமை
முள் + தீமை = முட்டீமை
முள் + பெருமை = முட்பெருமை

(8) ளகரமெய், நகரம் வரின், அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் ணகரமாகத் திரியும்.

எள் + நன்று = எண்ணன்று
எள் + நன்மை = எண்ணன்மை

[வருமொழி நகாரத்திரிபு 10-ஆம் விதியிற் காண்க.]

(9) ணகர ளகரங்களுக்கு முன்வரும் தகரம், அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் டகரமாகத் திரியும்.

மண் + தீது = மட்டீது } அல்வழி
முள் + தீது = முட்டீது }

ஆண் + தலை = ஆண்டலை } வேற்றுமை
முள் + தீமை = முட்டீமை }

(10) ணகர ளகரங்களுக்கு முன்வரும் நகரம், அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் ணகரமாகத் திரியும்.

மண் + நன்று = மண்ணன்று } அல்வழி
முள் + நன்று = முண்ணன்று }

மண் + நன்மை = மண்ணன்மை } வேற்றுமை
முள் + நன்மை = முண்ணன்மை }

(11) னகர, லகர ஈறுகள், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து வருமிடத்து றகரமாகத் திரியும்.

பொன் + குடம் = பொற்குடம்
பொன் + தாமரை = பொற்றாமரை
பொன் + பூ = பொற்பூ

கல் + கடுமை = கற்கடுமை
தூல் + சிலை = தூற்சிலை
கல் + தூண் = கற்றூண்

[வருமொழியில், தகரம் றகரமாகத் திரிந்ததை அடுத்த விதியிற் காண்க.]

(12) னகர லகரங்களுக்குமுன் வரும் தகரம், அல்வழி வேற்றுமை இருவழியிலும் றகரமாகத் திரியும்.

பொன் + தூயது = பொன்றூயது
கல் + தேய்ந்தது = கற்றேய்ந்தது
} அல்வழி

பொன் + தூய்மை = பொற்றூய்மை
கல் + தேய்வு = கற்றேய்வு
} வேற்றுமை

(13) னகர லகரங்களுக்கு முன்வரும் நகரம், அல்வழி வேற்றுமை இருவழியிலும் னகரமாகத் திரியும்.

பொன் + நன்று = பொன்னன்று
கல் + நன்று = கன்னன்று
} அல்வழி

பொன் + நன்மை = பொன்னன்மை
கல் + நன்மை = கன்னன்மை
} வேற்றுமை

(14) தன், என் — இச் சொற்களிலுள்ள னகர மெய் வேற்றுமையில், றகர மெய்யாகத் திரியும்.

தன் + பாடிய = தற்பாடிய
என் + கு = எற்கு

(15) தனிக்குறில் படுத்த லகர ளகர மெய்கள், தகரம் வருமிடத்து ஆய்தமாகத் திரிதலும் உண்டு.

கல் + நீது = கஃறீது
முள் + நீது = முஃடீது
} அல்வழி.

கல் + நீமை = கஃறீமை
முள் + நீமை = முஃடீமை
} வேற்றுமை.

(16) நெல், கொல், சொல் — இச்சொற்களில் உள்ள லகரமெய், அல்வழியிலும் றகரமாகத் திரியும்.

நெல் + கடிது = நெற்கடிது
கொல் + நீது = கொற்றீது
சொல் + பெரிது = சொற்பெரிது

3. கெடுதல் திரிபு

(1) குற்றியலுகர ஈறுகளுக்கு முன் உயிர் முதன் மொழி வரின், அக் குற்றியலுகர உயிர் இருவழியும் கெடும்.

நாகு + அழகிது = நாகழகிது
காசு + ஆயிற்று = காசாயிற்று
எஃகு + இல்லை = எஃகில்லை
பாம்பு + ஈது = பாம்பீது
மரபு + உயர்ந்தது = மரபுயர்ந்தது
} அல்வழி.

நாகு + அருமை = நாகருமை
காசு + ஆக்கம் = காசாக்கம்
மரபு + உயர்வு = மரபுயர்வு
} வேற்றுமை.

இவ்வாறே பிற உயிர்களிலும் ஒட்டுக.

(2) சில சொற்களில் முற்றியலுகரம் கெடுதலும் உண்டு.

கதவு + அழகிது = கதவழகிது — அல்வழி.
கதவு + அடைத்தான் = கதவடைத்தான் — வேற்றுமை.

(3) வாழிய என்னும் சொல்லின் இறுதி எழுத்துக் கெட்டு வாழி என்று வரும்.

ஆ வாழிய — ஆ வாழி

(4) அகம் என்னும் சொற்குமுன் கை, சிறை, செவி என்னும் சொற்கள் வருமிடத்து, அச் சொல்லிலுள்ள க கெடுதலும் உண்டு.

அகம் + கை = அங்கை
அகம் + சிறை = அஞ்சிறை
அகம் + செவி = அஞ்செவி

[கெடாது வருதலே பெரும்பான்மை.]

(5) தனிக்குறிலைச் சாராதவிடத்து ணகர னகர மெய்கள், நகாரம் வரின் இருவழியிலும் கெடும்.

தூண்	+ நன்று	= தூணன்று	அல்வழி
பசுமண்	+ நன்று	= பசுமணன்று	
மான்	+ நன்று	= மானன்று	
செம்பொன்	+ நன்று	= செம்பொனன்று	
தூண்	+ நன்மை	= தூணன்மை	வேற்றுமை
பசுமண்	+ நன்மை	= பசுமணன்மை	
மான்	+ நன்மை	= மானன்மை	
செம்பொன்	+ நன்மை	= செம்பொனன்மை	

[வருமொழி நகாரம் மூறையே ணகார னகாரமாகத் திரிந்தது, மேல், திரிபு புணர்ச்சி 10, 13 - ஆம் விதிகளினால்.]

(6) தனிக்குறிலைச் சாராத விடத்து லகர ளகர மெய்கள், தகரம் வரின் அல்வழியிற் கெடும்.

கால்	+ தீது	= காறீது
அகல்	+ தீது	= அகறீது
வேள்	+ தியன்	= வேடியன்
அவள்	+ தியள்	= அவடியள்

[வருமொழித் தகர மெய் முறையே றகர டகரங்களாக மாறியது, மேல் திரிபு புணர்ச்சி 9, 12-ஆம் விதிகளினால்.]

(7) தனிக்குறிலைச் சார்ந்திராதவிடத்து லகர ளகர மெய்கள், நகாரம் வரின் இருவழியிலும் கெடும்.

கால்	+ நன்று	= கானன்று	அல்வழி.
பகல்	+ நன்று	= பகனன்று	
வேள்	+ நல்லன்	= வேணல்லன்	
மகள்	+ நல்லள்	= மகணல்லள்	
கால்	+ நன்மை	= கானன்மை	வேற்றுமை.
பகல்	+ நன்மை	= பகனன்மை	
வேள்	+ நன்மை	= வேணன்மை	
மகள்	+ நன்மை	= மகணன்மை	

[வருமொழி நகார மெய், முறையே னகர ணகரமாகத் திரிந்தது, மேல், திரிபு புணர்ச்சி 10, 13 - ஆம் விதிகளினால்.]

(8) ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்கள் தம்மொடு தாம் சேருமிடத்து, நிலைமொழியில் முதலெழுத்து ஒன்று தவிர மற்ற எழுத்துக்களெல்லாம் கெடும்; வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாயின், இடையே வகர மெய் தோன்றும்; மெய்யெழுத்தாயின் அதுவே மிகும். [ஒன்பது என்னும் எண் ஒன்றுமட்டும் தன்னொடு தான் சேருமிடத்து இவ்விதி பெறாது.]

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு
ஐந்து + ஐந்து = அவ்வைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு

மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
பத்து + பத்து = பப்பத்து

[இவற்றுள், ஆறு, ஏழு என்பன முதல் குறுகி, **அறு, எழ** என நின்று புணர்ந்தன என அறிக.]

(9) வேறு என்னும் சொல், தன்னொடு தான் புணரின், ஈறு கெட்டு முதல் குறுகும்; இடையே வகர மொற்றுத் தோன்றும்.

வேறு + வேறு = வெவ்வேறு

(10) பாதி என்னும் சொல்லும் தன்னொடு தான் புணருமிடத்து, ஈறு கெட்டு முதல் குறுகும்; வருமொழிப் பகரம் இரட்டிக்கும்.

பாதி + பாதி = பப்பாதி

சில சொற்களுக்குச் சிறப்பு விதி :

87. பல, சில என்னும் சொற்கள் தம்மொடு தாம் புணரின் (1) இயல்பாகவும், (2) ஒற்றுமிக்கும், (3) நிலை மொழியீற்று அகர வுயிர் கெட்டும், (4) அகரம் கெட லகர மெய் றகர மெய்யாகத் திரிந்தும் புணரும்.

(1) பல + பல = பல பல
சில + சில = சில சில } இயல்பு

(2) பல + பல = பலப்பல
சில + சில = சிலச்சில } மிகுதல்

(3) பல + பல = பல்பல
சில + சில = சில்சில } அகரம் கெடுதல்

(4) பல + பல = பற்பல
சில + சில = சிற்சில } அகரம் கெட, லகர மெய் திரிந்தது

பல, சில என்பவற்றின்முன், வேறு வல்லெழுத்து முதன்மொழிகள் புணரினும் நிலைமொழி யீற்று அகரம் கெடும்.

பல + கடல் = பல் கடல்
சில + சொல் = சில் சொல்
பல + தானை = பல் தானை
சில + படை = சில் படை

88. தேன் என்னும் சொற்கு முன் வல்லெழுத்து முதன் மொழி வரின், இருவழியிலும் (1) இயல்பாகப் புணர்தலும், னகர மெய் கெட (2) வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் உண்டு.

(1) தேன் + கடிது = தேன் கடிது
தேன் + சிறிது = தேன் சிறிது } அல்வழி

தேன் + கடுமை = தேன் கடுமை
தேன் + பெருமை = தேன் பெருமை } வேற்றுமை

(2) தேன் + குழம்பு = தேக் குழம்பு } அல்வழி
தேன் + குழம்பு = தேங் குழம்பு }

தேன் + குடம் = தேக் குடம் } வேற்றுமை
தேன் + குடம் = தேங் குடம் }

தேன் என்னும் சொற்கு முன் மெல்லெழுத்து முதன்மொழி வரின், இருவழியிலும் (1) இயல்பாகப் புணர்தலும் (2) னகரம் கெடுதலும் உண்டு.

(1) தேன் + மொழி = தேன்மொழி — அல்வழி
தேன் + மாட்சி = தேன்மாட்சி — வேற்றுமை

(2) தேன் + மொழி = தே மொழி — அல்வழி
தேன் + மலர் = தே மலர் — வேற்றுமை

தேன் என்பதன் முன் இடையினம் வரின் இரு வழியிலும் இயல்பாகும்.

தேன் + யாது = தேன் யாது — அல்வழி
தேன் + யாப்பு = தேன் யாப்பு — வேற்றுமை

89. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி :

சிறப்பு விதி—இரண்டாம் வேற்றுமைத் தொகையாயிருப்பின், (1) இயல்பாக முடியவேண்டிய சொற்கள் திரிந்து முடியும்; (2) திரிந்து முடியும் சொற்கள் இயல்பாகப் புணரும்.

(1) மகட் கொடுத்தான்

உயர்திணைப் பெயரீற்றுமெய், வல்லெழுத்துவரின் திரியாது இயல்பாக முடிதல் முறை; ஈண்டு, இரண்டாம்

வேற்றுமைத் தொகையாகலின், மகள் என்பதன் ஈற்று ளகர மெய் திரிந்தது.

(2) பொன் கொடுத்தான்

னகார வீறுகள் வல்லெழுத்து வருமிடத்து வேற்றுமையில் றகாரமாகத் திரிந்து முடிதல் முறை. ஈண்டு, இரண்டாம் வேற்றுமைத் தொகையாகலின், போன் என்னும் சொல்லின் ஈற்று னகர மெய் இயல்பாயிற்று.

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப் பெயரீற்று மொழிகளுக்குமுன் வல்லெழுத்து மிகும்; அஃறிணைப் பெயர்களுக்குமுன் மிகாது.

பெரியோர் + கண்டான் = பெரியோர்க் கண்டான்
நீர் + பருகினன் = நீர் பருகினன்

இரண்டாம் வேற்றுமையுருபு (1) உயர்திணைப் பெயரிடத்துத் தொக்குவருதலும், (2) பொதுப் பெயரிடத்து விரிந்தும் தொக்கும் வருதலும் உண்டு.

(1) 'ஆடூஉ அறிசொல்'

ஆடூஉ என்பது, உயர்திணைப் பெயராகலின், ஆடூஉவினை அறியும் சொல் என இரண்டாம் வேற்றுமை யுருபு விரிந்து வரவேண்டுவது ஈண்டுத் தொக்கு வந்தது.

(2) கொற்றனைக் கண்டான் — உருபு விரிந்தது.
ஆண் பெற்றாள் — உருபு தொக்கது.

இரண்டாம் வேற்றுமை யுருபு அஃறிணைப் பெயர்களில் தொக்கு வருதல் சிறப்பு,

பாடம் படித்தான்.

90. வடமொழிப் புணர்ச்சி :

வடமொழித் தொடர்கள், தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ் வடநூற் புணர்ச்சியையே பெறும்.

அது — (i) தீர்க்க சந்தி, (ii) குண சந்தி, (iii) விருத்தி சந்தி என மூவகைப்படும்.

(i) தீர்க்க சந்தி :

(1) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன், அகர ஆகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஆகாரம் தோன்றும்.

பத + அம்புயம் = பதாம்புயம்
பரம + ஆனந்தம் = பரமானந்தம்

கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்
சதா + ஆனந்தம் = சதானந்தம்

(2) இகர ஈகாரங்களில் ஒன்றன்முன், இகர ஈகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஈகாரம் தோன்றும்.

கவி + இந்திரன் = கவீந்திரன்
கிரி + ஈசன் = கிரீசன்

மகீ + இந்திரன் = மகீந்திரன்
நதீ + ஈசன் = நதீசன்

(3) உகர ஊகாரங்களில் ஒன்றன்முன், உகர ஊகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஊகாரம் தோன்றும்.

குரு + உபதேசம் = குரூபதேசம்
சிந்து + ஊர்மி = சிந்தூர்மி

சுயம்பு + உபதேசம் = சுயம்புபதேசம்
சுயம்பு + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்

(ii) குண சந்தி :

(1) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

தேவ + இந்திரன் = தேவேந்திரன்
தேவ + ஈசன் = தேவேசன்

தரா + இந்திரன் = தரேந்திரன்
மகா + ஈசன் = மகேசன்

(2) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஓகாரம் தோன்றும்.

பாத + உதகம் = பாதோதகம்
ஞான + ஊர்ச்சிதம் = ஞானோர்ச்சிதம்

கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

(iii) விருத்தி சந்தி :

(1) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன், ஏகார ஐகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஐகாரம் தோன்றும்.

பரம + ஏகாந்தி = பரமைகாந்தி
சர்வ + ஐச்வர்யம் = சர்வைச்வர்யம்

தேவதா + ஏகத்வம் = தேவதைகத்வம்
தேவதா + ஐக்யம் = தேவதைக்யம்

(2) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஓகார ஔ காரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஔகாரம் தோன்றும்.

வந + ஓஷதி = வனௌஷதி
திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்

மகா + ஓஷதி = மகௌஷதி
மகா + ஔதார்யம் = மகௌதார்யம்

(3) வடமொழி உயிரீற்றுச் சொற்களுக்குமுன், வல்லெழுத்து முதலில் உள்ள வடசொற்கள் வரின், வடமொழியிலக்கணம் போலவே (மிகாது) முடியும்.

அளி + குலம் = அளிகுலம்
ஆதி + பகவன் = ஆதிபகவன்



IV. நன்னூல்

எழுத்து

*(1) குற்றியலிகரம் :

யகரம் வரக்குற ளுத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய.

யகரம் வர - யகரத்தை முதலிலே யுடைய சொல் வர, குறள் உ திரி இகரமும் - குற்றியலுகரம் திரிந்த இகரமும், அசைச்சொல் - அசைச்சொல்லாகிய, மியா வின் இகரமும் - மியா என்பதன் (மகரத்தின்மேலிருக் கிற) இகரமும், குறிய - குற்றிய லிகரங்களாம்.

*(2) குற்றியலுகரம் :

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் ரோடரவும் பெறுமே.

நெடிலோடு - தனிநெடி லுடனே, ஆய்தம் - ஆய் தமும், உயிர் - உயிரெழுத்துக்களும், வலி - வல்லெழுத் துக்களும், மெலி - மெல்லெழுத்துக்களும், இடை - இடையெழுத்துக்களும் (ஆகிய எழுத்துக்களுள் ஒன் றில்), தொடர் - (ஈற்றுக்கு அயலெழுத்தாகத்) தொடர் ந்து வருகின்ற, மொழி இறுதி - சொல்லினிறுதியில்,

வன்மை ஊர் உகரம் - வல்லெழுத்துக்கள் யாதாயினும் ஒன்றன்மேல் ஏறிவருகின்ற உகரமானது, அஃகும் - (தன் மாத்திரையிற்) குறுகும்; பிற - பிற எழுத்துக்கள், மேல் தொடரவும்-மேலே தொடரவும், பெறும் (தனிநெடி லொழிந்த ஐந்து தொடரும்) பெறும்.

†(3) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் :

பன்னீ ருயிரும் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.

பன்னீருயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், கசதநபமவயஞங - க ச த ந ப ம வ ய ஞ ங ஆகிய, ஈரைந்து உயிர்மெய்யும் - பத்து உயிரேறிய மெய் யெழுத்துக்களும், மொழிமுதல் - சொல்லுக்கு முதலாகும்.

மெய் தனித்து முதலாகாமையால், 'உயிர் மெய்' என்றார். இஃது, 'இன்னதல்லது இதுவென மொழிதல்' என்னும் உத்தி.

(4) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் :

ஆவி ஞணநமன யரல வழளமெய்
சாயு முகரம் நாலாறும் ஈறே.

ஆவி - (தனித்தும் மெய்யோடும் வரும்) பன்னிரண்டு உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் - ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள ஆகிய பதினொரு மெய்களும், சாயும் உகரம் - குற்றிய லுகரமும் (ஆகிய), நாலாறும் - இருபத்துநான்கெழுத்தும், ஈறு-மொழிக்கு ஈறாகும்.

†(5) **மொழியிறுதிப்போலி :**

மகர விறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

அஃறிணைப் பெயரின் - பால்பகா அஃறிணைப் பெயர்களில், இறுதி மகரம் - ஈற்றில் நின்ற மகரமெய், னகரமோடு - னகரமெய்யோடு, உறழா - ஒத்து, நடப்பன - நடப்பவை, உள - உண்டு.

போலியாவது, ஒருமொழியில் ஓர் எழுத்து நிற்கு மிடத்தில், அந்த எழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து வந்தாலும் பொருள் வேறுபடாமல் இருப்பது; போலி - போன்றிருப்பது. அஃது இடவகையால்-முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என மூவகைப்படும்.

இங்கு, மகரம் குறிலிணையைச் சேர்ந்து வருவது என்றறிக.

*(6) **பகாப்பதம் :**

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றுய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்.

பகுப்பால் - பிரிக்கப்படுதலினாலே, பயன் அற்று-(பகுதி விகுதி முதலிய) பயன் இல்லாமல், இடுகுறி யாகி-இடுகுறிப் பெயராகி, முன்னே ஒன்றுய்-பண்டைக் காலந்தொட்டு ஒன்றுகி, முடிந்து இயல்கின்ற - முடிந்து நடக்கின்ற, பெயர் - பெயர்ச் சொல்லும், வினை - வினைச் சொல்லும், இடை - இடைச் சொல்லும், உரி - உரிச் சொல்லும் ஆகிய, நான்கும் - நால்வகைச் சொற்களும், பகாப்பதம் - பகாப்பதங்களாகும்.

†(7) பகுபதம் :

போருளிடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபத பதமே.

பொருள் - பொருளினாலும், இடம் - இடத்தினாலும், காலம் - காலத்தினாலும், சினை-உறுப்பினாலும், குணம் - பண்பினாலும், தொழிலின் - தொழிலினாலும், வரு - வருகின்ற, பெயர் - பெயர்ச் சொற்களும்; பொழுது கொள் - (தெரிநிலையாகவும் குறிப்பாகவும்) காலத்தைக் கொள்ளும், வினை - வினைச் சொற்களும், பகுபதம் - பகுபதங்களாகும்.

'பொழுதுகொள் வினை பகுபதம்' எனவே, தெரிநிலையும் குறிப்பும் ஆகிய அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாம் என்பது அருத்தாபத்தியாற் கொள்க.

†(8) பகுபதவுறுப்புக்கள் :

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமேப் பதங்களும்.

பகுதி - முதனிலையும், விகுதி - இறுதி நிலையும், இடைநிலை - இடைநிலையும், சாரியை - சாரியையும், சந்தி - சந்தியும், விகாரம் - விகாரமும், ஆறினும் - (ஆகிய இந்த) ஆறு உறுப்பினுள்ளும், ஏற்பவை - (பொருளமைதிக்கு) ஏற்பவற்றை, முன்னி - நினைத்து, புணர்ப்ப - கூட்டி முடிக்க, எப்பதங்களும் - எவ்வகைப் பட்ட பகுபதங்களும், முடியும் - முடிவு பெறும்.

† (9) மையீற்றுப் பண்புப்பெயரின் விகாரம் :

ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னெற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

ஈறு - இறுதியிலுள்ள மை விகுதியானது, போதல் - கெடுதலும், இடை - நடுநின்ற, உகரம் - உகரமானது, இ ஆதல் - இகரமாதலும், ஆதி - முதலில் நின்ற குறிலானது, நீடல் - நெடிலாதலும், அடிஅகரம் - முதலில் நின்ற அகரமானது, ஐ ஆதல் - ஐகார மாதலும், தன் ஒற்று - தன் மெய்யானது, இரட்டல் - நடுவே இரட்டித்து வருதலும், முன்னின்ற மெய் - முன்னின்ற மெய்யானது, திரிதல் - வேறொரு மெய்யாதலும், இனம் - வரும் எழுத்திற்கு இனவெழுத்து, மிகல் - மிகுதலும், இனையவும் - இவைபோல்வன பிறவும், பண்பிற்கு - மையீற்றுப் பண்புப்பெயர்க்கு, இயல்பு - இயல்பாகும்.

இவ் விகாரங்களைப் பதப்புணர்ச்சிக்குங் கொள்க. இஃது, 'ஒப்பின் முடித்தல்' என்னும் உத்தி.

(10) விகுதி :

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமோ டும்மூர்
கடதறஐ ஆய் இம் மின் இர் ஈர்
ஈயர் க ய உம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

அன் ** என்பவும் - அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார் அ ஆ கு டு து று என் ஏன் அல் அன் அம் ஆம்

ஏம் ஏம் ஓம் ஆகிய விகுதிகளோடு, கும் டும் தும் றும் ஐ ஆய் இ மின் இர் ஈர் ஈயர் க ய உம் என்னும் இவையும் சேர்ந்து வருகின்ற விகுதிகள் முப்பத்தேழும், பிறவும்- இவைபோல்வன பிறவும், வினையின் விகுதி-வினைப் பகுபதங்களின் விகுதிகளாகும்; (இவற்றுள்), பெயரினும்- பெயர்ப் பகுபதங்களிலும், சில - சில விகுதிகள் வரும்.

அன் விகுதி, தன்மை ஒருமைக்கு எதிரது போற்றல் என்னும் உத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின், வலியுறுத்தற்குப் பின்னும், 'அன்' எனக் கூறினர்.

உம் ஊர் கடதற என்பது - உம் என்பது ஏறிய ககர டகர தகர றகர மெய்களாம்; அவை: கும், டும், தும், றும் என்பன.

†(11) காலங் காட்டும் விதி:

றவ்வோ டுகர வும்மை நிகழ் பல்லவும்
தவ்வோ டிறப்பும் எதிர்வும் டவ்வோடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்
செலவோடு வரவுஞ் செய்யும் நிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கு மீங்கே.

றவ்வொடு-றகர மெய்யோடு கூடிய, உகர உம்மை- உகர விகுதியும் உம் விகுதியும் (று, றும்), நிகழ்பு அல்லவும் - நிகழ்கால மல்லாத இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்,

தவ்வொடு - தகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (து, தும்), இறப்பும் எதிர்வும் - இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்,

டவ்வொடு - டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (டு, டும்), கழிவும் - இறந்த காலத்தையும்,

கவ்வொடு-ககரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (கு, கும்), எதிர்வும்-எதிர்காலத்தையும்,

மின் - மின் விகுதியும், எவல் - முன்னிலை ஒருமை வேவல் விகுதிகளும், வியங்கோள் - வியங்கோள் விகுதிகளும், இ - இகர விகுதியும், மார் - மார் விகுதியும், எதிர்வும் - எதிர் காலத்தையும்,

பாந்தம் (ப + அந்தம்) - பகர விகுதி, செலவொடு வரவும் - இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்,

செய்யும் - செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று விகுதி, நிகழ்வு எதிர்வும் - நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும்,

எதிர்மறை - எதிர்மறை ஆகார விகுதி, மும்மையும் - மூன்று காலத்தையும்,

ஏற்கும் - ஏற்றுவரும், ஈங்கு - மேற்சூத்திரத்தில் 'இவை சிலவில' என்றவைகளுள்.

இகர விகுதி தனித்து இயங்காமையால் யாதாயினும் ஒரு மெய்யினை ஊர்ந்தே வரும் என்பதும், அம் மெய் காலங் காட்டாது என்பதும், அது (மெய்) காலங் காட்டின் இகர விகுதி காலங் காட்டாது என்பதும், செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடை நிலையின்றி ஈறு காலங் காட்டுவதாயினும், அஃது எதிர் காலங் காட்டும் என மேல் வினையியலில் கூறுதலால், இங்கே 'செய்யும்' என்று எடுத்தோதியது செய்யும் என்னும் முற்று என்பதும் பெறப்பட்டன.

† (12) வழக்கு :

இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉ என் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

I. (1) இலக்கணம் உடையது - இலக்கண வழியால் வருவதும், (2) இலக்கணப்போலி - (இலக்கண மில்லை யாயினும்) இலக்கண முடையதுபோல வருவதும், (3) மரூஉ-இலக்கணஞ் சிதைந்து மருவியதும், என்று ஆகும் - என்று வழங்குகின்ற, மூவகை இயல்பும் - மூவகை இயல்பு வழக்கும் ;

II. (1) இடக்கர் அடக்கல் - சொல்லத் தகாததை மறைத்துச் சொல்வதும், (2) மங்கலம் - மங்கல மில்லாததை யொழித்து மங்கலமாகக் கூறுவதும், (3) குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் ஒரு பொருளைத் தமக்குள் ஒரு குறியால் கூறுவதும், என்னும் - என்று வழங்குகின்ற, முத் தகுதியோடு - மூன்று தகுதி வழக்குடனே, ஆறும் - ஆறுகும், வழக்கியல் - வழக்கிலக்கணம்.

† (13) குறிப்பும் வெளிப்படையும் ஆகிய சொற்கள்

ஒன்றேழி போதுச்சொல் விகாரம் தத்தி
ஆகு பெயர் அன் மொழிவினைக் குறிப்பே
முதற்றேகை குறிப்பொ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி அல்லன வெளிப்படை

I. (1) ஒன்று ஒழி பொதுச்சொல் - இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை யொழிக்கும் பொதுச்

சொல்லும், (2) விகாரம் - வலித்தல் முதலாகிய செய்யுள் விகாரச் சொற்களும், (3) தகுதி - மூவகைத் தகுதி வழக்குச் சொற்களும், (4) ஆகுபெயர் - ஆகு பெயர்ச் சொல்லும், (5) அன்மொழி - அன்மொழித் தொகைச் சொல்லும், (6) வினைக் குறிப்பு - வினைக் குறிப்புச் சொல்லும், (7) முதல் - முதற் குறிப்புச் சொல்லும், (8) தொகை - தொகைக் குறிப்புச் சொல்லும், (9) குறிப்போடு - இம் முதலும் தொகையும் அல்லாத பிற குறிப்புச் சொல்லும், இன்ன பிறவும் - இவை போல்வன பிறவும், குறிப்பின் - குறிப்பினால், தரு - பொருளைத் தருகின்ற, மொழி - சொற்களாம்.

II. அல்லன - இவை அல்லனவெல்லாம், வெளிப்படை - வெளிப்படையாகப் பொருளைத் தருகின்ற சொற்களாம்.

†(14) ஆகுபெயர்:

போருள்முத லாரே டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தோன்முறை யுரைப்பன ஆகு பெயரே.

பொருள் முதல் ஆரேடு - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுடனே, அளவை - (எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் ஆகிய நால்வகை) அளவையும், சொல் - சொல்லும், தானி - தானியும், கருவி - காரணமும், காரியம் - காரியமும், கருத்தன் - கருத்தாவும், ஆதியுள் - ஆதியாக வரும் பொருள்களுள், ஒன்றன் - ஒரு பொருளினது, பெயரான் - இயற்பெயரால், அதற்கு - அப் பொருளுக்கு, இயை - இயைந்த, பிறிதை - பிறிதொரு பொருளை,

தொன்முறை - தொன்றுதொட்டு வரும் முறையே, உரைப்பன - சொல்லப்பட்டு வருவன, ஆகுபெயர் - ஆகுபெயர்களாம்.

† (15) எழுவாய் வேற்றுமை :

அவற்றுள்,
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினைக்கொளல் அதன்பய னிலையே.

அவற்றுள் - முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள், எழுவாய் - முதல் வேற்றுமையின், உருபு - உருபாவது, திரிபு இல் - திரிதலில்லாத, பெயரே - பெயரேயாகும்; வினை - வினையையும், பெயர் - பெயரையும், வினை - வினைவையும், கொளல் - கொள்ளவருதல், அதன் - அவ்வேற்றுமையினது, பயன்நிலை - பொருள் நிலையாம்.

எனவே, அத் திரிபில்லாத பெயர், தானே தன் பொருளை வினைமுதற்பொருளாக வேற்றுமை செய்யும் என்பதாயிற்று. எழுவாய், வினை முதல், செய்பவன் என்பன ஒருபொருட் சொற்கள். இதனை வட நூலார், கருத்தா என்பர்.

† (16) இரண்டாம் வேற்றுமை :

இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்.

இரண்டாவதன் உருபு - இரண்டாம் வேற்றுமையின் உருபாவது, ஐயே - ஐ ஒன்றுமேயாம்; அதன் -

அதனுடைய, பொருள் - பொருள்களாவன, ஆக்கல் - ஆக்கப்படு பொருளும், அழித்தல் - அழிக்கப்படு பொருளும், அடைதல் - அடையப்படு பொருளும், நீத்தல் - நீக்கப்படு பொருளும், ஒத்தல் - ஒக்கப்படு பொருளும், உடைமை - உடைமைப் பொருளும், ஆதி ஆகும் - முதலியனவாகும்.

(17) மூன்றும் வேற்றுமை :

மூன்ரு வதனுரு பாலான் ஓடோடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.

மூன்ரு வதன் - மூன்றும் வேற்றுமையின், உருபு - உருபுகளானவை, ஆல் ஆன் ஓடு ஓடு - ஆலும் ஆனும் ஓடும் ஓடுவும் ஆகும்; அதன் - அவ்வுருபுகளுடைய, பொருள் - பொருள்களானவை, கருவி - கருவிப் பொருளும், கருத்தா - கருத்தாப் பொருளும், உடன் நிகழ்வு - உடன் நிகழ்ச்சிப் பொருளும் ஆகும்.

இந்த நான்கு உருபுகளுக்கும் மூன்று பொருள்களும் ஆகும் எனப் பொதுப்படச் சொன்னாயினும், 'ஏற்புழிக் கோடல்' என்னும் உத்தியால், அவ்வுருபுகளுள், ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவிப் பொருளும், கருத்தாப் பொருளும்; ஓடு ஓடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சிப் பொருளும் சிறந்தனவெனக் கொள்க.

(18) நான்காம் வேற்றுமை :

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே.

நான்காவதற்கு - நான்காம் வேற்றுமைக்கு, உருபு - உருபாவது, குவ்வே ஆகும் - குவ்வொன்றுமேயாகும்; பொருள் - அவ்வுருபின் பொருள்களாவன, கொடை - கொடையும், பகை - பகையும், நேர்ச்சி - நட்பும், தகவு - தகுதியும், அதுஆதல் - முதற்காரணமும், பொருட்டு - நிமித்தகாரணமும், முறை - முறையும், ஆதியின் - முதலான பொருள்களில், இதற்கு இது எனல் - இதற்கு இதுவென்பதுபட வருவன ஆகிய பலவுமாம்.

கொடை யெனவே, கோடற் பொருளும்; பகை யெனவே, பகைதொடர் பொருளும்; நேர்ச்சியெனவே நட்புத்தொடர் பொருளும்; தகுதி யெனவே தகுதி யுடைப் பொருளும்; அதுவாதல் எனவே, முதற் காரண காரியப் பொருளும்; பொருட்டு எனவே, நிமித்தகாரணகாரியப் பொருளும்; முறை எனவே, முறைக்கு இயை பொருளும் குவ்வுருபின் பொருள் களாம் என்பதூஉம் பெற்றும்.

† (19) ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தா வதனுரு பில்லும் இன்னும்
நீங்கலோப் பெல்லை ஏதுப் பொருளே.

ஐந்தாவதன் - ஐந்தாம் வேற்றுமையின், உருபு - உருபுகளானவை, இல்லும் இன்னும் - இல்லும் இன்னுமாம்; பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன, நீங்கல் - நீக்கப்பொருளும், ஒப்பு - ஒப்புப்பொருளும், எல்லை - எல்லைப் பொருளும், ஏது - ஏதுப்பொருளுமாகிய இந் நான்குமாம்.

(20) ஆறும் வேற்றுமை :

ஆற னேருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபி னாக்கம் ஆந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

ஆறன் - ஆறும் வேற்றுமையின், ஒருமைக்கு - வரு மொழியின் ஒருமைப் பொருண்மைக்கு, அதுவும் ஆது வும் - அது என்பதும் ஆது என்பதும், பன்மைக்கு - வருமொழியின் பன்மைப் பொருண்மைக்கு, அவ்வும் - அகரமும், உருபாம் - உருபுகளாகும்; பொருள் - அவற்றின் பொருள்களாவன, பண்பு - குணமும், உறுப்பு - அவயவமும், ஒன்றன்கூட்டம் - ஒருபொருட் கூட்டமும், பலவின் ஈட்டம் - பலபொருட் கூட்டமும், திரிபின் ஆக்கம் - ஒன்று திரிந்து ஒன்றுதலும், ஆம் தற்கிழமையும் - ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருள் களையும், பிறிதின்கிழமையும் - அவை யல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும், பேணுதல் - உடையனவாகக் கொள்ளுதலாகிய இருவகைச் சம்பந்தப் பொருள்களாம்.

தற்கிழமைப் பொருளாவது - தன்னைவிட்டு நீங் காத உரிமை யுடையது.

எனது கை என்பது போல்வன.

பிறிதின் கிழமைப் பொருளாவது - தன்னின் வேறாய் உரிமை யுடையது.

எனது புத்தகம் என்பது போல்வன.

மேற்கூறிய ஐந்தும் தற்கிழமைப் பொருளெனவே, இவை யல்லாத பொருளும் இடமும் காலமுமாகிய

மூன்றும் பிறிதின் கிழமையாம். ஆகவே, பலவகையாலும் வருகின்ற சம்பந்தப் பொருளே இவ் வேற்றுமை யுருபுகளின் பொருள் என்பதாயிற்று.

(21) ஏழாம் வேற்றுமை:

ஏழ னுருபு கண் ஆதி யாகும்
பொருண்முத லாறும் ஓரிரு கிழமையின்
இடனுய் நிற்றல் இதன்பொருள் என்ப.

ஏழன் - ஏழாம் வேற்றுமையின், உருபு - உருபுகளானவை, கண் ஆதியாகும் - கண் முதலாகிய பலவுமாம்; இதன் - இவ்வேழனுருபின், பொருள் - பொருளாவது, பொருள் முதல் - பொருளாதியாகிய, ஆறும் - ஆறும், ஓர் இரு கிழமையின் - (ஆறும் வேற்றுமைச் சூத்திரத்தில் சொல்லப்பட்ட) இருகிழமைப் பொருள்களுக்கும், இடன் ஆய் நிற்றல் - இடமாய் நிற்கின்ற இடப் பொருளாம், என்ப - என்று சொல்லுவர் புலவர்.

(22) விளியுருபுகளுக்குப் புறனடை:

அண்மையில் இயல்புமீ றழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.

(முன் சொல்லப்பட்ட விளி யுருபுகள்) (1) அண்மையின் - அண்மை விளிகளுக்கு, இயல்பும் ஈறு அழிவும் - இயல்பாதலும் ஈறு கெடுதலும், (2) சேய்மையின்-சேய்மைவிளிகளுக்கு, அளபும்-அளபெடுத்தலும், (3) புலம்பின் - புலம்பல் விளிகளுக்கு, ஓவும் - ஓகாரம் மிகுதலும், ஆகும் - ஆகிவரும்.

(23) **வினையெச்ச வாய்பாடுகள் :**

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தோன் ருறுமுக் காலமும் முறைதரும்.

செய்து...செய்யியர்-செய்து என்பது முதல் செய்யியர் என்பது ஈருகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும், வான் பான் பாக்கு - வான்முதலிய மூன்று விகுதிகளைக்கொண்டு வருவனவும், இன - இவைபோல்வன பிறவும், வினையெச்சம்-வினையெச்ச வினைகளாம்; ஐந்து-முன்னைய ஐந்தும், ஒன்று - நடுநின்ற ஒன்றும், ஆறு-பின்னைய ஆறும், முக்காலமும் - இறந்த காலமும் நிகழ் காலமும் எதிர் காலமும், முறை - முறையாக, தரும் - காட்டுவனவாம்.

அஃதாவது, செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்து எச்சங்கள் இறந்தகாலத்தையும், செய என்னும் வினையெச்சம் ஒன்று மட்டும் நிகழ் காலத்தையும், செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு, என்னும் ஆறும் எதிர்காலத்தையும் காட்டும் என்பதாம்.

இவற்றுள் செய்து, என்னும் வினையெச்சம் ஒழிந்த மற்றவை, இடைநிலை பெறுமல் தாமே காலங் காட்டும்.

† (24) **செய்யுமென் வினைமுற்றுக்குச் சிறப்புவிதி :**

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

செய்யும் என் முற்று - செய்யும் என்னும் முற்றானது, பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பன்மைப் படர்க்கையிலும், முன்னிலை - முன்னிலையிலும், தன்மையில் - தன்மையிலும், செல்லாது ஆகும் - செல்லாது.

எனவே, செய்யும் என்னும் முற்று — பலர்பால் ஒழிந்த மற்றைப் படர்க்கை நாற்பாலினுஞ் செல்லும் என்பது பெற்றாம்.

† (25) திணை பால் வழுவமைதி

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.

பால் திணை - பாலும் திணையும், உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும் - மேன்மையினாலும், சிறப்பினும் - சிறப்பினாலும், செறலினும் - கோபத்தினாலும், இழிப்பினும் - பழிப்பினாலும், இழுக்கினும் - வழுவிவரினும், இயல்பு - இயல்பாகும்.

† (26) கால வழுவமைதி :

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறாஉமுக் காலமும் ஏற்புழி.

விரைவினும் - விரைவினாலும், மிகவினும் - மிகுதியினாலும், தெளிவினும் - தெளிவினாலும், இயல்பினும் - (இம்மூன்று காரணங்களுமின்றி) இயல்பினாலும், முக்காலமும் - மூன்று காலங்களும், பிறழவும் பெறாஉம் - ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும், ஏற்புழி - ஏற்குமிடத்து.

(27) ஏகார இடைச்சொல் :

பிரிநிலை வினஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனஆ றேகா ரம்மே.

ஏகாரம் - ஏகார இடைச்சொல், பிரிநிலை - பிரி நிலையும், வினை - வினவும், எண் - எண்ணும், ஈற்றசை - ஈற்றசையும், தேற்றம் - தெளிவும், இசைநிறை - இசை நிறையும், என-என்று, ஆறு-ஆறு பொருளைத் தரும்.

† (28) ஓகார இடைச்சொல் :

ஒழியிசை வினஎச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

ஓ - ஓகார இடைச்சொல், ஒழியிசை - ஒழியிசை யும், வினை - வினவும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை - எதிர்மறையும், தெரிநிலை - தெரிநிலையும், கழிவு - கழி வும், அசைநிலை - அசைநிலையும், பிரிப்பு - பிரிநிலையும், என - என்று, எட்டு - எட்டுப் பொருளைத் தரும்.

சிறப்பு - உயர்வு சிறப்பும், இழிவு சிறப்பும் என இருவகைப்படும்.

(29) உம்மை இடைச்சொல் :

எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே.

உம்மை - உம்மை இடைச்சொல், எதிர்மறை - எதிர்மறையும், சிறப்பு - சிறப்பும், ஐயம் - ஐயமும், எச்சம் - எச்சமும், முற்று - முற்றும், அளவை - அள

வையும், தெரிநிலை - தெரிநிலையும், ஆக்கம் - ஆக்கமும் ஆகிய, எட்டு - எட்டுப் பொருளைத் தரும்.

சிறப்பும்மை, உயர்வு சிறப்பும் இழிவு சிறப்பும் என இருவகைப்படும். எச்சவும்மை — இறந்தது தழீ இயதும், எதிரது தழீஇயதும் என இருவகைப்படும்.

† (30) வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகள் :

வேற்றுமை ஐம்முத லாரும் அல்வழி
தொழில்பண் புவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

வேற்றுமை தழுவுதொடர்-வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாவது, ஐ முதல் ஆறும் - ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந் தாகிலும் வெளிப்பட்டாகிலும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம் ;

அல்வழி (தழுவுதொடர்) - அல்வழிப் பொருட் புணர்ச்சியாவது, தொழில் - வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை - உவமைத்தொகையும், உம்மை - உம்மைத்தொகையும், அன்மொழி - அன் மொழித்தொகையும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும், ஈரெச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்) முற்று - தெரிநிலைவினைமுற்று குறிப்புவினை முற் றுக்களும், அடுக்கு - அடுக்கும், என - என்று, ஈரேழ் - பதினான்கு வகையாம்.

'தழுவு தொடர்' என்பதை வேற்றுமையோடும், அல்வழியோடும், 'ஈர்' என்பதை முற்றோடும் கூட்டுக.

*** (31) விகாரப்புணர்ச்சி :**

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமு விடத்து மாகும்.

தோன்றல் - (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், திரிதல் - வேறுபடுதலும், கெடுதல் - கெடுதலும், விகாரம் - விகாரமாகும்; மூன்றும் - இம் மூவகை விகாரமும், மொழி - நிலைமொழி வருமொழிக ளுடைய, மூவிடத்தும் - முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும், ஆகும் - (ஏற்றபடி) வரும்.

† (32) போதுப்பெயர் உயர்திணைப் பெயர்களோடு நாற்கணமும் புணர்தல் :

போதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை.

(1) பொதுப்பெயர் - (இருதிணைகளுக்கும்) பொது வான பெயர்களிலும், உயர்திணைப் பெயர்கள் - உயர் திணைப் பெயர்களிலும், ஈற்று மெய் - ஈற்றிலுள்ள மெய்கள், வலி - வல்லெழுத்து முதன் மொழிகள், வரின் - வந்தால், இயல்பாம் - இயல்பாகும்;

(2) ஆவி - உயிரையும், ய ர - யகர ரகர மெய்களை யும் ஈறாகவுடைய அவ் விருவகைப் பெயர்களுக்கும், முன் - முன் வருகின்ற, வன்மை - வல்லெழுத்துக்கள், மிகா - மிகாவாம்;

(3) உயர்திணை - உயிரீறும் மெய்யீறுமாகிய உயர் திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து,

சில விகாரமாம் - நிலைமொழி வருமொழிகள் விகாரப் படுவனவுஞ் சில வுளவாம் ;

இச் சூத்திரத்துள், முதல் விதி நிலைமொழியை நோக்கியது ; இரண்டாம் விதி வருமொழியை நோக்கியது.

பொதுப் பெயராவது — உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர். பொதுப் பெயர், விரவுப்பெயர் என்பன ஒரு பொருட் சொற்கள்; விரவுப் பெயர் - (உயர்திணையிலும் அஃறிணையிலும் கலத்தலுடைய பெயர்.)

வலி என்றது - மொழிக்கு முதலில்வரும் க ச த ப க்களை.

நாற்கணமாவன — வன்கணம், மென்கணம், இடைக் கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

*(33) **உயிர்முன் உயிர் புணர்தல் :**

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யேன் றாகும்.

இ ஈ ஐ வழி - இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, யவ்வும் - யகர மெய்யும், ஏனை உயிர்வழி - (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்) மற்ற உயிர்களின் பின்னே, வவ்வும் - வகரமெய்யும், ஏமுன் - ஏகாரத்தின் முன்னே, இ இருமையும் - (யகர மெய்யும் வகர மெய்யும் ஆகிய) இவ்விரண்டும், உயிர்வரின் - (வருமொழி முதலில்) உயிர் வந்தால், உடம்படுமெய் என்று ஆகும் - உடம்படு மெய்யாக வரும்.

உடம்படுமெய் - நிலைமொழி யீற்றிலும் வரு மொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய்; உடம்படுத்தல் என்றாலும், உடன்படுத்தல் என்றாலும் பொருள் ஒக்கும்; இனி, உடம்பு அடு மெய் எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுக்கும் மெய் எனினும் பொருந்தும்.

†(34) வினுவோடும் சுட்டோடும் நாற்கணமும் புணர்தல்:

எகர வினுமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.

எகரவினு (முன்னர்) - எகர வினுஇடைச்சொல்லின் முன்னும், முச்சுட்டின் முன்னர் - மூன்று சுட்டுச் சொல்லின் முன்னும், உயிரும் - உயிரும், யகரமும் - யகரமும், எய்தின் - வந்தால், வவ்வும் - வகரமும்; பிற - (யகரம் ஒழிந்த) மற்ற மெய்கள், வரின் - வந்தால், அவையும் - வந்த அம் மெய்களும்; தூக்கில் - செய்யுளிடத்து, சுட்டு - சுட்டுக்கள், நீளின் - நீண்டு வருமிடத்து, யகரமும் - யகர மெய்யும், தோன்றுதல் - வருதல், நெறி - முறையாம்.

*(35) குற்றியலுகரம் முற்றியலுகரங்களோடு உயிரும் யகரமும் புணர்தல்:

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றேரோவழி.

உக்குறள் - குற்றியலுகரமானது, உயிர் - உயிர் முதன்மொழி, வரின் - வந்தால், மெய்விட்டு - (தனக்

கடமாகிய) மெய்யை விட்டு, ஓடும் - கெடும்; ய - யகர முதன்மொழி, வரின் - வந்தால், இ ஆம் - (அவ்வுகரம்) இகரமாகத் திரியும்; முற்றும் - முற்றியலுகரமும், அற்று - அவ் விரு விதியும் பெறும், ஒரோவழி - ஒவ்வோரிடத்து.

*(36) **உயிரீற்றின் முன் வல்லினம் பெரும்பாலும் மிகும் என்னும் போதுவிதி :**

இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

விதவாதன - சிறப்பு விதியிற் சொல்லாதவைக ளுள், இயல்பினும் - இயல்பினாலும், விதியினும் - விதி யினாலும், நின்ற - இறுதியாக நின்ற, உயிர்முன் - உயிர் களின்முன், கசதப - வருகிற ககர சகர தகர பகரங்கள், மன் மிகும் - பெரும்பாலும் மிகும்.

இயல்பீறுவது — ஒரு மொழியின் இறுதியில் இயல்பாக உள்ள எழுத்தே நிற்பது.

விதியீறுவது — ஒரு மொழியின் இறுதியில் இயல்பாக இருந்த எழுத்து ஒரு விதிபற்றிக் கெட்டுப் போக, அம் மொழியில் வேறோர் எழுத்து ஈறாக நிற்பது.

†(37) **உயிரீற்றுச் சில மாப்பெயர்களோடு வல்லினம் புணர்தல் :**

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே.

மரப்பெயர் முன்னர் - உயிரீற்றுச் சில மரப்பெயர் களுக்குமுன், இனமெல்லெழுத்து வர - (முன்சொன்ன

பொதுவிதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்து மிக்குவர, பெறுவும் - பெறுவனவும், உள - சில வுளவாம், வேற்றுமை வழி - வேற்றுமைப் புணர்ச்சியில்.

†(38) பல சில என்பவற்றின் புணர்ச்சி :

பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற.

(1) பல சில எனும் இவை - பல சில என்னும் இவ்விரு சொல்லும், தம்முன் - தமக்கு முன்னே, தாம் வரின் - தாம் வருமாயின், இயல்பும் - இயல்பாதலும்;

(2) மிகலும் - மிகுதலும்;

(3) அகரம் - அகரமானது, ஏக - கெட, லகரம் - லகரமெய், றகரமாகலும் - றகரமாகத் திரிதலும்;

(4) பிற - இவற்றின்முன் பிறமொழிகளுள் ஒன்று, வரின் - வந்தால், அகரம் - அகரமானது, விகற்பமாதலும் - நிற்றலும் நீங்கலும், உள - உளவாம்.

†(39) குற்றியலுகரத்தோடு வல்லினம் புணர்தல் :

வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி.

வன்றொடர் அல்லன முன் - வன்றொட மொழிந்த ஐந்து குற்றியலுகர ஈற்றின் முன்னும், அல்வழி - அல்வழியில், மிகா - (வருகிற வல்லினம்) இயல்பாகும்.

†(40) வேற்றுமையில் மிகாத தற்றியலுகரத் தொடர்கள் :

இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

இடைத்தொடர் (முன்) - இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் (முன்) - ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையில் மிகா - புணர்ச்சியில் மெய்யெழுத்து இடையே மிகப் பெறாத, நெடில் உயிர்த்தொடர் முன் - நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும், வேற்றுமை - வேற்றுமையில், மிகா-(வருகிற வல்லினம்) இயல்பாகும்.

†(41) டுகர றுகர ஈற்றுக் தற்றியலுகரப் புணர்ச்சி :

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

நெடிற் (றொடர்) - நெடிற் றொடர்களும், உயிர்த்தொடர் - உயிர்த்தொடர்களுமாகிய, குற்றுகரங்களுள் - குற்றியலுகர மொழிகளுள், டற ஒற்று-அவ்வுகரம் ஏறி நின்ற டகர றகர மெய்கள், வேற்றுமை - வேற்றுமையில், மிக இரட்டும் - பெரும்பாலும் இரட்டும்.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

(42) மென்றொடர்க் தற்றியலுகரப் புணர்ச்சி :

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.

மென்றொடர் மொழியுள் - மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள், சில - சிலமொழிகள், வேற்றுமை

யில் - வேற்றுமைக்கண், தம் இனம் - தமக்கினமாகிய, வன்றொடர் - வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகும் ; மன் ஆகா - பெரும்பாலன ஆகாவாம்.

வருமொழித்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

*(43) பூ என்னும் மொழிப்புணர்ச்சி :

பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

பூப்பெயர்முன் - பூ என்னும் சொல்லின்முன், இனமென்மையும் - (வருகிற வல்லினம் மிகுத லல்லாமல் அவற்றிற்கு இனமாகிய) மெல்லினமும், தோன்றும் - மிகும்.

(44) ஏகார ஓகார இடைச்சோற்களின் புணர்ச்சி :

இடைச்சொல் ஏயோ முன்வரின் இயல்பே.

இடைச்சொல் - இடைச்சொல்லாகிய, ஏ (முன்) - (ஆறு பொருளிலும் வரும்) ஏகாரத்தின் முன்னும், ஓ முன் - (எட்டுப் பொருளிலும் வரும்) ஓகாரத்தின் முன்னும், வரின் - வல்லினம் வந்தால், இயல்பு - இயல்பாகும்.

(45) ஐகார ஈற்றின்முன் நாற்கணமும் புணர்தல் :

வேற்றுமை யாயின் ஐகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் ஏற்பவும் உளவே.

ஐகான் இறுமொழி - ஐகார ஈற்றுச் சொற்கள், வேற்றுமையாயின் - வேற்றுமைக்கண் வருமாயின், ஈறு அழிவோடும் - ஈற்று ஐகாரம் கெடுதலுடனே, அம் -

அம் என்னும் சாரியை, ஏற்பவும் - பெற்று முடிவனவும், உள - சிலவுள.

'அழிவோடும்' என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவும் உள எனக் கொள்க. வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணத்துள்ளும் ஏற்பன கொள்க.

(46) யகரம் ஒழிந்த மெய்களின்முன்
யகரம் புணர்தல் :

தன்னெழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே.

தன் ஒழி - தன்னையொழிந்த, மெய்முன் - ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும், ய - யகரமானது, வரின் - வந்தால், இகரம் - இகரச்சாரியை, துன்னும் என்று - (இடையில்) வருமென்று, துணிநரும் - துணிந்து சொல்வாரும், உளர் - சிலருளர்.

†(47) ணகர னகர ஈற்றின் திரிபும் இயல்பும் :

ண்ணவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக் கல்வழிக்
கூனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

(1) ண ன - ணகர னகரங்கள், வேற்றுமைக்கு - வேற்றுமைக்கண், வல்லினம் - வன்கணம், வர - வந்தால், டறவும் - முறையே டகாரமும் றகாரமும் ;

(2) பிற - (வல்லினமல்லாத) மெல்லினமும் இடையினமும், வரின் - வந்தால், இயல்பும் ஆகும் - இயல்பும் ஆகும் ;

(3) அல்வழிக்கு - அல்வழிக்கண், அ னை த் து மெய் - மூவின மெய்களும், வரினும் - வந்தாலும், இயல்பாகும் - இயல்பேயாகும்.

(48) ணகர னகர ஈறு கெடுதல் :

குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

குறில் - தனிக்குறி லொன்றனை மட்டும், அணை வில்லா - சாராத, ணனக்கள்-ணகர னகர மெய்கள், வந்த- (வருமொழிக்கு முதலாக) வந்த, நகரம் - நகரமானது, திரிந்துழி - (மயக்கவிதி யில்லாமையினால்) திரிந்த விடத்து, கேடு - கெடுதலை, நண்ணும் - பொருந்தும்.

†(49) தேன் என்னும் மொழிப்புணர்ச்சி :

தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி.

(1) தேன்மொழி - தேன் என்னும் சொல், மெய் வரின் - வலி மெலி இடை ஆகிய மூவின மெய்களும் வரின், இயல்பும் - (இறுதி னகரமெய்) இயல்பாதலும் ;

(2) மென்மைமேவின்-மெல்லினம்வரின், இறுதி - ஈற்றிலுள்ள அம்மெய், அழிவும் - (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும் ;

(3) வலிவரின்-வல்லினம்வரின், ஈறு - ஈற்றிலுள்ள அம் மெய், போய் - (இயல்பாதலே யன்றிக்) கெட்டு, வலிமெலிமிகலும் ஆம்-வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், இருவழி-இருவழியிலும்.

(50) மகரமெய்யின்முன் நாற்கணமும் புணர்தல் :

மவ்வீ றேற்றழிந் துயிரீ றேற்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்.

(1) மவ்வீறு - மகரவீற்றுச் சொற்கள், ஒற்று - (இறுதியிலுள்ள) மகர மெய், அழிந்து - கெட்டு, உயிரீறு ஒப்பவும் - விதி யுயிரீறுய் நின்று புணர்வனவும் ;

(2) வன்மைக்கு இனம் ஆ - வல்லினம் வரின் கெடாது அவற்றிற்கு இனமாக, திரிபவும் ஆகும் - திரிவனவும் ஆகும்.

உயிரீறு ஒத்தலாவது - உயிர்வரின் உடம்படு மெய் பெற்றும், வல்லினம் வரின் மிகுந்தும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகியும் புணர்தல்.

(51) சில மகர மெய்யீற்றுக்குச் சிறப்புவிதி :

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி உயிரிடை வரினியல் பும்முள.

(1) வேற்றுமை - வேற்றுமைக்கண், ம - மகர இறுதி, போய் - கெட்டு, வலி மெலி உறழ்வும் - வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் ;

(2) அல்வழி - அல்வழிக்கண், உயிர் - உயிரும், இடை - இடையினமும், வரின் - வந்தால், இயல்பும் - (கெடாது) இயல்பாதலும், உள - உளவாம்.

(52) நும், தம், எம், நம் என்னும் சொற்களின் புணர்ச்சி :

நுந்தம்
எம்நம் ஈறும் மவ்வரு ஞநவே.

நும் தம் எம் நம் - நும் தம் எம் நம் ஆகிய நான்கு விகார மொழிகளிலும், ஈறுஆம் - இறுதியாகிய, ம - மகர மெய்யானது, வரு ஞ ந - வருகின்ற ஞகர நகரங்களாகத் திரியும்.

(53) அகம் என்னும் மொழிப்புணர்ச்சி :

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

அகம் முன்னர் - அகம் என்னும் இடப்பெயர்முன், செவி கை - செவி கை என்னும் சினைப் பெயர்கள், வரின் - வந்தால், இடையன - நிலைமொழியின் நடு நின்ற ககர மெய்யும் அதன்மேலேறிய அகர வுயிரும், கெடும் - அழியும்.

(54) ய, ர, ழ மெய்யீற்றின்முன் வல்லினம் புணர்தல் :

யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்.

(1) ய ர ழ முன்னர் - யகர ரகர ழகர மெய்களின் முன், க ச த ப - ககர சகர தகர பகரங்கள் வரின், அல்வழி - அல்வழியில், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் ஆகும் - மிகுதலும் ஆகும்.

(2) வேற்றுமை - வேற்றுமையில், மிகலும் - மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் - (வல்லின மிகுதலே யன்றி) மெல்லினம் மிகுதலும், விதி - விதியாகும்.

(55) லகர ளகர மெய்களின்முன் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் புணர்தல் :

ளவேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோ டுழ்வும் வலிவரின் ஆமெலி
மேவின் ணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.

(1) ல ள - லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும், வலி வரின் - வல்லினம் வந்தால், வேற்றுமை - வேற்றுமைக்கண், றடவும் - (முறையே) றகர டகர மெய்களாதலும் ;

(2) அல்வழி - அல்வழிக்கண், அவற்றோடு உறழ்வும் - றகர டகரங்களாதலோடு திரிந்தும் திரியாதும் வருதலும், ஆம் - ஆகும் ;

(3) இருவழியானும் - இருவழிக்கண்ணும், மெலி மேவின் - மெல்லினம் வந்தால், ன வையும் - (முறையே) னகர ணகர மெய்களாகவும் ;

(4) இடைவரின் - இடையினம் வந்தால், இயல்பும் ஆகும் - இயல்பாகவும் ஆகும், என்ப - என்று சொல்லுவர் புலவர்.

(56) தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் கெடுதல் முதலியன :

குறில்சேறி யாலள அல்வழி வந்த
றகரம் திரிந்தபின் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உளபிற.

(1) குறில் செறியா - தனிக்குறி லொன்றணமட்டுஞ் சாராத, ல ள - லகர ளகர மெய்களானவை, அல்வழி - அல்வழிக்கண், வந்த - வருமொழிக்கு முதலாய் வந்த, தகரம் - தகரமானது, திரிந்தபின் - திரியுமிடத்து, கேடும் - கெடுதலும் ;

(2) ஈரிடத்தும் - அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும், வரு - (வருமொழிக்கு முதலாக) வந்த, ந - நகரமானது, திரிந்த பின் - திரியுமிடத்து, மாய்வும் - கெடுதலும் ;

(3) வலி - வல்லெழுத்து முதன் மொழி, வரின் - வந்தால், இயல்பும் திரிபும் - (அல்வழிக்கண் உறழாது) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைக்கண்ணே திரியாது) இயல்பாதலும், ஆவன உள-பொருந்துவன உள.

(57) அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்களின் புணர்ச்சி :

சுட்டு வகரமு வினமுற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்.

சுட்டு வகரம் - (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பன்மைச்) சுட்டுப்பெயர்களின் ஈற்றிலுள்ள வகர மெய், முறையினம் - வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற - வர, முறை - முறையே, (1) ஆய்தமும் - ஆய்தமும், (2) மென்மையும் - மெல்லினமும், (3) இயல்பும் ஆகும் - இயல்பும் ஆகும்.

(58) வருமொழிமுதலிலுள்ள தகர நகரங்கள் திரிதல் :

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே.

த நக்கள் - தகர நகரங்கள், னல முன் - னகர லகர மெய்களின் முன், ற ன வும் - (முறையே) றகர னகரங்களாகவும், ண ள முன் - ணகர ளகர மெய்களின்முன், டணவும் ஆகும் - (முறையே) டகர ணகரங்களாகவும் ஆகும், ஆயும்கால் - ஆராயுமிடத்து.

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும், னகர லகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகவும்; ணகர ளகரங்களின்முன் வருகிற தகரம் டகரமாகவும், ணகர ளகரங்களின்முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியும் என்பதாம்.

(59) யான், யாம், நீ, நீர் என்பவற்றோடு
உருபு புணர்தல்:

தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும் நான்கா றிரட்டல.

(1) தான்தாம் நாம் - தான் தாம் நாம் என்னும் மூன்று பெயர்களும், முதல் குறுகும் - (உருபுகள் புணருமிடத்து நெடில்) முதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும்;

(2) யான் யாம் நீ நீர் - யான் யாம் நீ நீர் என்னும் நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் - (உருபுகள் புணருமிடத்து முறையே) என் எம் நின் நும் எனவரும்;

(3) குவ்வின் - (இவ்வேழு பெயரோடு) குவ்வுருபு புணருமிடத்து, அ வரும் - (நடுவே) அகரச்சாரியை வரும்;

(4) நான்கு - நான்காம் வேற்றுமை உருபாகிய குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை வரினும், ஆறு - ஆறும் வேற்றுமை உருபுகள் வரினும், இரட்டல - (தன் முதலிய ஏழு சொற்களிலும் இறுதியாகிய ஒற்றுக்கள் 'தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி) இரட்டாவாம்.

(60) அத்துச்சாரியையின் அகரம் கெடுதல் :

அத்தின் அகரம் அகரமுனை யில்லை.

அத்தின் - அத்துச்சாரியையினது, அகரம் - அகர வுயிரானது, அகரமுனை - (இயல்பிலும் விதியினும் நின்ற) அகர வுயிரீற்றின் முன்வரின், இல்லை - கெடும்.

(61) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை :

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்
அன்ன பிறவும் ஆகுமை உருபே.

(1) இயல்பின் விகாரமும் - (பொது விதியால் முடிதலே யன்றி அவ்விதிப்படி) இயல்பாக வேண்டிய விடத்து விகாரமாகியும் ;

(2) விகாரத்து இயல்பும் - விகாரமாக வேண்டிய விடத்து இயல்பாகியும் ;

(3) உயர்திணையிடத்து-உயர்திணைப் பெயரிடத்து, விரிந்தும் - வெளிப்பட்டும், தொக்கும் - மறைந்தும் ;

(4) விரவுப் பெயரின் - பொதுப் பெயரின்கண், விரிந்தும் - வெளிப்பட்டும், நின்றும் - மறைந்துநின்றும்;

அன்னபிறவும் - அவைபோல்வன பிற வேறுபாடு களும், ஆகும் - ஆகிவரும், ஐ உருபு - இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி.

(62) உயிரளபெடை :

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

இசை கெடின் - (பாட்டில்) ஓசை குறையின், மொழி - (அவ்வோசை குறைந்த) சொல்லுக்கு, முதல் இடை கடை - முதலிலாகிலும் இடையிலாகிலும் கடை யிலாகிலும், நிலை - நின்ற, நெடில் - நெட்டெழுத்து ஏழி லொன்று, அளபு எழும் - (அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின்) மிகுந்தொலிக்கும்; அவற்று அவற்று இனக்குறில் - அந்தந்த நெட்டெழுத்துக்களின் இனமா கிய குற்றெழுத்து, குறி - (நெடில் அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில்) அறிகுறியாய் அவற்றின்முன் நிற்கும்.

உயிரளபெடை—செய்யுளிசை நிறை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை, இயற்கை யளபெடை என நான்கு வகைப்படும்.

(63) ஐகார ஔகாரக் குறுக்கங்கள் :

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதலற் குகும்.

ஐ - ஐகாரம், தற்சுட்டு - தன்னைச்சுட்டுமிடமும், அளபு - அளபெடுக்குமிடமும், ஒழி - ஒழிந்த, மூவழி யும்-சொற்களின் முதல் இடை கடை என்னும் மூன்றி டத்தும், நையும்-குறுகும்; ஔவும்-ஔகாரமும், முதல்-மொழிமுதலில், அற்று ஆகும் - அவ்வாறே குறுகும்.

V. பொருள் இலக்கணம்

பொருளாவது, — அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள்,

அகப் பொருள்

அகப்பொருளாவது — ஒத்த அன்பினையுடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்தே அனுபவிக்கும் இன்பமாம். அஃது, ஏழு வகைப்படும். அவையாவன :

கைக்கிளைத் திணை, குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, பாலைத் திணை, மருதத் திணை, நெய்தல் திணை, பெருந்திணை என்பன. அவற்றுள்,

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய இவற்றை ஐந்திணை என வழங்குவர்.

கைக்கிளை என்பது — ஒருதலைக் காமம். அஃதாவது, தலைவனுவது, தலைவியாவது ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறியாமல், தம்முள் காதல் கொண்டு வருந்துதல்.

பெருந்திணை என்பது — பொருந்தாக் காமம். அஃதாவது, இன்பம் நுகர்தற்கு அமைதியில்லாதவர், ஏற்ற முறையானன்றி இன்பம் நுகர்தல்.

ஐந்திணைக்கு — (1) முதற்பொருள், (2) கருப் பொருள், (3) உரிப்பொருள் என மூன்று பொருள் உண்டு.

*(1) முதற்பொருள்

முதற்பொருள் — (1) நிலமும், (2) பொழுதும் என இருவகைப்படும். அவற்றுள்,

(1) நிலம் :

குறிஞ்சி நிலம் — மலையும், மலையைச் சார்ந்த இடமும்.
முல்லை நிலம் — காடும், காட்டைச் சார்ந்த இடமும்.
மருத நிலம் — வயலும், வயலைச் சார்ந்த இடமும்.
நெய்தல் நிலம் — கடலும், கடலைச் சார்ந்த இடமும்.

பாலைக்குத் தனியாக நிலம் இல்லை; குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பு கெட்டு மணல்வெளி ஆவது பாலை எனப்படும்.

*(2) பொழுது :

பெரும்பொழுது சிறுபொழுது எனப் பொழுது இருவகைப்படும்.

பெரும்பொழுது - 6 :

1. கார்காலம் — ஆவணி புரட்டாசி மாதங்கள்.
2. குளிர்காலம் — ஐப்பசி கார்த்திகை மாதங்கள்.
3. முன்பனிக்காலம் — மார்கழி தை மாதங்கள்.
4. பின்பனிக்காலம் — மாசி பங்குனி மாதங்கள்.
5. இளவேனிற்காலம் — சித்திரை வைகாசி மாதங்கள்.
6. முதுவேனிற் காலம் — ஆனி ஆடி மாதங்கள்.

†சிறுபொழுது - 6 :

1. விடியல் — (பகலின் முதற் பத்துநாழிகை.)
2. நண்பகல் — (பகலின் இரண்டாவது பத்துநாழிகை.)
3. எற்பாடு — (பகலின் மூன்றாவது பத்துநாழிகை.)
4. மாலை — (இரவின் முதற் பத்துநாழிகை.)
5. யாமம் — (இரவின் இரண்டாவது பத்துநாழிகை.)
6. வைகறை — (இரவின் மூன்றாவது பத்துநாழிகை.)

	பெரும்பொழுது	சிறுபொழுது
குறிஞ்சி நிலத்திற்கு —	குளிர்காலம், முன்பனிக்காலம்	யாமம்.
முல்லை நிலத்திற்கு —	கார்காலம்	— மாலை.
மருத நிலத்திற்கு —	ஆறு காலங்களும்	வைகறை, விடியல்.
நெய்தல் நிலத்திற்கு —	ஆறு காலங்களும்	— எற்பாடு.
பாலை நிலத்திற்கு —	இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், பின்பனிக்காலம்	நண்பகல்.

(2) கருப்பொருள்

(1) குறிஞ்சிக்கு :

தெய்வம் - முருகன்.
உணவு - மலைநெல், தினை.
விலங்கு - புலி, கரடி, சிங்கம், பன்றி, யானை.
மரம்-அகில், சந்தனம்,தேக்கு, வேங்கை, காந்தள்.
பறவை - கிளி, மயில்.
பறை - வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை.
செயீதி - தேனழித்தல், கிழங்கு அகழ்தல், குன்றம் ஆடுதல், கிளிகடிதல்.
யாழ் - குறிஞ்சி யாழ்.
பண் - குறிஞ்சி.
தலைமகன் - சிலம்பன், வெற்பன், பொருப்பன்.
தலைமகள் - கொடிச்சி, குறத்தி.
பூ - குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக்குவளை.
நீர் - அருவிநீர், சுனைநீர்.
ஆடவர் - குறவர், குன்றவர்.
மகளிர் - குறத்தியர்.
ஊர் - சிறு குடி.

(2) முல்லைக்கு :

தெய்வம் - திருமால்.
உணவு - வரகு, சாமை.
விலங்கு - முயல், மான்.
மரம் - கொன்றை, காயா, குருந்து.
பறவை - கானங்கோழி, மயில்.
பறை - ஏறுகோட்பறை.
செயீதி - வரகுகளை பறித்தல், நிரைமேய்த்தல், குழலூதல்.
யாழ் - முல்லையாழ்.

பண் - சாதாரி.
தலைமகன் - குறும்பொறை-நாடன், தோன்றல்.
தலைமகள் - கிழத்தி, மனைவி.
பூ - முல்லை, தோன்றி.
நீர் - கான்யாறு.
ஆடவர் - இடையர், ஆயர்.
மகளிர் - இடைச்சியர், ஆய்ச்-சியர்.
ஊர் - பாடி, சேரி.

(3) மருதத்துக்கு :

தெய்வம் - இந்திரன்.
உணவு - நெல்.
விலங்கு - எருமை, நீர்நாய்.
மரம்-மருதம், வஞ்சி, காஞ்சி.
பறவை - நாரை, நீர்க்கோழி, தாரா.
பறை - மணமுழா, நெல்லரி கிணை.
செயீதி - நெல்லரிதல், வைக்-கோல் துவைப்பித்தல், களை பறித்தல்.
யாழ் - மருதயாழ்.
பண் - மருதம்.
தலைமகன் - ஊரன், மகிழ்நன்.
தலைமகள் - கிழத்தி, மனைவி.
பூ - தாமரை, செங்கழுநீர், குவளை.
நீர் - மனைக்கிணறு, பொய்கை, ஆறு.
ஆடவர் - கடையர், உழவர்.
மகளிர்-கடைசியர், உழத்தியர்.
ஊர் - பேரூர், மூதூர்.

(4) நெய்தற்கு :

தெய்வம் - வருணன்.
உணவு-மீனும் உப்பும் மாற்று தலால் வரும் பொருள்.
விலங்கு - சுறா, முதலை.
மரம் - புன்னை, தாழை.
பறவை-அன்னம்,நீர்க்காக்கை.
பறை - மீன்கோட்பறை, நாவாய்ப்பறை.
செயீதி - மீன்விற்றல், உப்பு விற்றல், அவற்றையீட்டல்.
யாழ் - விளரியாழ்.
பண் - செவ்வழி.
தலைமகன்-துறைவன், கொண்-கன், சேர்ப்பன்.
தலைமகள் - நுளைச்சி, பரத்தி.
பூ - தாழை, நெய்தல்.
நீர் - மணற் கிணறு, உவர்க் கழி.
ஆடவர் - பரதர், நுளையர்.
மகளிர் - பரத்தியர், நுளைச்சியர்.
ஊர் - பட்டினம், பாக்கம்.

(5) பாலைக்கு :

தெய்வம் - துர்க்கை.
உணவு - வழிபறித்தன, ஊர்க் கொள்ளையடித்தன.
விலங்கு - வலியழிந்த யானை, புலி, செந்நாய்.
மரம்-இருப்பை, ஓமை, பாலை.
பறவை - கழுகு, பருந்து.
பறை-போர்ப்பறை, ஊறெறி பறை.
செயீதி - நிரை கொள்ளுதல், சுரத்தெறிதல்,சூறையாடல்.
யாழ் - பாலையாழ்.
பண் - பஞ்சுரம்.
தலைமகன் - மீளி, விடலை, காளை.
தலைமகள் - எயிற்றி, பேதை.
பூ - மரா, குரா, பாதிரி.
நீர் - வற்றின கிணறு, வற்றின சுனை.
ஆடவர் - எயினர், மறவர்.
மகளிர்-எயிற்றியர், மறத்தியர்.
ஊர் - குறும்பு.

†(3) உரிப்பொருள்

உரிப்பொருளாவது — அந்தந்த நிலங்களுக்கு ஏற்றதாகிய சிறந்த ஒழுக்கமாம்.

குறிஞ்சி — புணர்தலும், புணர்தல் நிமித்தமும்.
முல்லை — இல்லிருத்தலும், இல்லிருத்தல் நிமித்தமும்.
மருதம் — ஊடலும், ஊடல் நிமித்தமும்.
நெய்தல் — இரங்கலும், இரங்கல் நிமித்தமும்.
பாலை — பிரிதலும், பிரிதல் நிமித்தமும்.

புறப்பொருள்

†புறப்பொருளாவது—அகப்பொருள்போல ஒத்த அன்புடையாரானன்றி எல்லாராலும் அறியப்படுவது. அஃது ஏழு வகைப்படும். அவை :

(1) வெட்சி, (2) வஞ்சி, (3) உழிஞை, (4) தும்பை, (5) வாகை, (6) காஞ்சி, (7) பாடாண் என்பன.

†(1) **வெட்சித்திணையாவது** — பகைவர் பசுக்களைக் கவர்ந்து வருதலும், பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வருதலுமாம். இவற்றுள், பசுக்களை மீட்டுவருதலைக் **காந்தைத்திணை** என வேறாகக் கூறுதலும் உண்டு.

(2) **வஞ்சித்திணையாவது** — பகைவரது நாட்டைக் கைப்பற்றக் கருதிப் போர்மேற் செல்லுதல்.

(3) **உழிஞைத்திணையாவது** — பகைவரது மதிலை வளைத்துக் கொள்ளுதலும், தம்முடைய மதிலைக் காத்துக்கொள்ளுதலுமாம். இவற்றுள், தம்முடைய மதிலைக் காத்துக்கொள்ளுதலை **நொச்சித்திணை** என்பதும் உண்டு.

†(4) **தும்பைத்திணையாவது**—பகைவரோடு போர்புரிதல்.

(5) **வாகைத்திணையாவது** — பகைவரை வெல்லுதல்; ஒவ்வொருவருடைய இயல்பினை மிகுதிப்படுத்திக்கூறுதலுமாம்.

(6) **காஞ்சித்திணையாவது** — வீடு பெறுவதன் பொருட்டுப் பலவகையான நிலையாமையைச் சான்றோர் கூறுதல். பகைவர்மேற் சென்று தாக்குதல் என்பதும் உண்டு.

(7) **பாடாண்திணையாவது** — ஒருவனுடைய சீர்த்தி, கொடை முதலியவற்றைப் புகழ்ந்து கூறுதல்.

ஆநிரை கவரச் செல்லுவோர் **வெட்சிப்பூச்** சூடுவர். நிரையை மீட்கச் செல்லுவோர் **கரந்தைப்பூச்** சூடுவர். பகைவர் நாட்டைக் கருதிப் போர்மேற் செல்லுவோர் **வஞ்சிப்பூச்** சூடுவர். பகைவர்மதிலை வளைத்துக்கொள்ளுவோர் **உழிஞைப்பூச்** சூடுவர். தம் மதிலைக் காத்துக் கொள்ளுவோர் **நொச்சிப்பூச்** சூடுவர். போர் புரிபவர் **தும்பைப்பூச்** சூடுவர். வெற்றி பெற்றவர் **வாகைப்பூச்** சூடுவர். இப் பூக்களை மாலையாகத் தொடுத்து அணிதலும் உண்டு.

VI. யாப்பிலக்கணம்

†யாப்பாவது — பலவகைச் சொற்களால் யாக்கப்படுவது. யாத்தல் - கட்டுதல். யாப்பு, செய்யுள், தூக்கு, தொடர்பு என்பன ஒருபொருட் சொற்கள்.

†செய்யுளாவது — உவகை முதலிய சுவையினை (ரஸத்தை) யுடையதாய், விழுமிய பொருளைப் பயப்பதாய், இனிய சொற்களால் அமைந்தது.

†செய்யுளின் உறுப்புக்களாவன — (I) எழுத்து, (II) அசை, (III) சீர், (IV) தளை, (V) அடி, (VI) தொடை என்பனவாம்.

(I) எழுத்தாவது — உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், அளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்பனவாம். [இவற்றுள், உயிர்முதல் குற்றியலுகரம் வரையுள்ள எழுத்துக்கள் மேலே கூறப்பட்டிருத்தலின், ஈண்டு, அளபெடை முதலியவற்றைக் குறித்துக் கூறப்படும்.]

அளபெடை

†அளபெடையாவது — செய்யுட்களில், ஓசை குறையுமிடத்து, எழுத்துக்கள் தமக்குரிய மாத்திரையினும் மிக்கொலிப்பதாம். அவ்வளபெடை உயிரளபெடை என்றும், ஒற்றளபெடை என்றும் இருவகைப்படும்.

†(1) உயிரளபெடையாவது — உயிரெழுத்துக்கள் தமக்கு உரிய மாத்திரையினும் மிக்கொலிப்பதாம். அளபெடுக்குமிடத்து — ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என்னும் ஆறு நெட்டெழுத்துக்களும் சொற்களின் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும் நீண்டு ஒலிக்கும். ஔகாரம் மொழியின் முதலில் மட்டும் நீண்டு ஒலிக்கும். நெட்டெழுத்துக்கள் நீண்டு ஒலித்தலை அறிவித்தற்கு, அவ்வவற்றின் இனமாகிய குற்றெழுத்து அடையாளமாக வரும். அவற்றுள், ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் அறிகுறியாகும்.

[ஔகாரம் மொழியின் இடையிலும், கடையிலும் இருப்பதே இல்லை.]

†மொழிமுதல் அளபெடை :

'தாஅட் டாஅ மரைமல ருழக்கி'
'ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்'

இவ் வுதாரணங்களில், தாள், தாமரை, ஓதல், ஆதும் என்னும் சொற்களின் முதலில் உள்ள நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தமையும், அவற்றின் இனமாகிய குற்றெழுத்துக்கள் அறிகுறியாய் வந்தமையும் அறிக.

†மொழியிடை அளபெடை :

'உறுஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலே'

இவ் வுதாரணத்தில், உறுர் என்னும் சொல்லில் இடையேயுள்ள நெட்டெழுத்து அளபெடுத்தமையும், அதன் இனமாகிய குற்றெழுத்து அறிகுறியாய் வந்தமையும் அறிக.

†மோழிக்கடை அளபெடை :

'நல்ல படாஅ பறை'

இவ் வுதாரணத்தில், படா என்னும் சொல்லில் கடை-சியிலுள்ள நெட்டெழுத்து நீண்டு ஒலித்தமையும், அதற்கு ஒத்த குற்றெழுத்து அறிகுறியாய் வந்தமை-யும் காண்க.

இவ் வளபெடை, இசையை (ஓசையை) நிறைக்க வந்ததனால், இசைநிறை யளபெடை எனப்படும்.

இன்னிசை அளபெடை :

பாட்டுக்களில், செய்யு ளிலக்கணத்தின்படி ஓசை குறையாதிருப்பினும், இன்னோசை உண்டாதற்பொரு-ட்டு அளபெடுப்பது இன்னிசையளபெடை எனப்படும்.

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றூங்கே'

இதில், 'கெடுப்பதும் கெட்டார்க்கு' என்றிருப்பினும், கருவிளச்சீரின் முன் நேரசை வந்ததாகலின், செய்யு ளிலக்கணம் கெடுதல் இல்லை. அவ்வாறுகவும் அள-பெடுத்தது இன்னிசை யுண்டாதற் பொருட்டே என அறிக.

சொல்லிசை அளபெடை :

இனி, ஒரு சொல்லை வேறொரு சொல்லாக்குதற்கு அளபெடை கொடுத்தலும் உண்டு. அது சொல்லிசை யளபெடை எனப்படும்.

'உரணசை இ உள்ளம் துணையாகச் சென்றூர்'

இதில், நசை என்னும் பெயர்ச்சொல்லை வினையெச்சச் சொல்லாக்குதற்காக அளபெடை கொடுத்தது காண்க.

[நசை — விருப்பம் ; நசைஇ — விரும்பி]

தழீஇ, நிறீஇ என்பன போன்றவையும் சொல்லிசை யளபெடையாகும்.

இயற்கை அளபெடை :

சொற்களில் இயல்பாகவே அளபெடை இருக்குமாயின், அஃது, இயற்கை யளபெடை எனப்படும்.

குரீஇ [குருவி]	ஆஉ [ஆண்]
பரீஇ [பருத்தி]	மகஉ [பெண்]

முதலாயின காண்க.

(2) ஒற்றளபெடையாவது — செய்யுட்களில், ஓசை குறைந்தவிடத்துச் சொற்களில் மெய்யெழுத்துக்கள் அளபெடுத்தலாம். ங, ஞ, ண, ந, ம, ன, ய, வ, ல, ள என்னும் பத்து மெய்யெழுத்துக்களும், ஆய்தமும் அளபெடுக்கும். மெய்யெழுத்து அளபெடுப்பின், அம் மெய்யெழுத்து இரட்டிக்கும் என அறிக.

'கண்ண் கருவிளை'

இதில், ணகர்மெய் அளபெடுத்தமையும், அதனை அறிவித்தற்கு அம்மெய் இரட்டித்தமையும் காண்க.

கண்ண் என்பதை, கண், ண் எனப் பிரித்து, தேமாச்சீராகக் கொள்ளல் வேண்டும்.

குறுக்கம்

ஐகாரக் குறுக்கம் :

மொழிகளில் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்திலும் நிற்கும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் குறுகி ஒலிக்கும். அஃதாவது, மொழி

முதலில் ஒன்றரை மாத்திரையாயும், மொழியின் இடையிலும் கடையிலும் ஒரு மாத்திரையாகவும் ஒலிக்கும்.

[தன்னைச் சொல்லுமிடத்தும் அளபெடுக்கு மிடத்தும் குறுகாது.]

'ஐயம் புகினும் செயீவன செய்'

இங்கு, ஐயம் என்னும் சொல்லின் முதலிலுள்ள ஐகாரம், அய் என்பதுபோலவே ஒலித்தலின், ஒன்றரை மாத்திரையுடையதாயிற்று.

'மன்னர் பெருமை மடைய றிவரோ'

இங்கு, மடையர் என்னும் சொல்லின் இடையேயுள்ள ஐகாரம், குற்றெழுத்துப்போல ஒலித்தலின், ஒரு மாத்திரையுடையதாயிற்று.

'பறைய டித்தது போலுமென் பாவரோ'

இங்கு, பறை என்னும் சொல்லின் கடையிலுள்ள ஐகாரம், குற்றெழுத்துப்போலவே ஒலித்தலின், ஒரு மாத்திரை யுடையதாயிற்று.

†ஔகாரக் குறுக்கம் :

ஔகாரம், மொழியின் முதலில், தனக்குரிய இரண்டு மாத்திரையிற் குறுகி ஒன்றரைமாத்திரை யுடையதாக வரும்.

[தன்னைச் சுட்டுமிடத்தும் அளபெடுக்குமிடத்தும் குறுகாது.]

'ஔவிய நெஞ்சத்தா னுக்கமும் செவ்வியான்'

இங்கு, ஔவியம் என்பதிலுள்ள ஔ என்பது, அவ் என்பதுபோல ஒலித்தலால், ஒன்றரை மாத்திரையதாயிற்று.

மகரக் குறுக்கம் :

மகரக்குறுக்கமாவது, மகரமெய், தனக்குரிய அரை-மாத்திரையினும் குறைந்து ஒலிப்பது. போலும் என்-னும் முற்றுச்சொல், உகரம்கெட்டு, போல்ம் என்றாகிய வழி, லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து, போன்ம் என்றாகும். இதிலுள்ள மகரமெய், தன் மாத்திரை குறைந்து ஒலிப்பதனால் மகரக்குறுக்கம் எனப்படும்.

'திசையறி மீகானும் போன்ம்'

எனவருவது காண்க.

†(II) அசையாவது — ஒரெழுத்தாவது, ஈரெழுத்தாவது அசைந்து நிற்றல். அது — 1. நேரசை, 2. நிரையசை என இருவகைப்படும். அவற்றுள் :

1. நேரசை நான்கு வகையாம். அவை :

(1) குற்றெழுத்துத் தனித்து வருவது — க.
(2) குற்றெழுத்து ஒற்றடுத்து வருவது — கல்.
(3) நெட்டெழுத்துத் தனித்து வருவது — கா.
(4) நெட்டெழுத்து ஒற்றடுத்து வருவது — கால்.

ஒரு மொழியின் முதலில் குற்றெழுத்து மட்டும் தனியே அசையாதல் இல்லை.

2. நிரையசை நான்கு வகைப்படும். அவை :

(1) இரண்டு குற்றெழுத்துக்கள் இணைந்து வருவது — பல.
(2) இரண்டு குற்றெழுத்துக்கள் இணைந்து ஒற்றடுத்து வருவது } — பலர்.
(3) ஒரு குற்றெழுத்தும் ஒரு நெட்டெழுத்தும் இணைந்து வருவது — இரு.
(4) ஒரு குற்றெழுத்தும் ஒரு நெட்டெழுத்தும் இணைந்து ஒற்றடுத்துவருவது } — இரூல்.

†(III) சீர் ஆவது, தாள அறுதிப்பட வருவது. அஃது — (1) இரண்டசையாவது, (2) மூன்றசையாவது கூடி வரும்.

(1) ஈரசைச் சீர் நான்கு வகைப்படும். //

வாய்பாடு

1. நேர் நேர் — தே மா } மாச்சீர்கள்.
2. நிரை நேர் — புளி மா }
3. நிரை நிரை — கரு விளம் } விளச்சீர்கள்.
4. நேர் நிரை — கூ விளம் }

இவை, இயற்சீர் எனவும், ஆசிரியப்பாவிற்கு உரிய சீராதலால் **ஆசிரிய உரிச்சீர்** எனவும் பெயர் பெறும்.

(2) மூவகைச் சீர் எட்டு வகைப்படும். அவையாவன: மேற்கூறிய ஈரசைச்சீர் நான்கன் ஈற்றிலும் (i) நேரசை கூடிவரும் சீர் நான்கும், (ii) நிரையசை கூடிவரும் சீர் நான்கும் ஆம்

(i) 1. நேர் நேர் நேர் — தே மாங் **காயீ.**
2. நிரை நேர் நேர் — புளி மாங் **காயீ.**
3. நிர்ர நிரை நேர் — கரு விளங் **காயீ.**
4. நேர் நிரை நேர் — கூ விளங் **காயீ.**

இவற்றைக் காய்ச்சீர் என்பர். இவை, வெண்பாவுக்கு உரிய சீராதலால் **வெண்பா உரிச்சீர்** எனவும், **வெண்சீர்** எனவும் பெயர் பெறும்.

(ii) 1. நேர் நேர் நிரை — தேமாங் **கனி**
2. நிரை நேர் நிரை — புளிமாங் **கனி**
3. நிரை நிரை நிரை — கருவிளங் **கனி**
4. நேர் நிரை நிரை — கூவிளங் **கனி**

இவை, **கனிச்சீர்** எனவும், **வஞ்சியுரிச் சீர்** எனவும் பெயர் பெறும்.

†(IV) **தளை**யாவது — கட்டு என்பதாம். அஃதாவது, ஓரடியுள், நின்ற சீரின் ஈற்றசையோடு வரும் சீரின் முதலசை ஒசையமையச் சேர்தல். அஃது, ஒன்றிய தளை எனவும், ஒன்றுத் தளை எனவும் இரண்டு வகைப்படும்.

ஒன்றிய தளையாவது — நேரசை யீற்றுச் சீருக்கு மூன் நேரசை வருதலும், நிரையசை யீற்றுச் சீருக்கு மூன் நிரையசை வருதலும் ஆம்.

ஒன்றுத் தளையாவது — நேரசையீற்றுச் சீர்மூன் நிரையசை வருதலும், நிரையசை யீற்றுச் சீர்மூன் நேரசை வருதலும் ஆகும்.

தளை ஐந்து வகைப்படும். (1) நேரொன்றுசிரியத் தளை, (2) நிரை யொன்றுசிரியத்தளை, (3) இயற்சீர் வெண்டளை, (4) வெண்சீர் வெண்டளை, (5) கலித்தளை என்பன.

(1) நேரொன்றுசிரியத்தளையாவது — நேரசையீற் றுச்சீர்மூன் நேரசை வருவது. உதாரணம் :

சோதி வானம் தன்னு வோரே

(2) நிரையொன்றுசிரியத்தளையாவது—நிரையசை யீற்றுச் சீர்மூன் நிரையசை வருவது. உதாரணம் :

மணிதிகழ் அவிரொளி வாதனை

(3) இயற்சீர்வெண்டளையாவது — மாச்சீரின் முன் நிரையசையும், விளச்சீரின் முன் நேரசையும் வருதல்.

மாச்சீரின் முன் நிரையசை வருதற்கு உதாரணம்:

ஏரி னுழாஅ நுழவர் புயலென்னும்

விளச்சீரின் முன் நேரசை வருதற்கு உதாரணம் :

ஊருணி நீர்நிறைந் தற்றே

(4) வெண்சீர்வெண்டளையாவது—காய்ச் சிருக்கு-முன் நேரசை வருதல்.

யாதானும் நாடாமா லூராமா லென்னேநெவன்.

இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை ஆகிய இரண்டும் வெண்டளை எனப்படும்.

காய்முன் நேரும் விளமுன் நேரும்
மாமுன் நிரையும் வருவது வெண்டளை

என்பது இலக்கணம்.

(5) கலித்தளையாவது — காய்ச்சீரின்முன் நிரை யசை வருதலாம். உதாரணம் :

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி

†(V) அடியாவது—பல சீர்களான் அமைந்து, பாட்டுக்கு உறுப்பாய் நிற்பது. அது (1) குறளடி, (2) சிந்தடி, (3) அளவடி, (4) நெடிலடி, (5) கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

(1) குறளடியாவது—இரண்டு சிரை யுடைய அடி.

பூந்தாமரைப் போதலமா

என்பது போல்வது.

(2) சிந்தடியாவது — மூன்று சீரை யுடைய அடி.

இருது வேற்றுமை இன்மையால்

என்பது போல்வது.

(3) அளவடியாவது — நான்கு சீரான் வரும் அடி.

உலகம் யாவையும் தாழள வாக்கலும்

என்பது போல்வது. இது, நேரடி எனவும் படும்.

(4) நெடிலடியாவது — ஐந்து சீரான் வரும் அடி.

கல்லார் கவிபோற் கலங்கிக்கலை மாண்ட கேள்வி

(5) கழிநெடிலடியாவது — ஐந்துசீருக்கு மேற் பட்டு வரும் அடி.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்

இஃது, அறுசீர்க் கழி நெடிலடி.

நிலமகள் முகமோ திலகமோ கண்ணே
நிறைநெடு மங்கல நாணே

இஃது, எழுசீர்க் கழி நெடிலடி.

அம்பாழம் பெருநிலனும் திசைக ளேட்டும்
அலைகடலும் தலவரையும் உண்ட கண்டன்

இஃது, எண்சீர்க் கழி நெடிலடி.

வெண்பாவின் ஈற்றடியில் மூன்றுசீர் ஓசையா யிருக்கும். அவற்றின்மேல் குற்றியலுகர மாவது முற்றியலுகரமாவது கூடி வருவதும் உண்டு.

வாய்பாடு

நேரசை	— நாள்
நிரையசை	— மலர்
நேரசையோடு உகரம் கூடி வருவது	— காசு
நிரையசையோடு உகரம் கூடி வருவது	— பிறப்பு

இவற்றுள், காசு என்பதைத் தேமாச்சீர் என்றும், பிறப்பு என்பதைப் புளிமாச்சீர் என்றும் கொள்ளலாகாது.

நல்,லா	ரோரு,வர்க்,குச்	செய்,த	உப,கா,ரம்
நேர்,நேர்	நிரை,நேர்,நேர்	நேர்,நேர்	நிரை,நேர்,நேர்
தேமா	புளிமாங்காய்	தேமா	புளிமாங்காய்

கல்,மே	லெழுத்,துப்,போற்	கா,ணுமே—அல்,லா,த
நேர்,நேர்	நிரை,நேர்,நேர்	நேர்,நிரை—நேர்,நேர்,நேர்
தேமா	புளிமாங்காய்	கூவிளம்—தேமாங்காய்

ஈ,ரமி,லா	நெஞ்,சத்,தார்க்,கீந்,த	உப,கா,ரம்
நேர்,நிரை,நேர்	நேர்,நேர்,நேர்	நேர்,நேர்	நிரை,நேர்,நேர்
கூவிளங்காய்	தேமாங்காய்	தேமா	புளிமாங்காய்

நீர்,மே	லெழுத்,துக்,கு	நேர்.
நேர்,நேர்	நிரை,நேர்,நேர்	நாள்.
தேமா	புளிமாங்காய்	நாள்.

இவ்வாறு பாட்டுக்களை அலகிட்டுக் காண்க.

† (VI) தொடையாவது—பல அடிகளிலாயினும், ஓரடியிலேயே பல சீர்களிலாயினும் பல எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது.

அஃது — (1) எதுகைத்தொடை, (2) மோனைத்தொடை, (3) முரண்தொடை எனப் பலவகைப்படும். இவையேயன்றி அந்தாதித்தொடை எனவும் ஒன்று உண்டு.

(1) எதுகைத் தொடையாவது—அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது; மூன்று, நான்கு முதலாகப் பல எழுத்துக்கள் ஒன்றி இருத்தலும் உண்டு. இதற்கு, முதலெழுத்து அளவால் ஒத்திருக்கவேண்டும். அஃதாவது, முதலடியில் முதலெழுத்துக் குற்றெழுத்தாயிருந்தால், மற்ற அடிகளிலும் முதலெழுத்துக் குற்றெழுத்தா யிருக்கவேண்டும்; முதலெழுத்து நெட்டெழுத்தாயிருந்தால், மற்ற அடிகளிலும் நெட்டெழுத்தாய் இருக்கவேண்டும்.

உதாரணம்

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இப் பாட்டில், இரண்டு அடியிலும் முதலெழுத்து, குற்றெழுத்தாயும், இரண்டாம் எழுத்து முதலியவை ஒன்றியனவாயும் இருத்தல் காண்க.

எதுகைத் தொடையில் — 1. வல்லின எதுகை, 2. மெல்லின எதுகை, 3. இடையின எதுகை முதலாகப் பலவகை உண்டு.

1. வல்லின எதுகை

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

2. மெல்லின எதுகை

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நன்பென்னும் நாடாச் சிறப்பு.

3. இடையின எதுகை.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

என்பன போல்வன காண்க.

†(2) மோனைத் தொடையாவது — ஓரடியுட் பல சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வருவது; பல அடிகளிலும் முதலெழுத்து ஒன்றி வருதலும் மோனைத் தொடையே.

மோனைத் தொடையில் — (1) பொழிப்பு மோனை, (2) இணை மோனை, (3) முற்று மோனை முதலாகப் பலவகை உண்டு.

(1) போழிப்பு மோனையாவது, அளவடியில், முதற் சீரின் முதலெழுத்தும் மூன்றாஞ்சீரின் முதலெழுத்தும் ஒன்றி வருவது.

போறிவாயில் ஐந்தவித்தான் போய்தீ ரொழுக்கம்

என்பதுபோல வரும்.

(2) இணை மோனைபாவது — அளவடியில், முதல் இரண்டு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றி வருவது.

வேண்டுதல் வேண்டாமை
இல்லான் அடிசேர்ந்தார்க்

என்பதுபோல வரும்.

(3) முற்று மோனையாவது — ஓரடியில் எல்லாச் சீர்களிலும் முதலெழுத்து ஒன்றி வருவது.

கானகத்தில் காதலியைக் காரிருளிற் கைவிட்டு

என்பதுபோல வரும்.

குறிப்பு

1. அ, ஆ, ஐ, ஔ இவ்வெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.
2. இ, ஈ, எ, ஏ இவ் வெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.
3. உ, ஊ, ஒ, ஓ இவ்வெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.
4. ச, தக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.
5. ஞ, நக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.
6. ம, வக்களுள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.

(3) முரண்தோடையாவது — சொல்லானும் பொருளானும் மாறுபடத் தொடுப்பது.

செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்

இது, சொல்முரண்.

நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னஎன் உரன்அவித் தன்றே

இது, பொருள்முரண்.

பாவும் பாவினமும்

மேற்கூறிய உறுப்புக்களைப் பெற்று வரும் பாக்கள் — (1) வெண்பா, (2) ஆசிரியப்பா, (3) கலிப்பா, (4) வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். ஒவ்வொரு பாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்று இனங்கள் உள்ளன.

(1) வெண்பா

வெண்பா — இயற்சீர் வெண்டளையும் வெஞ்சீர் வெண்டளையும் பெற்று வரும்; ஈற்றடி முச்சீராயிருக்கும்; அதில் மூன்றும்சீர் ஓரசைச்சீராகவே வரும். வெண்பாவில், 1. குறள் வெண்பா, 2. நேரிசை வெண்பா, 3. இன்னிசை வெண்பா எனப் பலவகை உண்டு.

1. குறள் வெண்பா

†குறள் வெண்பா — இரண்டடியாய், முதலடி நாற்சீரும் இரண்டாமடி முச்சீருமாய் வருவது.

உதாரணம்

அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. நேரிசை வெண்பா

†நேரிசை வெண்பா—நான்கடியாய், முதலடியும் மூன்றும் அடியும் நான்குசீராயும், இரண்டாமடியும் நான்காமடியும் மூன்று சீராயும், இரண்டாமடியின் இறுதியில் தனிச் சீர் பெற்றும் வருவது.

உதாரணம்

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தலையவிழப் — பூமடந்தை
தன்னுட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டில் முன்னாட்டும் நாடு.

3. இன்னிசை வெண்பா

இன்னிசை வெண்பா — முதல் மூன்றடியும் நந்நான்கு சீராயும், நான்காமடி மட்டும் மூன்று சீராயும் வருவது.

உதாரணம்

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

(2) ஆசிரியப்பா

ஆசிரியப்பா — ஒவ்வோர் அடியிலும் நான்கு சீர் பெற்று, மூன்றடி முதல் பல அடிகள் உடையதாய் வரும்; ஈற்றயலடி மூன்று சீராய் வருவதும் உண்டு.

உதாரணம்

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர அன்றே சாரற்
கருங்காற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

(3) கலிப்பா

கலிப்பா — காய்ச்சீர்கள் பயின்று, நாற்சீரடிகளாய்ப் பல உறுப்புப் பெற்றுவரும். அவற்றுள், தரவு கொச்சகக்கலிப்பா ஆவது நாற்சீரடிகள் நான்கு பெற்று, உறுப்புக்களின்றித் தனித்து வருவது.

உதாரணம்

கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினும்சென் றுலிகொள்ள வுறுதியரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பாமேயென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோஅன் றேனென்றாய்.

(4) வஞ்சிப்பா

வஞ்சிப்பா — இருசீரடிகளாலும், மூச்சீரடிகளாலும் வருவது.

பாவினம்

†ஆசிரிய விருத்தம்

ஆசிரிய விருத்தமாவது — நான்கு அடியாய் ஆறு சீர் முதல் பல சீர்கள் பெற்று வருவது.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

வென்றிலே னென்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
கின்றுளே னன்றே மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்தும் தவிருமோ பொதுமைத் தன்றே
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி யுண்டோ.

கலித்துறை

கலித்துறை — நான்கடியாய், ஒவ்வோரடியிலும் ஐந்து சீர் பெற்று வருவது.

உதாரணம்

மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பம் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்து மன்றே.

கட்டளைக்கலித்துறை

கட்டளைக்கலித்துறை — நான்கடியாய், ஒவ்வோரடியிலும் ஐந்துசீராய் அவ்வடிகளில் வெண்டளை பிழையாது வரும்; ஐந்தாம்சீர் விளங்காய்ச்சீராயிருக்கும். முதலில் நேரசையுள்ள பாட்டில் ஓரடிக்கு மெய்யெழுத்து ஒழியப் பதினாறு எழுத்தும், முதலில் நிரையசையுள்ள பாட்டில் ஓரடிக்குப் பதினேழ் எழுத்தும் வரும்.

முதலில் நேரசையுள்ள கட்டளைக்கலித்துறை

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்

முதலில் நிரையசையுள்ள கட்டளைக்கலித்துறை

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்து னருட்கடலில்.

எனக் காண்க.

†கலிவிருத்தம்

கலிவிருத்தமாவது — நான்கடியாய், ஒவ்வோரடியிலும் நான்கு சீர் பெற்றுவரும். இதிற் பலவகையுண்டு.

ஆயவ னெருபக லயனே யேனிகர்
தூயமா முனிவரற் றொழுது தொல்குலத்
தாயரும் தந்தையும் தவமும் அன்பினுல்
மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ.

வேறொருவகைக் கலிவிருத்தம்

கண்ட திறத்திது கைதவம் ஐய
கொண்டல் நிறக்குற லென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேஞள்
உண்டவ ஞமி துணர்ந்துகொள் என்றான்.

மற்றொருவகைக் கலிவிருத்தம்

புள்ளி மால்வரை பொன்னென வோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ள வெலாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

இவ்வாறு பல.

இனி, செய்யுள் இலக்கணத்தின் விரிவை, யாப்பருங் கலக்காரிகை முதலான நூல்களிற் கண்டுகொள்க.

VII. அணியிலக்கணம்

†அணியாவது—பாட்டுக்களுக்கு அழகு செய்வது. அது, (1) சொல்லணி (சப்தாலங்காரம்), (2) பொருளணி (அர்த்தாலங்காரம்) என இருவகைப்படும்.

(1) சொல்லணி

சொல்லணியாவது — சொற்பற்றி வருவது. அது, யமகம், திரிபு முதலாகப் பலவகைப்படும்.

யமகமாவது, ஓரடியிற் பல இடங்களிலாயினும், ஒரு பாட்டில் பல அடிகளிலாயினும் வந்த சொற்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இது, மடக்கு எனப்படும்.

உதாரணம்

தொழப்பெ ரூதந்த வாரணத் தந்தமே
தொட்டி றுத்ததும் வாரணத் தந்தமே
வழுத்து தாள்முன் புவனங் கடந்ததே
மலர்ந்த வந்தி புவனங் கடந்ததே

என்பதுபோல வரும்.

திரிபு ஆவது - பாட்டின் நான்கடிகளிலும், முதலெழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, இரண்டு முதலான பல எழுத்துக்கள் ஒன்றி நின்று பொருள் வேறுபடுவது.

உதாரணம்

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும்விண்-
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்[ணும்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்திரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தம் தூரமன்றே.

என்பதுபோல வரும்.

(2) பொருளணி

†பொருளணியாவது — பொருள்பற்றி வருவது. அஃது, உவமையணி முதலாக நூறுகும்.

†1. உவமையணி (உபமாலங்காரம்) : ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்பாகச் சொல்லுவது. இதில், உபமானம், உபமேயம், உவமவுருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கு பகுதிகள் அறியப்படும்.

உதாரணம்

'பால்போலும் இன்சொல் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழும் திருநெடுங்கண்.'

இதில், பால் - உபமானம் ; சொல் - உபமேயம் ; போலும் - உவம வுருபு ; இனிமை - பொதுத்தன்மை. இவ்வுவமையில், உபமானம் முதலாக நான்கும் விரிந்திருத்தலால், இது, **விரியுவமை** எனப்படும்.

இந் நான்களுள் ஒன்றே பலவோ தொக்கு நிற்பின், **தொகை யுவமை** ஆகும்.

பால்போல்மொழி — பொதுத்தன்மை தொக்கது.
பால்மொழி — உவமவுருபும் பொதுத்தன்மையும் தொக்கன.

2. எடுத்துக்காட்டுவமையணி (திருஷ்டாந்த அலங்காரம்): உபமான வாக்கியத்தையும் உபமேய வாக்கியத்தையும் வேறு வேறாக நிறுத்தி, உவமையுருபு கொடாமல் கூறுவது.

'அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.'

இதில், எழுத்தெல்லாம் என்றதன்பின் அதுபோல என்னும் சுட்டடுத்த உவமவுருபு இல்லாதிருத்தல் காண்க.

3. இல்பொருளுவமையணி (அபூத உவமை): உலகத்தில் இல்லாத பொருளை உவமையாகக் கூறுவது.

'இருகை வேழத் திராகவன் தன்கதை'

இரு கைகளையுடைய வேழம் உலகில் இல்லாமையால், இஃது இல்பொருளுவமை யாயிற்று.

†4. உருவக அணி (ரூபக அலங்காரம்): உபமானத்திற்கும், உபமேயத்திற்கும் உள்ள வேற்றுமை கருதாது, அவற்றை ஒன்றே எனக் கூறுவது.

'அங்கைத் தளிரும் அடிமலரும் வாய்த்துகிரும்'

இதில், அகங்கையையே தளிராகவும், அடியையே மலராகவும், வாயையே துகிராகவும் கூறியிருத்தல் காண்க.

[துகிர் - பவளம்.]

†5. தற்குறிப்பேற்ற அணி (உத்ப்ரேக்ஷா அலங்காரம்): இயற்கையாக உள்ளதொரு பொருளினிடத்துக் கவி தனது கற்பனையை ஏற்றிக் கூறுவது.

'மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளே நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனே ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா.

இங்கு, கொடியாடுவதை மிதிலையாகிய பெண், சீராமனைத் தன் கைகளே நீட்டி ஒல்லைவாவென்று அழைப்பது போன்றது எனக் கவி கற்பித்தலால் தற்குறிப்பேற்ற அணி யாயிற்று.

†6. உயர்வு நவிற்சி யணி (அதிசயோக்தி அலங்காரம்) : ஒரு பொருளை, அதற்குள்ள தன்மையினும் மிகுத்துப்படுத்திக் கூறுவது.

'வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம்.'

மாடம், கொண்டலை விட்டு மதியை முட்டுவனவாக உயர்த்திக் கூறியது காண்க.

†7. ஐயவணி (சந்தேக அலங்காரம்) : இதுவோ அதுவோ என ஒரு பொருளைப்பற்றி ஐயம் அடைவது.

'பாரணங் கோதிருப் பாற்கட லீன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங்கோ'

என்றாற்போல வருவது.

8. வேற்றுமையணி (வ்யதிரேக அலங்காரம்): உபமான உபமேயங்களுள் ஒன்றற்குச் சிறப்புக் கூறுதல்.

'அங்கண் விசும்பில் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் — திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றூர் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.'

இதில், சான்றோரையும் திங்களையும் ஒப்பாகக் கூறி, பின், சான்றோரைச் சிறப்பித்துக் கூறியிருத்தல் காண்க.

9. வேற்றுப்பொருள் வைப்பணி (அர்த்தாந்தரன்யாச அலங்காரம்) : பொதுப் பொருளாற் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளாற் பொதுப்பொருளையும் பெறவைத்தல்.

'வாழ்வினே நுதலிய மங்க லத்துகாள்
தாழ்வினே யதுவரச் சீரை சாத்திஞன்
சூழ்வினே நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினே யொருவரால் ஒழிக்கற் பாலதோ.'

இதில், ஈற்றடி, சிறப்புப்பொருளைப் பொதுப் பொருளாற் பெற வைத்தது.

†10. தன்மை நவிற்சியணி (ஸ்பாவோக்தி அலங்காரம்) : ஒரு பொருளின் தன்மையை யுள்ளபடி சமத்காரம் தோன்றக் கூறுதல்.

'தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளே வாய்விட் டரற்றவும்
தேயும் துண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்.'

11. பிறிதினவிற்சியணி (பர்யாயோக்தி அலங்காரம்): ஒரு பொருளே இயல்பாகக் கூறுமல் மற்றொரு வகையாற் கூறுதல்.

'மேனுளம் உரிமையறக் கவர்ந்தபெருந் தினேவனுனே
வெரூத வண்ணம்
வானுள வானவர்கோன் தன்பதமற் றவன்தனக்கே
வழங்குவேனே'

இதில், கொல்வேன் என்னுது, வானவர்கோன் பதம் வழங்குவேன் என்றது காண்க.

12. வஞ்சப் புகழ்ச்சியணி (வ்யாஜஸ்துதி அலங்காரம்): பழிப்பதுபோலப் புகழ்வதும் புகழ்வதுபோலப் பழித்தலும் ஆம்.

'வெங்கொடியோர் தங்கட்கும் மேற்கதியை யீகின்ற
கங்கைக்குப் புத்தியுண்டோ காண்.

இது, பழித்ததுபோலப் புகழ்ந்தது.

'குருத்துரோகம் செய்யலாகாது என்று, அவர்பாற்பெற்ற
கல்வியை அவரிடத்திலேயே ஒப்பித்து விட்டான்'

என்பது, புகழ்வதுபோலப் பழித்தது.

13. நிரனிறையணி (யதாஸங்க்யா அலங்காரம்): முறையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்கு இயைபுள்ள வற்றையும் அம் முறையே இயைத்துக் கூறுவது.

பூங்கடல் வண்ணன் நிலைகிடை வந்தது போக்கிருப்பு
வேங்கடம் வேலை அயோத்திவெங் கானகம் விண்ணுலகே.

இதில், நிலை-வேங்கடம்; கிடை-வேலை; வந்தது-அயோத்தி; போக்கு-வெங்கானம்; இருப்பு - விண்ணுலகு என முறையே காண்க.

14. எதிர்நிலையணி (பிரதீப அலங்காரம்): சிறந்த உபமானத்தை உபமேயமாகவும், உபமேயத்தை உபமானமாகவும் மாற்றிக் கூறுவது.

தையல்நின் ஒண்முகம்போல் தாமரையின் பூவலரும்
செய்யவாய் போலும் செழும்பவளம் — ஐய
இடைபோலும் நூலின் இழைவகிர்தான் நின்றன்
நடைபோலும் அன்ன நடை.

தாமரையின் பூ முகத்திற்கும், செழும்பவளம் வாய்க்கும், நூலின் இழைவகிர் இடைக்கும், அன்னநடை நடைக்கும் உபமானமாக வேண்டியிருக்க, இங்கே அவற்றை மாற்றிக் கூறியது காண்க.

15. கருத்துடை அடைமொழி யணி (பரிகர அலங்காரம்) : கருத்தோடு கூடிய அடை மொழியைச் சொல்லுதல்.

'சந்திரகலையைச் சூடிய சிவபெருமான், தாபத்தைப் போக்குவான்' என்பது.

இதில், 'சந்திரகலையைச் சூடிய' என்னும் அடை மொழி, கருத்துடை அடைமொழியாதல் அறிக.

இனி, ஒரு பாட்டில் பல அணிகள் கலந்து வருதல் உண்டு. அவை எள்ளும் அரிசியும் போல வேறுபாடு விளக்கக்கூடியனவா யிருப்பின் சேர்வையணி (ஸம்ஸ்ருஷ்டி அலங்காரம்) எனப்படும்; பாலும் நீரும் போல வேறுபாடு விளங்காது, ஒன்றற்கு மற்றது உறுப்பாய் நிற்பின் கலவையணி (ஸங்கர அலங்காரம்) எனப்படும். இவ் வணிகளின் விரிவை, தண்டியலங்காரம் முதலான நூல்களிற் கண்டு கொள்க.

Printed at the Caxton Press, Madras — 1932.